கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

**உங்கள் நூலகம்**

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 13 இதழ் - 10 - ஜனவரி 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1
படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

2
18ஆம் நூற்றாண்டில் பள்ளிகளில்
தமிழில் ஐரோப்பிய அறிவியல்
டாக்டர். சு.நரேந்திரன்........................................ 11

3
மக்களாட்சி என்பது தற்காலங்களில்
சடங்குகளின் தொகுப்பாகவே உள்ளது
தாரிக் அலி........................................ 17

4
பழந்தமிழ் இலக்கியங்கள் மறுவாசிப்பு
ந.முத்துமோகன்........................................ 29

5
தோட்டத் தொழிலாளர்
இடப்பெயர்வும் இருப்பும்: இலக்கிய சாட்சி
இரா.காமராசு........................................ 33

6
மோரியர்
ஆ.கார்த்திகேயன்........................................ 43

7
கிராமிய மேம்பாட்டுக்கான புதிய பாதை
க.பழனித்துரை........................................ 45

8
சிலப்பதிகாரமும் கேரளக் கண்ணகி தொடர்பும்
அ.கா.பெருமாள்........................................ 51

9
பெரியாரின் பார்வையில் சூத்திரர்,
பஞ்சமர் நலமே தொழிலாளர்கள் நலம்
முனைவர் க.கிருஷ்ணமூர்த்தி........................................ 55

10
இஸ்லாமிய இலக்கியம் ஒரு கண்ணோட்டம்
உதயை மு.வீரையன்........................................ 61

11
அகாதெமி விருதுபெறும் அம்பை :
சன்னலில் இளைப்பாறும் பறவை
வீரபாண்டியன்........................................ 65

12
உள்ளங் கையில் உலகம்
ச.சுபாஷ் சந்திரபோஸ்........................................ 69

அஞ்சலி

# ஒரு கிறிஸ்துவ கம்யூனிஸ்ட்

## ஆர்.நல்லகண்ணு

“புளிய மிளாரினால் வாத்தியாரை அடித்தபோது இரத்தம் சுவரில் கொட்டியது. ‘இது என்ன...’ என்று ஏட்டு சுப்பையா கேட்டான். வாத்தியார் சொன்னார், “அது என் இரத்தம். இதைத்தான் உன்னால் வாங்கமுடியுமே தவிர வாயிலிருந்து வார்த்தையை வாங்கமுடியாது’ என்றார்.”

நெல்லை சதி வழக்கில் நீண்ட காலம் சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் ஆர்.எஸ்.ஜேக்கப் வாத்தியார் மறைந்தார்...

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக இயங்கிய 1948-50களில் நெல்லை சதி வழக்கு போடப்பட்டது. எனது பால்ய கால நண்பரும், எழுத்தாளருமான ஜேக்கப் வாத்தியார் அவர்களின் திடீர் மறைவு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. நெல்லை சதி வழக்கில் இப்போது இருப்பவர்கள் நானும் அவரும் தான்.

ஒரு கிராமப்புற பள்ளிக்கூடத்தின் உறுதிமிக்க கிறிஸ்துவ ஆன்மீகவாதியாக, ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்கள் மீதும் சதி வழக்கு பாய்ந்தது.

கடுமையான சித்திரவதை கொடுமையிலும், கம்யூனிஸ்ட்டுகளை காட்டிக் கொடுக்க மறுத்துவிட்டதோடு, அவர் கைது செய்யப்பட்டு மூன்றாண்டு காலம் சிறையில் வாடினார். காவல்துறையினர் கடுமையாக அவரை தாக்கிவிட்டு "கட்சிக்காரர்கள் கொள்கைப்பிடிப்போடு இருந்து காட்டிக் கொடுக்க மறுப்பார்கள், நீ ஏன் காட்டிக் கொடுக்க மறுக்கிறாய்" என்று கேட்ட போது, ஜேக்கப் வாத்தியார் அவர்கள், "நான் ஜூலியஸ் பூசிக் எழுதிய தூக்குமேடை குறிப்புகள் நூல் படித்தேன். அதனால்தான் இந்த உறுதியைப் பெற்றேன்" என்று மறுமொழி கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது தாயாரும், மனைவியும் எப்போதும் கட்சிக்கு ஆதரவாகவே இருந்து வந்தனர். நாங்கள் அடிக்கடி அவரது இல்லத்திற்குச் செல்கிறபோது, இன்முகத்தோடு அவர்கள் பழகி இருக்கிறார்கள்.

வாத்தியார் உபதேசியாகவும் ஆன்மீகவாதியாகவும் நல்ல சமூக சிந்தனை உள்ளவராகவும் சமத்துவ வாதியாகவும் வாழ்ந்தார்.

மரண தண்டனையையே சந்திக்க நேர்ந்தபோதிலும் சிறிதும் மனம் கலங்காமல் தன்னுடைய நிலையில் உறுதியாக நின்று ஒரு கிறிஸ்துவ கம்யூனிஸ்டாக இறுதி வரை வாழ்ந்தவர் ஆசிரியர் ஆர்.எஸ்.ஜேக்கப்.

பகிர்வு

படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# காலத்தை வென்ற மாவீரர்கள்

**நா.வானமாமலை (2010)**
**தமிழக நாட்டார் படைப்புகளைப் பொருள் கொள்ளுதல்**
*N.Vanamamalai(2010)*
*Interpretation of Tamil Folk creations. New Century Book House (P) Ltd chennai-600 098*

தமிழகத்தின் நாட்டார் வழக்காறுகளை இரசனைக்குரிய ஒன்றாக மட்டுமே பார்க்கும் பார்வையில் இருந்து விடுவித்து சமூக வரலாற்றுப் பார்வைக்கு அவற்றை உட்படுத்தியவர்களில் நா.வானமாமலைக்கு சிறப்பான இடம் உண்டு. அவரது மார்க்சியப் புலமை இதில் பெரும் பங்காற்றியுள்ளது.

நாட்டார் கதைப்பாடல்களில் ஆர்வம் கொண்டு 1961இல் கட்டபொம்மன் கதைப்பாடலையும் 1967இல் ஐவர் ராசாக்கள் கதைப்பாடலில் கிளைக் கதையாக இடம் பெற்றுள்ள 'வீணாதிவீணன் கதை' என்ற கதைப்பாடலையும் நா. வானமாமலை வெளியிட்டார். இதன் தொடர்ச்சியாக ஆறு கதைப்பாடல்களை மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் வாயிலாகப் பதிப்பித்து 1971-1972 காலகட்டத்தில் வெளியிட்டார்.

அவரது இப் பதிப்புப் பணிகளின் வளர்ச்சி நிலையாகத் தமிழக நாட்டார் கதைப்பாடல்கள் குறித்த ஆய்வுகள் அமைந்தன.

முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அவர் வழங்கிய இரு கட்டுரைகளும் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் அவர் வழங்கிய கட்டுரையும் நாட்டார் வழக்காற்றியல் அறிவுப்புலம் சார்ந்தவைதான். நாட்டார் வழக்காற்றியல் அறிவுப்புலத்தில் அவர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்த ஆழமான பங்களிப்பின் காரணமாக முனைவர் வ.அய். சுப்பிரமணியம் தாம் உருவாக்கிய திராவிட மொழியியல் கழகத்தில் நாட்டார் வழக்காற்றியல் துறையின் முதுநிலை ஆய்வாளராக 1975-76 ஆவது ஆண்டிற்கு நியமித்தார்.

இப் பணியை மேற்கொண்டு அவர் எழுதிய ஆய்வுநூலே இங்கு அறிமுகமாகிறது.

**நூலின் அமைப்பு:**

2010இல் வெளியான இந்நூலின் திருத்திய பதிப்பில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வியல்களின் தலைப்புகள் வருமாறு:

(1) மழையும் நாட்டார் வழக்காற்றியலும்
(2) பெண்ணும் செழிப்பும்
(3) நாட்டார் வழக்காறுகளில் பெண்
(4) மாவீரர்களின் வகை




(5) வரலாற்றுக் கதைப் பாடல்கள்
(6) தற்கொலை மற்றும் கொலை குறித்த கதைப்பாடல்கள்.

ஒரு சிறிய கட்டுரையில் இவ் ஆறு இயல்களையும் முழுமையாக அறிமுகம் செய்ய இயலாது என்பதால் நான்காவது இயல்வழி நாட்டார் மாவீரர் குறித்து அவர் முன்வைக்கும் செய்திகள் மட்டுமே இங்கு அறிமுகம் செய்யப்படுகின்றன. இந் நான்காவது இயல் தமிழக நாட்டார் கதைப் பாடல்களிலும் கடவுள் வழிபாட்டிலும் இடம் பெறும் மாவீரர்களைக் குறித்த ஆய்வாகும்.

ஆங்கில நூல் என்பதால் இவர் ஹீரோ என்ற ஆங்கிலச் சொல்லையே இவ் இயலில் பயன் படுத்தியுள்ளார். இச்சொல்லுக்கு இணையான சொல்லாக மாவீரன் என்ற சொல் இக் கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மாவீரன்**

வீரன் என்ற சொல் பொதுவாகப் போர் ஆற்றல் மிக்கவனையும் அச்சமின்றி போர் செய்பவனையும் குறிப்பதாகும். இதன் அடிப்படையில் ஒரு படை அணியில் இடம் பெற்றுள்ள போர் புரிவோரைக் குறிப்பதாக வீரன் என்ற சொல் அமைகிறது. திவாகர நிகண்டு (2:108)படைத் தலைவன், என்றும் பொருள் உரைக்கிறது,

ஹீரோ (Hero) என்ற ஆங்கிலச்சொல் படைவீரனை மட்டுமின்றி, காவிய அல்லது நாடகத் தலைவனைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்குகிறது. நா.வா. தம் ஆய்வேட்டில் ஹீரோ என்ற ஆங்கிலச் சொல்லை சற்று ஆழமான பொருளிலேயே பயன்படுத்தி உள்ளார். ஹீரோ என்ற ஆங்கிலச்சொல்லுக்கு ‘வீரதீரச் செயலுக்காகவோ நற்செயலுக்காகவோ பலரால் போற்றப்படும் மனிதன், இவன் பெரும்பாலும் ஓர் ஆணாக இருப்பான்’ (‘a person especially a man,who is admired by many people for doing brave or good.)என்று ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி (New Oxford Advanced Learner’s Dictionary (7th edition) விளக்கம் தெரிகிறது.

தமது நூலில் அவர் அறிமுகம் செய்யும் நாட்டார் வீரர்கள் (Folk Heros) இத்தகைய இயல்புடையோர்தான். இதன் அடிப்படையில் வீரன் என்ற சொல்லை விட மாவீரன் என்ற சொல்லே ஏற்புடைத்து என்ற முடிவுக்கு வர நேரிட்டது. (இது விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கலைச்சொல்லாகும்).

**மாவீரரை வகைப்படுத்தல்:**

கதைப்பாடல்கள் என்பன நாட்டார் மரபு சார்ந்தும் இலக்கிய மரபு சார்ந்தும் வெளியாகி

“

*தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பெரும்பாலான நாட்டார் ஆண் கடவுளர்கள் மாவீரர்களாக உண்மையில் வாழ்ந்து கொலையுண்டு மடிந்து போனவர்கள்தாம்.*

”

உள்ளன. இவ்விரு மரபு சார்ந்த கதைப் பாடல்களிலும் கதைப்பாடல் தலைவன் ஒருவன் இடம் பெற்றிருப்பான். புராணங்களும் பழமரபுக் கதைகளும் காவியங்களுக்கு முந்தியவை என்ற ஊகத்துடன் இவ்விரு வகைமைகளிலும் இடம் பெறும் மாவீரர்களை அவர் ஆராய்ந்துள்ளார். இம் முயற்சியில் பௌரா என்பவர் மாவீரர்களுக்கு வழங்கியுள்ள இருபத்தியெட்டு வரையறைகளை இந்திய மாவீரர்களுக்குப் பொருத்திப் பார்த்துள்ளார். இம் முயற்சியில் இந்தியக் காவிய வீரர்களை தெய்வீகப் பிறவிகள், இயல்பான பிறவிகள் என இரண்டாகப் பகுத்துக் கொண்டுள்ளார். இப் பகுப்பின் அடிப்படையில் பீமன், அனுமன் ஆகிய இருவரையும் ஆய்வு செய்து இரும்புக் காலத்திற்கு முந்தைய மாவீரர் குண இயல்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார். இது போன்றே இராமர், கிருஷ்ணர், அர்ச்சுனன் ஆகியோரையும் ஒப்பீடு செய்துள்ளார்

இராமர் போராற்றல் படைத்தவராகவும் மேட்டிமை (elite) பிரிவைச் சேர்ந்தவராகவும் விளங்க கிருஷ்ணர் இவரைப் போலன்றி மாவீரர்களுக்கு அறிவுரை கூறுபவராக மட்டுமே காட்சி தருவதைச் சுட்டிக் காட்டுகிறார். இவ் ஒப்பீடுகள் மேற்கத்திய நாட்டின் பௌரா, ராக்லன் ஆகியோர் வகைப்படுத்தும் மாவீரர்கள் குறித்த பகுப்பிற்கு ஓர் எல்லை உண்டு என்பதை வெளிப்படுத்துகின்றன.

**காவியத் தலைவன்:**

காவியங்களின் தலைவனாக மாவீரன் ஒருவன் இடம் பெறுவது ஒரு மரபாகும். காவிய மாவீரனின் பொதுவான குண இயல்புகளாக சி.எம். பௌராவின் நூலில் (*Heroic poetry*) இருந்து இருபத்தெட்டு வரையறைகளை நா.வா. வரிசைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ராக்லன் (*The Hero:A study in Tradition, Myth and Drama*), கேம்பெல், ஹான் ஆகியோரின் வரையறைகளுடன் இவை ஒத்திருப்பதாகவும் உலகளாவிய முறையிலானது என்றும் கூறியுள்ளார். மகாபாரதம், சீவகசிந்தாமணி ஆகியன பௌரா, ராக்லன் ஆகியோர் வரையறுத்துள்ள மாவீரன் வரையறைக்குள் அடங்குவதாகவும் சுட்டியுள்ளார்.

மேலும் பௌரா, ராக்லன் இருவரும் மேலை நாட்டு மாவீரர் குறித்து உருவாக்கியுள்ள நாட்டார் மாவீரர் குறித்த வரையறையானது மேட்டிமையோர் கண்ணோட்டத்தில் உருவானது என்று மதிப்பிட்டுள்ளார். ராக்லன் குறிப்பிடும் செவ்வியல் மாவீரர்கள் (Classical Heroes) எந்த ஒரு பண்பாட்டிலும் நிலவும் வீரயுகத்திற்குப் பொருந்திவருபவர்கள் என்பது அவரது கருத்தாக உள்ளது.

**நாட்டார் மாவீரர்கள்:**

நாட்டார் மாவீரர்களை (அ) உள்ளூர் மாவீரர்கள், (*Local Heroes*) (ஆ) மேட்டிமையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேசிய வீரர்களான நாட்டார் மாவீரர்கள் (*National Folk Heroes*), (இ) நாட்டாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேட்டிமை மாவீரர்கள் (*Elite Heroes*) என மூன்று வகையாக இவர் பகுத்துள்ளார். இவ்வாறு பகுத்துக்

கொண்டுள்ளதை அடுத்து வீரயுகக் காவியங்களில் இடம் பெறும் மாவீரர்களின் பொதுப்பண்புகளாக பௌரா குறிப்பிடும் இருபத்தியெட்டு பண்புகளைத் தொகுத்துரைத்துள்ளார். அவற்றுள் முக்கியமான சில பண்புகள் வருமாறு:

- ஏனைய மனிதர்களைவிட ஆற்றல் மிகுந்தவனாக இருப்பான்.
- உடல் வலிமை கொண்டவனாகவும் புதிய போர்க் கருவிகளைக் கையாளும் ஆற்றல் கொண்டவனாகவும் இருப்பான்.
- மந்திர ஆற்றலில் இருந்து ஓரளவுக்கோ முழுமையாகவோ விலகிநின்று மந்திர ஆற்றலுக்கு எதிராக மனித ஆற்றலைப் பயன்படுத்துபவனாக இருப்பான்.
- மாபெரும் வீரர்கள் என்போர் போர் ஆற்றல் படைத்தோராகவே இருப்பர்.
- சிங்கம், புலி, கழுகு, கரடி என்பனவற்றுடன் ஒப்பிடப்படுவார்கள்.
- அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராக ஒவ்வொரு குடிமகனும் மாவீரனாக மாறுவான்.

பௌரா குறிப்பிடும் இத்தகைய பண்புகள் கொண்ட காவிய வீரர்களை ஒத்தவர்களாகவே ராக்லன் காம்பெல், ஹான் ஆகியோர் குறிப்பிடும் மாவீரர்கள் உள்ளார்கள் என்று நா.வா. குறிப்பிடுகிறார். அதே போழ்து ஒரு மாவீரனின் தாய் அரசகுடிப் பிறப்புடைய கன்னியாகவும் தந்தை மன்னனாகவும் இருப்பான். அவன் ஓர் இளவரசியை மணம் செய்து கொள்வான், தந்தையை அடுத்து மன்னனாகப் பொறுப்பேற்பான் என்று ராக்லன் குறிப்பிடுவார். ஆனால் பௌரா, மாவீரனுக்கு அரசகுடிப் பிறப்பை வலியுறுத்தவில்லை. இருப்பினும் மாவீரனுக்குரிய அடையாளங்களாக அவர் குறிப்பிடும் பண்புத்திறன்கள் அரசகுடிப் பிறப்பைச் சார்ந்தனவாகவே உள்ளன என்று நா. வா. குறிப்பிடுகிறார். இதன் தொடர்ச்சியாக தேவதைக் கதைகளில் இடம் பெறும் கதைத் தலைவன் இயற்கை கடந்த (MiraCulous)பிறப்பை உடையவனாகவும், ஓர் இனக்குழுவின் மாவீரன் அக்குழுவின் பண்பாட்டு மாவீரனாகவும் அடையாளப்படுத்தப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்து இராமன் கிருஷ்ணன் என்ற இரு கடவுளர்களிடம் காணப்படும் மாவீரன் கூறுகளை ஒப்பிட்டு விளக்கியுள்ளார். ஷத்திரிய பரம்பரையின் மாவீரனாக இராமனையும் மேய்ச்சல் நில வாழ்க்கையை மேற்கொண்ட ஓர் இனக்குழுவின் மாவீரனாக கிருஷ்ணரையும் அவர் அடையாளப் படுத்தி உள்ளார்.

தமிழக நாட்டார் மாவீரர்கள் குறித்து அவர் மேற்கொண்ட ஆய்வானது (1) முத்துப்பட்டன் (2) சின்னத்தம்பி (3) சின்னநாடான் (4)கௌதல மாடன் ஆகிய நால்வரை மையமாகக் கொண்டுள்ளது. தம் ஆய்விற்கான அடிப்படைச் சான்றுகளாகக் கதைப்பாடல்களையும் வாய்மொழி வழக்காறுகளையும் கொண்டுள்ளார். அத்துடன் ஒப்பீட்டு நோக்கிலான ஆய்விற்காக ஹனுமா, சிஞ்சூரா லட்சுமணா, சங்குலி ராயன்னா, என்ற மூன்று கன்னடக் கதைப் பாடல்களையும் கத்தியவூர் வீரன் என்ற மலையாளக் கதைப் பாடலையும் பயன்படுத்தியுள்ளார்.

**முத்துப்பட்டன்:**

முத்துப்பட்டன் என்ற பிராமண இளைஞன் வாலப்பகடை என்ற அருந்ததியரின் இரு மகள்களைத் திருமணம் செய்து அவர்களுடன் வாழ்கிறான். அவர்களது பாதுகாப்பில் இருந்த மாடுகளைக் கவர்ந்து செல்ல வந்தவர்களுடன் நிகழ்த்திய போரில் இறந்து போகிறான். பின்னர் சொறிமுத்தையன் என்ற நாட்டார் தெய்வத்தின் பாதுகாவலனாக மாறி பட்டவராயன் என்ற பெயரில் கடவுளாக வணங்கப்படுகிறான். இதுவே முத்துப்பட்டன் கதைப்பாடல் கூறும் செய்தியாகும். இக் கதைப் பாடலை 1971ஆவது ஆண்டில் அவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இதன் பதிப்புரையிலும் இந்நூலிலும் இக் கதையின் களமான அம்பாசமுத்திரம் பகுதியில் வாழ்ந்த பிராமணர்கள், வேளாளர்களின் தூண்டுதலால் இக் கதைப்பாடலில் செய்யப்பட்ட மாறுதல்களையும் அவை மூலக்கதையின் உண்மைத் தன்மையைத் திசைமாற்றியதையும் தம் கள ஆயவின் வழி வெளிப்படுத்தி உள்ளார்.

மாவீரன் குறித்த பௌராவின் வரையறைகளில் இருந்து முத்துப்பட்டன் என்ற நாட்டார் மாவீரன் விலகி தனித்துவமான அடையாளத்துடன் விளங்குவதை அவர் அட்டவணை வாயிலாக விளக்கியுள்ளார். இது போன்றே சின்னத்தம்பி, சின்னநாடான், கௌதல மாடன் ஆகிய நாட்டார் மாவீரர்கள், மாவீரர் குறித்த மேலை நாட்டு அறிஞர்களின் வரையறைகளில் இருந்து விலகி தனித்துவமான அடையாளத்துடன் நிற்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். இந்த இடத்தில் அவர் நடத்திவந்த **ஆராய்ச்சி** காலாண்டு ஆய்விதழில் (தொகுதி4 இதழ்:3) 'மொழியல்லாத நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளைப் பொருள் கொள்ளும் முறை' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் இடம் பெற்றுள்ள பின்வரும் தொடர்களை மேற்கோளாகக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்:

'அந்நிய முன்னோடிகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்வது தவறு என்று கூற முடியாது. ஆனால் அவர்களுடைய கருத்துக்களையும் ஆய்வு முறைகளையும் முழுமையாகக் கடன் பெறுவது நமது ஆராய்ச்சியை வறண்டதாகவும் பயனற்றதாகவும் ஆக்கிவிடும்...

அவர்களுடைய முறையியலிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை பல இருந்தபோதிலும் அவர்களுடைய முறையியலையும் கருத்துக்களையும் நாம் முழுமையாக நம்முடைய பண்பாட்டுப் பொருள்களுக்கும் நிலைமைகளுக்கும் யாந்திரீகமாகப் பொருத்திவிட முடியாது.'

**வட்டார மாவீரர்கள்:**

தமிழ் நாட்டின் நாட்டார் மாவீரர்கள் மிகப் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வட்டார எல்லைக்குள் மட்டுமே அறிமுகமானவர்களாக இருக்கிறார்கள். இது குறித்தும் நா.வா. விவாதித்துள்ளார். அவரது கருத்துப்படி அனைத்து 'தர்மசாஸ்திரங்களும்' மரபுகளும் சமூகப் படிநிலையில் சாதிய விலக்குகளுக்கு *(Taboo)* கீழ்ப்படிதலை வலியுறுத்துகின்றன. இதை ஏற்றுக் கொள்ளாதோரும், பின்பற்றாதோரும் சமூகவிலக்குக்கும் உயிர்க்கொலைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். நாட்டார் மாவீரர்கள் தர்மசாஸ்திர நெறிகளுக்கு எதிர் நிலைப்பாட்டை மேற்கொள்பவர்கள் இதனால் இவர்களது செயல்பாடுகளை மையமாகக் கொண்டு உருவாகும் வாய்மொழி வழக்காறுகள் கற்றறிந்த மேட்டிமையோரால் எழுத்தாவணமாக்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்கள் உயர் சாதிக் குழுக்களுக்கும், ஆளுவோருக்கும் பணி செய்வதையே தம் கடப்பாடாகக் கொண்டவர்கள். இவர்கள் மாவீரர்களின் எதிர்க்குரலை மழுங்கடித்து விடுவார்கள். இவ்வாறு மழுங்கடிக்கப்பட்ட பனுவல்கள் பரவும்போது மூலப் பனுவலானது அது தோன்றிய இடத்திலேயே நிலைத்திருக்கும். இதனால் நாட்டார் மாவீரர்கள் ஒரு குறிப்பிட்ட வட்டார எல்லைக்குள்ளேயே ஒடுங்கிப் போய்விடுகிறார்கள்.

**மாவீரனில் இருந்து கடவுள் நிலைக்கு:**

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பெரும்பாலான நாட்டார் ஆண் கடவுளர்கள் மாவீரர்களாக உண்மையில் வாழ்ந்து கொலையுண்டு மடிந்து போனவர்கள்தாம். இக் கடவுளர்களும் வட்டார எல்லைக்குள்ளாகவே வழிபடப்படுகிறார்கள். சான்றாக முத்துப்பட்டன், மதுரை வீரன், காத்தவராயன், அண்ணன்மார் சாமி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இந் நூலின் இறுதியில் ஒவ்வொரு இயலிலும் இடம் பெற்றுள்ள செய்திகளை நா.வா. தொகுத்துக் கூறியுள்ளார். அவ்வகையில் இதுவரை நாம் பார்த்த 'மாவீரர்களின் வகை மாதிரி' *(Models of Heroes)* என்ற ஐந்தாவது இயலில் தாம் கூறிய செய்திகளைத் தொகுத்தளித்துள்ளார். இச் செய்திகளின் சுருக்கம் வருமாறு:

இவ்வியலில் தமிழ்ச் சமூகத்தில் மாவீரர் வழிபாட்டின் கருத்தியல் தொடக்கங்களை விரிவாக விவாதித்துள்ளேன். இவர்களின் குண இயல்புகள் குறித்த புகழ் பெற்ற பௌரா-ராக்லன் கோட்பாட்டை ஆய்வுக்கு உட்படுத்துவதில் இருந்து இந்த இயல் தொடங்குகிறது. இது ஒரு சரியான தொடக்கப் புள்ளி. ஏன் எனில் மேற்கத்திய ஆய்வாளர்களின் சார்பு நிலையை இது தெளிவாகக் காட்டுகிறது. இந்திய மாவீரர்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டு மாவீரர்கள் பௌரா, ராக்லன் வகைமையில் இருந்து பெரிதும் வேறுபடுகின்றனர். இந்த வேறுபாடுகளை வகைப்படுத்தி விளக்கியுள்ளேன்.

இந்தியச் சூழலில் மாவீரன் என்ற நிலைக்கும் கடவுள் நிலைக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. இதனால் இவை இரண்டுக்கும் இடையிலான படிநிலைகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. உள்ளூர் மாவீரன் என்ற அடிப்படை நிலையில் தொடங்கி கடவுள் என்ற உயர் நிலைக்குச் செல்லும் படிநிலைகள் இவை. ஒருசில சமூக மற்றும் சமூக உளவியல் தன்மைகள் ஓர் உள்ளூர் மாவீரனைக் கடவுள் நிலைக்கு உயர்த்தலாம். இத் தன்மைகளும் இங்கே விளக்கப்பட்டுள்ளன.

ஒரு சமூகம் எப்படி ஒரு தனிமனிதனை மாவீரனாகப் பார்க்கிறது என்பதைக் கொண்டு அதன் அடிப்படைத் தன்மையைப் புரிந்து கொள்ளலாம். அத்துடன் ஒரு சமூகம் எப்படிப்பட்டவரை மாவீரனாகக் கருதுகிறது என்பதை வைத்து, அதன் இயல்பையும் அதன் அடையாளத்தையும் புரிந்து கொள்ளலாம். எனவேதான் இந்த ஆய்வின் பெரும் பகுதியை இதற்கு ஒதுக்கி உள்ளேன்.

ஏனைய நாட்டார் செயல்பாடுகளிலும் நம்பிக்கைகளிலும் காணப்படுவது போன்று இதிலும் மாவீரனுக்கும் கடவுளுக்கும் ஊடாகக் கலப்பு உள்ளது. எனவே இவ்விரண்டையும் பிரித்து அடையாளம் காணவேண்டியது அவசியமாகிறது.

இன்றையச் சூழலில் ஒரு நாட்டார் வழக்காற்றியலர் உலகளாவிய பொதுப் பண்புகளைக் குறித்துக் கவலை கொள்ளாது ஒரு வழக்காற்றின் தனிப்பண்புகளை அடையாளம் காண்பதிலும் அதை விவரிப்பதிலும் கவனம் கொள்ளவேண்டும்.

**ஒரு வழக்காறு அதன் சமூகப் பண்பாட்டுத் தளத்துடன் இணைந்தே இருக்கும் என்ற அடிப்படை வாதத்தை இது உறுதி செய்கிறது.***(அழுத்தம் எமது))*.

உள்ளூர் மாவீரனின் குண இயல்புகள், வீரம், செயல்பாடுகள், வகைகள், சமூகச் செயல்பாடுகள் மற்றும் படிநிலைகள் என்பன உலகப் பொது வகைமையுடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இந்து சமயச் சூழலில் மாவீரர்கள் வழிபாடு எளிதில் சடங்குகளுக்கு ஆட்பட்டு உள்ளூர் மாவீரனை கடவுள் நிலைக்கு உயர்த்திவிடும்.

■

அஞ்சலி

# ஈழத் தமிழிலக்கிய முன்னோடி



“ படைப்பாளிகள் சமூகத்தின் ஒரு பகுதிதான். சமூகத்தில்தான் வாழ்கிறான். சமூக நிகழ்வுகளின் பாதிப்புகள் இவர்களது படைப்புகளில் வெளிப்படுகின்றன. கலை, இலக்கியப் படைப்புகள் மக்களின் மனத்தை உழுது பண்படுத்தி வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் கடமையைச் செய்ய வேண்டும். ”

மார்க்சிய அறிஞரும் முற்போக்கு எழுத்தாளருமான செ.கணேசலிங்கன் மறைவுக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்‘ அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஈழ இலக்கியத்தின் ஆகச்சிறந்த ஆளுமையாக விளங்கிய செ.கணேசலிங்கன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள், சிறுகதைகள், சிறார் இலக்கிய நூல்களென ஏறத்தாழ 150 நூல்களை எழுதியவர்.

‘குமரன்‘ எனும் இதழின் ஆசிரியராக விளங்கியதோடு குமரன் பதிப்பகம் என்ற பெயரில் ஈழத்து முன்னணி எழுத்தாளர்கள் பலரின் நூல்களையும் பதிப்பித்து வெளிட்டு வந்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1949 ஆம் ஆண்டு இந்திய அரசால் தடை செய்யப்பட்டதுபோது தமிழகத்திலிருந்து தோழர் ப.ஜீவானந்தம் தோணி மூலம் கோடியக்கரை வழியாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். செ.கணேசலிங்கன் அவரை அழைத்துக்கொண்டு உரும்பிராய் கிராமத்திற்குச் சென்றார். அக்கிராமத்தில் தீண்டாமை ஒழிப்பு குறித்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் நடந்த கூட்டத்தில் ப. ஜீவானந்தம் உரையாற்றினார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கார்த்திகேயனின் தொடர்பு செ.கணேசலிங்கனை மார்க்சிஸ்ட் சிந்தனையுடையவராக்கியது. மார்க்சிய பொருள்முதல்வாத சிந்தனையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். மார்க்சிய தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு கற்றறிந்தார்.

செ.கணேசலிங்கனின் படைப்புகள் வர்க்கப் பிரச்சனைகள் குறித்தும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் கொடுமைகள், அடக்குமுறைகள் குறித்தும் விவரிப்பனவாக விளங்குவன. பெண்கள் சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்படும் நிலையை, பொருளாதார ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் பல்வேறு சுரண்டல்களுக்கு ஆட்படுகிற நிலையை இவரது சிறுகதைகள் வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை.

கட்டுரை

# 18–ஆம் நூற்றாண்டில் பள்ளிகளில் தமிழில் ஐரோப்பிய அறிவியல்



டாக்டர் சு. நரேந்திரன்

**1616**-ஆம் ஆண்டு டேனிஷ் மன்னர் நான்காம் கிறிஸ்டியன் (Christian IV) இந்தியாவுடன் பிற நாடுகளுடன் வணிகம் செய்வதற்காக டேனிஷ் வணிகக்குழுமத்தை உருவாக்கினார். டேனிஷ் வணிகர்கள் இலங்கைப் பகுதியின் கடற்கரைப் பகுதிகளில் முதலில் வணிகம் செய்து வந்தனர். பிறகு, தமிழகக் கடற்கரைப்பகுதியான தரங்கம்பாடியை, 1620-ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் விலைக்கு வாங்கினர். அது முதல் டேனிஷ் வணிகர்கள் தரங்கம்பாடியில் குடியேறினர். கிழக்கிந்திய பகுதிகளில் கிறித்தவச் சமயத்தைப் பரப்ப விரும்பிய டென்மார்க் அரசர் நான்காம் பிரெடிரிக் (Fredrick IV) ஆணையின் பேரில் தமிழகத்திற்குச் சமயப்பணி ஆற்ற சீகன்பால்கு (Ziegenbalg), ஹென்ரிச் புளம்சௌ (Heinrich Plutschau) ஆகிய இருவரும் அனுப்பப்பட்டனர். அவர்கள் 09.07.1706இல் அன்று தரங்கம்பாடிக்கு வந்தனர்.

### ஐரோப்பியர் தொடங்கிய முதல் பள்ளி

தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்கு, தமிழ் மொழியைக் கற்றுக் கிறித்தவ சமயக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். அவர் சுதேசிகளின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க விரும்பி, பள்ளி ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டார். பள்ளியைப் பற்றிய குறிப்புகளை அவர் எழுதிய கடிதம் மூலம் அறியமுடிகிறது. பள்ளிக்காக 1709-ஆம் ஆண்டு இடம் ஒன்றை விலை கொடுத்து வாங்கினார். கல்வி நிலையம் தொடர்பாக 19.10.1709இல் அவர் எழுதிய கடிதத்தில், “இக்கட்டிடத்திற்கு வந்தபின் ஆதரிப்பு சாலையிலிருந்து பிள்ளைகள் 44, தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் 3 கிருத்தவ உபாத்திமார்களிடம் 25 பிள்ளைகள் படித்தார்கள். போர்த்துகிஸ் பள்ளிக்கூடத்தில் 2 உபாத்திமார்களிடம் 16 பிள்ளைகள் படித்தார்கள். சில பிள்ளைகள் தையல் வேலையைக் கற்றுக்கொண்டார்கள். அச்சுப் புத்தகங்கள் இல்லாமையால் கோயிலுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் வேண்டிய நூல்களைப் பிரதி செய்வதற்கு 7 கணக்குப் பிள்ளைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்,” எனக் குறிப்பிட்டுள்ளார். சீகன்பால்கு குறிப்பிடும் இப்பள்ளியே ஐரோப்பிய கிறித்தவ சமயப்பணியாளர்களால் தமிழகத்தில் தொடங்கப் பட்ட முதல் பள்ளியாகும்.

### பாடநூல்கள்

தமிழகத்தில் அமைந்த முதல் பள்ளிக்கூடத்தில் தமிழ் வகுப்புகளும், போர்த்துகீசிய வகுப்புக்களும் இயங்கியுள்ளன. தையல் வேலை சுதேசிகளின் மொழியிலேயே கற்பிக்கப்பட்டது. தரங்கம்பாடியில் 1713-ஆம் ஆண்டுதான் அச்சகம் தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளிகளுக்குத் தேவையான நூல்கள் அச்சிடப்படவில்லை. அதனால் சுவடிகளே நூல்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆகவே, கணக்குப் பிள்ளைகள் என சீகன்பால்குவால் குறிக்கப்படுவோர் சுவடிகளைப் படியெடுக்கும் பணிக்காக அமர்த்தப்பட்டவராவார்கள்.

### பள்ளியின் செயல்பாடுகள்

சீகன்பால்கு 1713-ஆம் ஆண்டு ஏப்ரலில் கடிதமொன்றில் தரங்கம்பாடியில் செயல்பட்ட கல்விநிலையங்கள் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. 1713-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் ஐந்து பள்ளிகள் செயல்பட்டன. அப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை வருமாறு:

| பாடசாலையின் பெயர் | பாடசாலை | ஆசிரியர் | மாணவர்கள் |
|---|---|---|---|
| தமிழ் ஆண்கள் பாடசாலை | 1 | 1 | 11 |
| தமிழ் ஆண்கள் பாடசாலை | 1 | 1 | 21 |
| தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 1 | 1 | 11 |
| போர்த்துக்கீஸ் பாடசாலை | 1 | விவரம் இல்லை | 21 (இருபாலர்கள்) |
| டேனிஷ் பாடசாலை | 1 | விவரம் இல்லை | 14 (இருபாலர்கள்) |

வகுப்புகள் காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும், மாலையில் 2 மணி முதல் 6 மணி வரையிலும் நடத்தப்பட்டுள்ளன. வெள்ளிக் கிழமைகளில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை, ஆசிரியர்கள், உபதேசிமார், கணக்குப்பிள்ளைகள்(பாடநூல் படியெடுப்பவர்கள்) பங்கேற்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் சமயப் பணியாளர்கள் ஆசிரியர்களுக்குக் கல்வி தொடர்பான ஆலோசனைகளை வழங்கினர். தரங்கம்பாடியைத் தொடர்ந்து சென்னையிலும் பள்ளிகளைத் தொடங்க சீகன்பால்கு முயன்றார்.

### சென்னையில் பள்ளிகள்

தரங்கம்பாடியில் செயல்பட்டு வந்த சீகன்பால்கு கிறித்தவ அறிவு பரப்பும் சங்கம் (Society for Promotion of Christian Knowledge) என்ற அமைப்பை 1710-ஆம் ஆண்டு தொடங்கினார். இவ்வமைப்பின் சார்பில் சென்னையில் 1711-இல் இரு கல்விநிலையங்களைத் தொடங்க, கிழக்கிந்திய வணிகக்குழுமத்திடம் அனுமதி வேண்டப்பட்டது. இக்காலக்கட்டத்தில் கிழக்கிந்திய வணிகக் குழுமம் பழைய பிரிவு, புதிய பிரிவு என இரு பிரிவுகளாகச் செயல்பட்டு வந்தது. இந்தப் பிரிவுகள் இணைக்கப்பட்டு 1711-ஆம் ஆண்டு ஐக்கியக் கிழக்கிந்திய வணிகக்குழுமம் (United Company of Merchants Trading to East India) தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் விதிகளில் கொத்தளங்களிலும் (Garrisons) தொழிற்சாலைகளிலும் பள்ளி ஆசிரியர்களை இணைத்துக் கொள்வது என்ற புதிய விதி சேர்க்கப்பட்டது. இயக்குநர்கள் இவ்விதியை 1712-ஆம் ஆண்டு முதல் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தனர்.

பள்ளிகளைத் தொடங்க கி.அ.ப.சங்கம் 1711-ஆம் ஆண்டு இசைவு வேண்டியதைக் கிழக்கிந்திய வணிகக்குழுமம் தனது புதிய விதியின்படி ஏற்றுக்கொண்டது. மேலும் பள்ளி தொடங்க அனைத்து உதவிகளையும் செய்வதாக 1713-ஆம் ஆண்டு உறுதியளித்தது. இதற்கிடையில் அக்டோபர் 1715-ஆம் ஆண்டு சென்னையில் குடியேறிய ஆங்கிலேயர்களின் கூட்டத்தில் அவர்களுக்கென ஒரு பள்ளி தொடங்க முடிவு எடுக்கப்பட்டது. அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு வருமாறு:

“ஆண்குழந்தைகளுக்கு எழுதவும் படிக்கவும் (To read) கணக்குகள் (Accounts) மற்றும் அவர்கள் எந்தத் துறை கல்வி கற்பதில் ஆர்வமாக இருக்கிறார்களோ, அந்தத் துறையில் கல்வி அளிக்கலாம். பெண் குழந்தைகளுக்குப் படிக்கவும், வீட்டுவேலைகள் தொடர்பான கல்வி வழங்கலாம்.”

### சமயப் பணியாளர்களின் பள்ளிகள்

கிழக்கிந்திய வணிகக்குழுமம் அனுமதியளித்ததன் விளைவாக, கிரண்டலர் (Grundler) என்ற சமயப் பணியாளர் சென்னையில் பள்ளிகளைத் தொடங்குவதற்கான திட்டவரைவை 1717-ஆம் ஆண்டு கிழக்கிந்திய வணிகக்குழுமத்திடம் அளித்தார். அவர் அளித்த திட்டவரைவின் அடிப்படையில் ஆங்கிலேயர் வசிக்கும் பகுதிகளில் போர்த்துக்கீசிய பள்ளி ஒன்றையும், சுதேசிகள் வசிக்கும் பகுதிகளில் தமிழ்ப்பள்ளி ஒன்றையும் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுவே சுதேசிகளான தமிழர்களுக்குக் கிறித்தவச் சமயப் பணியாளர்களால் சென்னையில் தொடங்கப்பட்ட முதல் கல்வி நிலையமாகும். அதே ஆண்டு கடலூரில் கிரண்டலர் இன்னொரு பள்ளியையும் தொடங்கியுள்ளார்.

### கல்விமுறை

தரங்கம்பாடியைத் தொடர்ந்து, சென்னையிலும், கடலூரிலும் பள்ளிகளைத் தொடங்கிய கிறித்தவச்

சமயப் பணியாளர்கள், மொழிப்பாடம், தமிழ் இலக்கியம், நிகண்டுகள், ஐரோப்பியக் கணிதம் ஆகியவற்றைக் கற்பித்துள்ளனர்.

இப்பள்ளிகளில் குழந்தைகளின் தாய் மொழியிலேயே கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் தமிழும் பயிற்றுமொழியாக இடம் பெற்றது.

**பள்ளியில் முதன் முதலில் விலையற்ற உணவு**

சீகன்பால்கு காலத்தில் 2 விழுக்காட்டினரே எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தனர். அக்காலக்கட்டத்தில் கோயில்களில் திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன. 1707-ஆம் ஆண்டில் போர்த்துக்கீசியருக்கு ஒரு பள்ளி, புளேச்சோவின் மேற்பார்வையில், மற்றொரு பள்ளி சுதேசி ஆசிரியரைக் கொண்டு சீகன்பால்கு மேற்பார்வையில் தமிழர்களுக்கான ஒரு பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டது. இது 28.12.1707இல் தொடங்கப்பட்டது. இரண்டு பள்ளிகளில் படித்தவர்களுக்கும் உணவு, உடை, குடிநீர் மற்றும் நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. சொல்லப் போனால் முதன்முதலில் விலையற்ற உணவளித்து கல்வி போதித்தது இதுவே என்று எண்ண இடமுண்டு.

இதன் பிறகே அமெரிக்காவைச் சேர்ந்த கர்னல் ஆல்காட் என்பவரால் 1902-ஆம் ஆண்டு சென்னை அடையாறில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தொடங்கப்பட்ட ஆல்காட் பள்ளியில்தான் மதிய உணவு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. வரலாற்றை மேலும் பார்க்கும்போது குறிஞ்சி ரெங்கசாமி ஐயங்கார் என்ற ஆசிரியர் 1918-ஆம் ஆண்டில் ஏழைப் பிள்ளைகளுக்காக சென்னை தியாலாஜிகல் கல்லுரியில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பிறகு மதுரையில் சௌராஷ்டிரா சமுதாயம் நடத்திய ஒரு பள்ளியில் 1920-ஆம் ஆண்டில் மதிய உணவு அறிமுகப்படுத்தப்பட்டது. 1951-ஆம் ஆண்டு கல்வி வள்ளல் காமராசர் ஆட்சிக்காலத்தில் சுதந்திரத்திற்குப் பிறகு மதிய உணவுத் திட்டம் தமிழக ஏழை மாணவர்களுக்கு அமல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது. பிறகு வந்த ஆட்சியாளர்களும் இதைத் தொடர்ந்தனர்.

**கட்டணம் இல்லாப் பள்ளி**

சீகன்பால்கு பள்ளிகளைப் பற்றி 1717 ஆகஸ்ட் 16-ஆம் நாள் எழுதிய அறிக்கையில் சீகன்பால்குவிற்குப் பின்னர் மதபோதனை மேற்கொண்ட கிரண்டலர் என்ற பாதிரியார், "எழுதவும் படிக்கவும் கணக்குச் செய்யவும் இங்குக் கற்றுக் கொடுத்தனர். அத்துடன் தமிழ்க் கவிதைகள், விவிலியம், கிறித்தவ இறையியல், போர்த்துக்கீசிய மொழி ஆகியனவும் இங்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டணம் ஏதும் கிடையாது. ஐரோப்பிய கிழக்கிந்தியக் கம்பெனிகளிலும், ஐரோப்பிய வணிகர்களிடமும் வேலைவாய்ப்பு பெற இது உதவியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**கந்தல் பள்ளி**

இந்நிலையில் தியாசபிகல் சொசைட்டி அன்னிபெசண்ட் கொண்டிருந்த கருத்தைக் கவனத்தில் கொள்வது அன்றைய சீகன்பால்குவின் தொண்டை சீர்தூக்கிப் பார்க்க உதவும்.

"இங்கிலாந்தில் ஏழை மக்களுக்கான 'கந்தல் பள்ளிகள்' போன்று இங்கும் உருவாக்கி அதில் ஒடுக்கப்பட்டவர்களின் பிள்ளைகளைப் பயிலச் செய்ய வேண்டும்." இக்கருத்திற்கும் சீகன்பால்குவின் சமூகப் பார்வைக்கும் சமத்துவக் கருத்தில் எவ்வளவு மாறுபாடு?

**பள்ளியில் புகுந்தது அறிவியல்**

1725-ஆம் ஆண்டுவாக்கில் தரங்கம்பாடியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருபத்தோரு பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவற்றில் 500 மாணவர்கள் கல்வி பயின்றனர். இப்பள்ளிகளில் முந்தைய தமிழ்ப் பள்ளிக் கூடங்களைப்போல் இல்லாது வேறுபட்டு புவியியல், வரலாறு, நவீன கணிதம், அறிவியல் என்று புதிய அறிவுத் துறைகளில் பாடங்கள் முதன் முதலாகக் கற்றுக்கொடுக்கப்பட்டன. மொழி, சமயம் என்ற எல்லைகளைத் தாண்டிய கல்வி மக்களுக்குக் கிடைத்தது. இதனடிப்படையில் புதிய அறிவுத்துறை தொடர்பான பாடநூல்களும் உருவாயின.

கிறித்தவர்கள் நடத்திய பள்ளிகளில் ஜாதித்தடை ஏதுமில்லை. மேலும், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பள்ளிகள் சிலவற்றையும் தோற்றுவித்தனர்.

**தமிழில் ஐரோப்பிய எண்கணிதம்**

ஓலைச்சுவடியில் மரபுசார்ந்த அறிவியலைத் தமிழர்கள் எழுதியது ஒருபுறமிருக்க சீகன்பால்கு பள்ளிக் குழந்தைகளுக்காகத் தாம் தாய்மொழியில் கணித நூலை ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (C.S.Mohanavelu,p. 148).

ஓலைச்சுவடியில் இருந்த இந்நூல் 1863இல் அச்சிடப்பட்டது. தரங்கையில் அச்சிடப்பட்ட இந்த 31 பக்க கணித நூலின் தலைப்பு 'Tamil First Book of Mental Arithmetic' என்பதாகும். ஐரோப்பிய கணித அறிவியலின் ஒரு பகுதியான எண்கணிதத்தை 31 பக்கத்தில் முதலில் தமிழில் வெளியிட்ட பெருமை சீகன்பால்குவைச் சாரும் (C.S.Mohanavelu,p. 148).

தமிழகத்தில் செயல்பட்டு வந்த கிறித்தவப் பள்ளி மாணவர்களுக்குக் கணிதத்தில் ஒரு பிரிவான வடிவ கணிதத்தைக் கற்பிக்க சமயப் பணியாளர்கள் வடிவ கணிதக் கருவிப் பெட்டிகளை (Geometry Boxes) ஐரோப்பாவிலிருந்து வரவழைத்துள்ளனர். கிறித்தவ சமயப் பணியாளர்களின் குறிப்புகள் வழி பெறப்படும் இத்தகவல்கள் ஐரோப்பிய கணிதத்தின் சில பகுதிகள் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தமிழ் வழியில் கற்பிக்கப்பட்டதை உறுதி செய்கின்றன.

### பெண் கல்வி முதலாவது பெண்கள் பள்ளிக்கூடம்

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு” என்பது தமிழர்களின் முதுமொழி. பெண்களுக்குக் கல்வி அவசியம் இல்லை என்பது இதன் சாரம். ஆனால், இதற்கு மாறாக சீகன்பால்கு, தான் தரங்கை வந்த 6 மாதத்திற்குப் பிறகு தமிழ்ப் பெண்களுக்காகத் தங்கும் வசதியுடன் 28.10.1707இல் பள்ளியை ஆரம்பித்தார். இதுவே இந்தியாவில் தொடங்கப்பட்ட முதலாவது கிறித்தவப் பள்ளி. இவர்களுக்குத் தங்கும் வசதியுடன் உணவு, உடை ஆகியன வழங்கப்பட்டன. இத்துடன் பள்ளியில் தங்காது படித்த பெண்களுக்கும்கூட உணவும் உடையும் வழங்கப்பட்டன. இதே ஆண்டில் பெண்களுக்குத் தையல் பயிற்சியும் குடும்பம் நடத்தும் திறமையும் ஒரு விதவையின் மேற்பார்வையில் போதிக்கப்பட்டன.

### பைபிள் உமன்

பெண் கல்வி வரலாற்றைத் தொடர்ந்து பார்க்கும்பொழுது, “விவிலியத்தைப் பெண்களிடம் அறிமுகம் செய்யும் முயற்சியில் இறங்கிய சீர்திருத்தக் கிருத்தவ சபை வேதாகம மாது (பைபிள் உமன்) என்ற பெயரில் சில பெண்களைப் பணியில் நியமித்தது. வீடு வீடாகச் சென்று சிறுமிகள் மற்றும் இளம் பெண்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது அவர்களின் முதற்பணியாகும். இவர்கள் கல்வியைக் கற்ற பின்னர் அவர்களுக்கு விவிலியத்தை அறிமுகம் செய்வது இவர்களது இரண்டாவது பணியாகும். (ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்தவமும் தமிழ்ச் சூழலும், ப.39) இதனைப் பார்க்கும்பொழுது சீர்த்திருத்த கிறித்தவம் சமயப் பரப்பலுடன் பெண் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது.

### மரபு சார்ந்த மருத்துவக்கல்வி

ஐரோப்பிய அறிவியலைப் பள்ளி மாணவர்களுக்குக் கற்பித்த சமயப் பணியாளர்கள் தமிழகத்தில் இருந்த மரபு சார்ந்த மருத்துவத்தையும் கற்பிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதை அவர்களின் நிலைய நாட் குறிப்பேடுகள் (Station Diaries) வழி அறிகிறோம். 26.06.1712 நிலைய நாட் குறிப்பில் காணப்படும் பின்வரும் குறிப்பு மரபு சார்ந்த மருத்துவர்களுக்கான பணிகளை விளக்குகிறது.

1. குழந்தைகள் மற்றும் திருச்சபை உறுப்பினர்களுக்கு (மக்களுக்கு) நாட்டு மூலிகைகளைக் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்.
2. திருச்சபையில் படித்த மூத்த சிறுவர்களுக்கு நாட்டு மருத்துவர் (Native Medical Author) ஒருவரைப் பற்றி தினம் ஒரு மணி நேரம் விளக்கவேண்டும்.
3. ஒவ்வொரு திங்கட்கிழமையும் திருச்சபைக் குழந்தைகளைக் கிராமப்புறக் காடுகளுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு மூலிகைகளை அறிமுகப்படுத்தவேண்டும். மூலிகைகளை எடுத்து வந்து திருச்சபைக் கட்டடத்திலேயே ஒரு சிறிய அறையில் தாவரப் பாதுகாப்பகம் (Herbarium) ஒன்று அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அவசியம் நேரும்போது அந்த மூலிகைகளிலிருந்து மருந்துகளைப் பிழிந்தெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.
4. தமிழ் மருத்துவச் சுவடிகளில் குறிப்பிட்டுள்ள மருந்துகளைப் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரித்துக் கொண்டு வந்து இந்தத் தாவரப் பாதுகாப்பகத்தில் வைத்து, அவற்றைத் தயாரிக்கும் மற்றும் உபயோகிக்கும் முறைகளை அச்சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.
5. ஆசிரியர் தம்முடைய ஓய்வு நேரங்களில் தமிழர்களிடமிருந்து தமிழ் மருத்துவ ஓலைச் சுவடிகளைப் பெற்று அவற்றைப் படி எடுக்க வேண்டும். (C.S.Mohanavelu 1993:132).

கிறித்தவச் சமயப் பணியாளர்கள் மரபுசார்ந்த மருத்துவத்தை அனைத்துப்பிரிவு மாணவர்களுக்கும் கற்பிக்க முயற்சிகள் மேற்கொண்டனர். ஏனெனில் இந்திய, தமிழ்ச்சூழலில் மரபுசார்ந்த அறிவியல் குலவழி, குடும்பவழியாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. மரபு சார்ந்த அறிவியலை, ஐரோப்பிய அறிவியல் முறைகளுக்கு உட்படுத்தி வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை இக்குறிப்புகள் வாயிலாக அறிகிறோம். இம்முயற்சி கீழ்க்காணும் இரு தன்மைகளைக் கொண்டிருந்தது. ஐரோப்பியக் கணித அறிவியலைத் தமிழ்வழியில் கற்பித்தல் மரபுசார்ந்த மருத்துவ முறைகளை ஐரோப்பிய அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டோடு மேம்படுத்துதல்.

### சுதேசிகளின் பள்ளிகள்

கிறித்தவச் சமயப் பணியாளர்கள் தமிழகத்தில் கல்விநிலையங்களைத் தொடங்கியதற்கு முன்பாகச்

சுதேசிப் பள்ளிகள் இயங்கிவந்தன. சுதேசிப் பள்ளிகள் என்பவை திண்ணைப் பள்ளிக்கூடங்களே. கிறித்தவச் சமயப் பணியாளர்கள் தங்கள் கல்வி நிலையங்களைத் தொடங்கி நடத்தி வந்த காலகட்டத்திலும் இப்பள்ளிகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இக்கல்விமுறையின் செயல்பாட்டை சுதேசிக்கல்வி முறை (Native Education) எனலாம். இக்கல்வி நிறுவனங்கள் பற்றிய குறிப்புகள் சமயப் பணியாளர்களின் நாட்குறிப்புக்களில் இடம்பெற்றுள்ளன. சீகன்பால்குவின் 11.04.1708 ஆம் ஆண்டு நாட்குறிப்பில், "சுதேசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பல்வேறு நூல்களை மனப்பாடம் செய்து கல்வி கற்றனர். இளம்பள்ளிக் குழந்தைகளால் மனப்பாடம் செய்யப்பட்ட நூல் உலக நீதியாகும்." (C.S.Mohanavelu 1993:170) என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் காலத்தில் இருந்த கல்விமுறையை மராட்டிய மொழி மோடி ஆவணங்கள் விளக்கி நிற்கின்றன. நவ வித்யாகலாநிதி சாலை என்ற பெயருடைய கல்வி நிலையம் 1785-ஆம் ஆண்டு தஞ்சை அரண்மனையில் இயங்கியுள்ளது.

**சுதேசிப் பள்ளிப் பாடநூல்கள்**

தமிழகத்தில் இருந்த சுதேசிக் கல்வி நிலையங்களைப் பற்றியும், பாட நூல்களைப் பற்றியும் உ.வே.சாமிநாதையர் கருத்து தெரிவிக்கும்போது, "பண்டையக் காலத்தில் தமிழ்நாட்டில் ஊர்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் இருந்தன. திண்ணைப் பள்ளிக்கூடங்களென்னும் பெயரால் அவை வழங்கப்பெறும். அங்கே தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குரிய அறிவு பெறுவதற்குக் கருவிகளாகிய நிகண்டு, நீதிநூல்கள், பிரபந்தங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. கணிதத்துக்கு அடிப்படையான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தனர். அவற்றின் உதவியால் மிகச்சிறிய பின்னங்களையும் அமைத்துக் கணக்கிடும் ஆற்றல் மாணாக்கர்களுக்கு உண்டாகும். குடும்பத்துக்கு வேண்டிய வைத்தியமுறைகளும், நாள் பார்த்தல், சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல்வழிகளும், ஆலய வழிபாட்டு முறை, கலாசாரங்கள் முதலியனவும், ஞாபக சக்தியை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் கற்பிக்கப்பட்டன," (உ.வே.சாமிநாதையர் 1986:5) எனக் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தில் இருந்த கல்விநிலையங்களில் தமிழ்மொழி, இலக்கிய இலக்கணங்கள், மரபுசார்ந்த கணிதம், மரபுசார்ந்த மருத்துவம், சோதிடம் ஆகியவை கற்பிக்கப்பட்டன என்ற கருத்து பெறப்படுகிறது. இக்கருத்துக்குத் துணையாகத் தமிழகத் திண்ணைப்பள்ளிகளில் கற்பிக்கப்பட்ட பாடங்களைப் பற்றி சுப்பிரமணியன் தரும் தகவல்கள் வருமாறு.

"திண்ணைப் பள்ளிகளில் திருவள்ளுவரின் திருக்குறள், அவ்வையாரின் ஆத்திசூடி, கிருஷ்ணன் தூது, கம்பனின் ராமாயணம், சீவகசிந்தாமணி ஆகியவையும் நன்னூலின் பகுதிகளும், நிகண்டுகளின் பகுதிகளும் கற்பிக்கப்பட்டுள்ளன."(P.Subramanian 1993:293)

**கல்வியில் பாகுபாடுகள்**

சுதேசிகளின் கல்வி அமைப்பில் இந்தியச் சமூகத்துக்கே உரிய சாதியப் பாகுபாடுகள் காணப்பட்டன என்பதை விளக்கும் வகையில் அமைந்துள்ள கருத்து வருமாறு:

"இக்கல்வி நிலையத்தில் வேதம், சமஸ்கிருதம் ஆகியவற்றைப் பிராமணர்களே கற்றனர் என்பதில் ஐயமில்லை. தருக்கம், சோதிடம், மராட்டி, தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், உடற்பயிற்சி ஆகியவற்றைச் சத்திரியர் பயின்றனர் (கே.எம். வெங்கடராமையா 1984:241).

பதினெட்டாம் நூற்றாண்டில் செயல்பட்ட திண்ணைப் பள்ளிகளில், கல்வி கற்றவர்களில் பெரும்பாலானோர் பிராமணர்களே. இப்பள்ளிகளில் சில அரசு நிலங்களின் வருவாயில் செயல்பட்டு வந்தன. அரசு உதவி பெறாத கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து, தொகையையோ விளைபொருட்களையோ பெற்றுக்கொண்டு, ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர்.

**ஐரோப்பியர் வருகைக்குப்பின் கல்வி மொழி**

அரசர்களால் மத அடிப்படையிலான கட்டமைப்புக்குள்ளும், கருத்தமைவுக்குள்ளும் அமைந்திருந்த நடைமுறைப்படுத்தப்பட்ட கால கட்டத்திற்குப் பிறகு திட்டமிட்ட பள்ளிகள் என்ற நிலையில் ஜனநாயகப் படுத்தப்பட்ட கல்விமுறை ஐரோப்பியர்களால் தமிழகத்தில் உருவெடுத்தது. ஆகையால் கல்வி மக்களுக்கு வந்து சேர்ந்தது. ஏடும் எழுத்தாணியும் கொண்டிருந்த காலம் மறைந்தது, தாளும் எழுதுகோலும் தோன்றின. அச்சிட்ட நூல்கள் பல்கின. மேலைநாட்டின் அறிவியல் வளர்ச்சி இந்தியாவில் புக வழிகோலிற்று.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் அவர்களின் வசதிக்காக வட்டாரமொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் பிற மரபுகள் ஒதுக்கப்பெற்றன. அந்நியர் ஆட்சிக்குட்பட்ட மக்கள், ஆங்கில மொழியைப் புறக்கணிக்க முடியாத கட்டாய நிலைக்குள்ளாயினர்.

தமிழும், வடமொழிச் சொற்களும் கலந்திருந்த ஆட்சிமொழி நிலை அடியோடு மாறியது. முதன்முறையாகத் தமிழகத்தில் ஆங்கில மொழி தமிழை வீழ்த்திவிட்டுத் தனி ஆட்சிமொழியாகியது. ■

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மார்க்ஸிய வெளியீடுகள்




**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்சிய சிந்தனை சுருக்கம்**
(மூலதனம் பற்றிய எளிய விளக்கம்)
தா.பாண்டியன்
₹ 160/-




**கார்ல் மார்க்ஸ்**
வாழ்வும் பணியும்
தா.பாண்டியன்
₹ 140/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-



நேர்காணல்

# மக்களாட்சி என்பது தற்காலங்களில் சடங்குகளின் தொகுப்பாகவே உள்ளது

## - தாரிக் அலி

சந்திப்பு:

**ஜிப்சன் ஜான் & ஜித்தீஷ் பி.எம்.**

தமிழாக்கம் : கே.பி.கூத்தலிங்கம்

நன்றி: நேர்காணல், படங்கள் '*Frontline*' (14.01.2022)

**தாரிக் அலி** சர்வதேச அளவில் நன்கு அறியப்பட்ட சமூக அறிவுஜீவி, பத்தி எழுத்தாளர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர். பிரிவினைக்கு முந்தைய இந்தியாவில் 1943இல் பிறந்த தாரிக் அலி, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவர். மேலும் அவர் அங்கு மாணவர் சங்கத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அந்தக் காலக்கட்டத்திலிருந்தே அவர் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பாளராக தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். வியட்நாம் மீதான அமெரிக்காவின் போருக்கு எதிரான பொதுச் சமூகங்களின் கூட்டிணைவில் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவராக அவர் விளங்கினார். மேலும் அவர் ஆப்கானிஸ்தான், இராக் மற்றும் வெவ்வேறு நாடுகளில் நடத்தப்பட்ட போர்களுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களில் முன்களச் செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தவர்.

'தி கார்டியன்' போன்ற முன்னணி தினசரிப் பத்திரிகைகளில் நன்கு அறியப்பட்ட கட்டுரையாளராகவும் பங்கேற்றிருக்கும் தாரிக் அலி 'நியூ லெஃப்ட் ரிவீவ்' இதழிலும் 50 வருடங்களுக்கும் மேலாக தொடர்பு கொண்டிருப்பவர். அவரது புனைவற்ற எழுத்தாக்கங்களில் மிக முக்கியமானவை: The forty - year war in Afghanistan: A Chronicle foretold, The Extreme centre: A second warning, street fighting years: An Autobiography of the sixties, pirates of the Caribbean: Axis of Hope, The clash of Fundamentalism: crusades, Jihads and Modernity, the leopard and the Fox: A pakistani Tragedy and An Indian Dynasty: The story of the Nehru - Gandhi family.

அவர் புனைவு எழுத்தாக்கங்களையும் கூட படைத்திருக்கிறார்: இஸ்லாம் குறித்த ஐந்து தொகுதிகள் உள்ளடக்கிய shadows of the Pomegranate Tree, The Book of the saladin, the stone woman, A sultan in Palermo மற்றும் Night of the Golden Butterfly.

இந்த நேர்காணலில், 1960களின் போர் - எதிர்ப்பு 'நாயகர்' ஆகிய தாரிக் அலி, நம் காலத்திய மிக இன்றியமையாத பல பிரச்சனைகள் குறித்து கருத்துக்களை எதிரொலிக்கிறார்: ஆப்கானிஸ்தானில் நிலவும் சூழல், மேற்குலகின் சக்தி மற்றும் 'வன்முறை யுத்தம்', லத்தீன் அமெரிக்காவில் அரசியல் வளர்ச்சி, வலதுசாரிகளின் உலகளாவிய எழுச்சிக்கான காரணங்கள், ஊடக உலகில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், புதிய ஊடகங்களின் சக்தி, தொலைத்தொடர்பு சாதனங்கள் கண்காணிப்பும் ஜனநாயகமும், இடதுசாரிகளுக்கு முன்நிற்கும் சவால்கள், நிகழ்கால முதலாளித்துவம் மற்றும் ஏழைகள், கோவிட் 19 பெருந்தொற்றிலிருந்து கிடைத்த பாடங்கள் மேலும் இன்னும் பல தகவல்கள் இதில் விவாதிப்பட்டுள்ளன.

**ஆஃப்கான் குழப்பச் சூழல்**

**ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் மிக நீண்ட போர் சச்சரவுகள் இப்பொழுதுதான் முடிவுக்கு வந்திருக்கிறன்றன, தலிபான்களை அதிகாரத்திலிருந்து இறக்கி அவர்களை சக்தியற்றவர்களாக ஆக்கப்போவதாகவும், அங்கே ஜனநாயகத்தை வளர்த்தெடுக்கப் போவதாகவும் சொல்லிக்கொண்டு, 20 வருடங்களுக்கு முன்பாக, ஆப்கனிஸ்தானில் நுழைந்தது அமெரிக்கா. 2021ஆம் ஆண்டு வரையில் லட்சக்கணக்கான, பெரும்பாலும் அப்பாவி மக்கள் அவர்களது உயிர்களை இழந்திருக்கிறார்கள். அமெரிக்கா $2 ட்ரில்லியனுக்கும் அதிகமான தொகையை போரை முன்னிட்டு செலவழித்திருக்கிறது. ஆனால் தாலிபான்களே மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டனர். இந்த வளர்ச்சியை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

*நாம் இன்று ஆப்கானிஸ்தானில் கண்கூடாக பார்த்துக் கொண்டிருப்பதின் முதன்மையான கருத்து யாதெனில், உலகின் மாபெரும் வல்லாண்மையின் தோல்வி மற்றும் ஏகாதிபத்தியத்தின் தோல்வி எனக் கொள்ளவேண்டும். இது வெறும் இராணுவத் தோல்வி அல்ல. இதை நாம் அழுத்தமாகவே சொல்லவேண்டும். ஆப்கானிஸ்தான் நிலவரத்தைப் பொருத்தமட்டில் அமெரிக்காவின் அரசியல் மற்றும் அதன் சித்தாந்தம் மீதான படுதோல்வி இது; இதைக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். இது அமெரிக்காவின் தோல்வியும் கூட. NATO (வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம்) வழியாக ஏகாதிபத்திய திட்டங்கள் ஐரோப்பியர்களுக்கும் பகிரப்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்தியம் நிகழ்த்தியிருக்கும் அட்டூழியங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத, மனித உரிமைகளை மதிக்கும் சுதந்திர மனப்போக்கு உடையோருக்கு, இந்த உண்மை அதிர்ச்சியளித்தது.*

*இதில் இரண்டாவது கருத்து என்னவெனில், நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் அல்லது அவர்களை ஏற்றுக்கொள்ளாவிடினும், தலிபான்கள் மட்டுமே, ஆப்கானிஸ்தானில், குடியேற்ற ஆட்சியை எதிர்த்துப்போரிடுவதை தீர்மானிப்பவர்களாக விளங்கும் ஒரே சக்தியாக இருக்கிறார்கள். இடதுசாரிகள் மற்றும் சுதந்திர மனப்போக்கு உடைய இடதுசாரிகள் அமைப்பைச் சார்ந்த மிகத் தீவிர பிரிவைச் சேர்ந்த எந்த ஒருவரும், இதை நாங்கள் விரும்பவில்லை, ஏனெனில், இந்த வெற்றி தாலிபான்களால் கிடைத்தது என்றே சொல்வார்கள். இந்த விவாதத்தில் இத்தகு கேள்விகள் கேட்கப் படுகின்றன. அதாவது, நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்? நீங்கள் ஏன் போரிடவில்லை? ஆப்கானிஸ்தானின் குடியேற்ற ஆட்சியை எதிர்த்து நீங்கள் ஏன் தெருக்களில் வீரநடை போட்டு படையணி நடத்திச் செல்லவில்லை. இந்த தேசத்தின் கட்டமைப்பு மாற்றங்களை மீட்டுக் கொண்டுவருவதற்காக, சில நகரங்களில் சில பெண்களுக்கு பயிற்சியும் கல்வியும் வழங்குவதற்காக NATOக்கள் பணம் வழங்கினார்கள் என்பதை உண்மையாகவே நீங்கள் நம்புகிறீர்களா? அதை நீங்கள் நம்புவீர்கள் எனில் நீங்கள் முற்றிலும் தவறானவர் என்பது நிரூபணமாகிறது. தாலிபான்களால் வெல்ல முடியும் என்பதை ஒருவரும் நினைக்கவில்லை. ஆனால் இன்றைய சகிக்க முடியாத உண்மை அவர்கள் வென்று விட்டார்கள் என்பதுதான்.*

*NATO மற்றும் அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில், ‘உறுதியும் வெளிப்படையுமான’ லட்சியங்கள் எதையும் அவர்களால் சொல்ல முடியவில்லை. அவர்கள் 20 வருடங்களாக அந்த நாட்டில் வெற்று அலங்காரத்தையே செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அது புதுமை தாராளவாத முதலாளித்துவத்தின் மிக மோசமான உதாரணங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இதன் உச்சமாக குடியேற்ற ஆட்சிக்கு ஆதரவும் பணம் பண்ணும் வழிமுறையும் என சிறு மேனிலை மக்கள் குழு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒன்றும் ரகசியமில்லை. தி வாஷிங்டன் போஸ்ட் நிறுவனத்தால் பிரசுரிக்கப்படும் ஆப்கானிஸ்தானிய நாளேடுகள் இந்த நோக்கை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அமெரிக்க அரசியல் நிபுணர்கள், படைத் தளபதிகள் மற்றும் சித்தாந்தவாதிகள் இந்தப் போர் எப்படி பேரழிவாக மாறியது என்பதைக் குறித்து வெளிப்படையாகவே பேசிவிட்டார்கள். அவர்களில் சிலர் சொன்னார்கள், நம்மில் பலர் முன்னதாக என்ன கூறினோமோ அதை, அதாவது, ஹமித் கர்சாய் அரசாங்கம், மேற்குலகின் பத்திரிகைகள் முழுவதிலுமாக புகழாரம் சூட்டப்பட்ட அந்த அரசாங்கம், ஊழல் அரசியல்வாதிகளின் கும்பல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் பணம் பண்ணுவதில் மட்டுமே கருத்தாக இருப்பவர்களாம். வாஷிங்டன் நாளேடுகளிலும் அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அறிக்கைகளிலும் கர்சாய் ஒரு பொருட்டே அல்ல என சொல்லப்படுவதை நீங்களே இப்பொழுது வாசித்து அறியமுடிகிறது. அவர் உருவாக்கியதெல்லாம் தங்களை வளப்படுத்திக்கொள்ளும் ஊழல் அரசமைப்பையே. நாம் செய்திருக்கும் ஏராளமான விமர்சனங்கள் மிகச் சரியாகவே இருந்திருக்கின்றன.*

**பெண்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்ன? தாலிபான்கள் அதிகாரத்திற்கு வந்த முதலில், பெண்களை அணுகும் விதத்தில் வன்மையாகவும் கடுமையாகவும் நடந்து கொண்டார்கள். அநேக மக்களுக்கு இதுமாதிரியான பயங்கள் தற்பொழுதும் உள்ளன. பெண்களை அடிமைத் தளைகளிலிருந்து விடுவித்தல் என்பது அமெரிக்கா முன்னெடுத்த போரின் அதிகாரப்பூர்வ குறி இலக்காக இருந்தது. இதில் உங்கள் பார்வை எத்தகையது?**

*ஆப்கானிஸ்தான் மீதான மிகவும் இன்றியமையாத கேள்விகளில் மிக முக்கியமான ஒன்றாக இருப்பது என்னவென்றால், அது இன்றைய நாட்களில் மட்டும் முன்னிலைப்படுத்தப்படுவதில்லை. ஆனால்*

அமெரிக்கா ஆக்ரமிப்பு காலக்கட்டங்களிலேயே எழுப்பப்பட்டது யாதெனில், பெண்கள் நிலைமைகள் என்னவாகும்? என்பதே. இந்த விடயத்தில், நான் கேட்கிறேன், நீங்கள் அங்கே 20 வருடங்களாக இருந்திருக்கிறீர்கள். அதனால் நீங்கள் (மேற்குலக சக்திகள்), பெருந்திரளாகவும் பெரும்பான்மையாகவும் நிரம்பி வழியும் ஆப்கானிஸ்தான் பெண்களின் நிலைமைகள் குறித்து, என்னதான் செய்திருக்கிறீர்கள்? மெய்யாகவே, பெண்களின் உரிமைகளை முழுமையாக நான் ஆதரிக்கிறேன். காபூலிலோ அல்லது இன்னும் சில நகரங்களில் வாழும் சிறியதான பெண்கள் குழுக்களைப் பற்றி மட்டும் நான் பேசிக்கொண்டிருக்கவில்லை. ஆப்கானிஸ்தான் முழுமைக்கும் நான் பேசுகிறேன். அந்தப் பெண்களில் சரிபாதியினர் 25 வயதுக்கும் குறைவானவர்கள். அவர்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் இப்பொழுது தாலிபான்கள் மீண்டும் அதிகாரத்தை அடைந்ததும் புகார் சொல்லி புலம்புகிறீர்கள்? ஆனால், நீங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது, அந்தப் பெண்களின் நிலைமைகளை மாற்றமடையச் செய்தீர்களா? இல்லை என்பதே இதற்கான பதில். தொடக்கத்தில், அவர்கள் (மேற்குலக சக்திகள்) தீவிரவாதத்திற்கு எதிரான போராகவும், பெண்களின் விடுதலைக்கான போராட்டமாகவும் அதை பிரகடனப்படுத்தினார்கள். இப்படித்தானே திருவாளர் (டோனி) பிளேய்ர் அவர்களும் திருவாளர் (ஜார்ஜ் W) புஷ் அவர்களும் உலகத்தாரிடம் சொன்னார்கள். ஆனால் வருடங்கள் பல கழிந்த பிறகு கூட்டிக் கழித்துப் பார்த்தால் இருப்பு நிலை என்ன? எத்தனை பேர்களுக்கு (பெண்கள்) நீங்கள் கல்வி புகட்டினீர்கள்? எத்தனை பள்ளிக்கூடங்கள் கட்டினீர்கள்?

பெண்கள் நிலைமை, நான் கலந்து பேசிய சில பெண்ணிய செயற்பாட்டாளர்களைப் பொருத்தமட்டில், மேற்குலக அதிகாரங்களின் கீழ் படுமோசமாகிவிட்டது



ஒரு பெண் தெருவில் பிச்சை எடுக்கிறாள்.
மசார்-ஐ-ஷரிப், பால்ஹ் மாகாணம், ஆப்கானிஸ்தான், டிசம்பர் 22, 2021

பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் எத்தனை உருவாக்கப்பட்டன? இதற்கான பதில், ஒன்றும் இல்லை அல்லது ஏதோ கொஞ்சம்.

இத்துடன் நான் இன்னொரு விடயத்தையும் இணைத்துக் கொள்வேன். பெண்கள் நிலைமை, நான் கலந்து பேசிய சில பெண்ணிய செயற்பாட்டாளர்களைப் பொருத்தமட்டில், மேற்குலக அதிகாரங்களின் கீழ் படுமோசமாகிவிட்டது, உண்மையிலேயே. ஏராளமான பெண்கள் ரகசியமாக பாலியல் தொழிலாளிகளாக இழுக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஏனெனில் பெண்கள் அவர்களது குடும்பங்களின் பீதியாக இருந்தார்கள். பாலியல் தொழிலாளர்கள் உலகத்தின் மற்ற பாகங்களிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டார்கள். யுகோஸ்லாவியா யுத்தத்தின்போது ஏற்பட்டது போல விபச்சார விடுதிகள் உருவாக்கப்பட்டன. ஆப்கானிஸ்தானிய பெண்களின் நிலைமைகள் குறித்து இது என்ன சொல்கிறது? எனது கருத்தளவில், மாபெரும் மாற்றம் என்பது பாலியல் தொழில் ஊக்குவித்தல் மற்றும் விபச்சார விடுதிகள் கட்டமைத்தல் இவற்றிலேயே நிகழ்ந்துள்ளன. இவை தனி இடத்திலும் பொது இடங்களிலுமாக வளர்ந்துள்ளன. தாலிபான்கள் பெண்களை அணுகும் விதத்தில் மிகவும் பின்வாங்கிவிட்டார்கள். ஆனால் அவர்களது அதிகாரத்தின் கீழ் கற்பழிப்புகள் குறைந்திருந்தன. ஏனென்றால் அவர்கள் கற்பழிப்புக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள். வன்புணர்ச்சியாளர்கள் சில வழக்குகளில் கொல்லப்பட்டார்கள் அல்லது காயடிக்கப்பட்டார்கள். இவ்வகைகளில் இந்தப் பிரச்சனைகளை கையாள்வதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால், ஏதோ ஒரு விதத்தில், குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்தன. 20 வருடங்கள் கடந்திருக்கும் இந்நிலையில் தற்போதைய புள்ளிவிபரங்கள் என்ன?

**இந்தப் பிராந்தியத்தின் மற்ற நாடுகளில் வாழும் பெண்களின் நிலைமைகளைக் காட்டிலும் ஆப்கானிஸ்தான் பெண்களின் நிலைமைகள் மோசமாக இருக்கிறதா? தோராயமாக ஒரே**

**மாதிரியாகவே இருக்கும் என நான் சொல்வேன். கட்டமைப்பு ரீதியில், இது வேறுபடலாம். பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டங்கள் உடைய நாடுகளில் கூட. புள்ளி விபரங்கள் என்னவாக இருக்கின்றன. அருகருகில் இருக்கும் நாடுகளாகிய பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் ஏழைப் பெண்களின் கல்வித் தரம் என்னவாக இருக்கிறது?**

*அந்தளவுக்கு வேறுபாடெல்லாம் இருக்காது என நான் சொல்வேன். யார் கல்வி பெறுகிறார்கள்? (ஆப்கானிஸ்தானில்) ஆப்கானிஸ்தான் நகரங்களில், அடிப்படையில் நகர்ப்புற பெண்கள், கல்வி கற்ற பெண்களே அமைப்பாக உருப்பெற்றிருக்கிறார்கள். இது சிறந்த விடயம்தான். ஆனால் இதுவே இந்தப் பிரச்சனைக்குப் பதில் அல்ல.*

*பால்பேதத்தின் மீதான கேள்வியின் மீதுள்ள கவனம், ஆப்கானிஸ்தான் மட்டுமல்லாது இந்த அண்டம் முழுமைக்குமானதாக கருத்தில் கொள்ளப்படுகிறது. மேற்குலக சக்திகள் இதைச் செய்ய விரும்புவதில்லை. ஏனெனில் பால் இனம் தற்காலத்தில் முதன்மையான ஆயுதமாக ஆகிக்கொண்டிருக்கிறது, ஒரு கருத்தியல் ஆயுதமாக, அதை அமெரிக்காவை வீழ்த்திய குழு மீது பிரயோகப்படுத்தப்படுகிறது. இதுதான் ஆப்கானிஸ்தானில் நிலைமை.*

**உலகத்தின் மாபெரும் ராணுவம் எதிர்த்து தாக்குகையில், தாலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்ற எது உதவியது?**

*மாற்று அரசியலை ஏற்படுத்தத் தவறிய அமெரிக்கா அதன் இராணுவம், கட்டமைப்பு அனைத்தின் ஒட்டுமொத்த தோல்வியின் விளைவே இது. பொம்மலாட்டப் பொம்மைகள் கொண்ட இராணுவத்தின் 3,00,000 மக்கள் எளிதாக தளர்ந்து வீழ்ந்தார்கள். அவர்களில் பலர் அகதிகளாக ஆனார்கள். சிலர் தாலிபான்களை எதிர்த்து சண்டையிட மறுத்தார்கள். சிலர் தாலிபான்களுடன் சேர்ந்து கொண்டதோடு அவர்களின் ஆயுதங்களையும் ஒப்படைத்தார்கள். காவல்துறை படையும் கூட தகர்ந்து வீழ்ச்சியடைந்தது.*

*காவல்துறை படையைச் சேர்ந்த கால்வாசிப் பேர் போதை மாத்திரைகள் விற்பனைகளில் பணம் பண்ணினார்கள். அவர்களில் மேலும் கால்வாசியினர், அதிக எண்ணிக்கை இல்லையென்றாலும், அவர்களில் பலர் தாலிபான் ஊடுறுவாளர்கள். அமெரிக்க ஆக்ரமிப்பு தொடங்கிய பொழுது, அதன் இராணுவத்தை எதிர்த்துப் போரிடப் போவதில்லை என தாலிபான்கள் தீர்மானித்தார்கள். அவர்கள் முடிகளை சவரம் செய்துகொண்டு பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தானிய மலைகளுக்குள் மறைந்து கொள்ள விரைந்தார்கள். அமெரிக்க ஆக்ரமிப்பின் உண்மையான சுபாவத்தை ஆப்கன் மக்கள் பார்க்கத் தொடங்கிய பொழுது தாலிபான்கள் மீண்டும் சுறுசுறுப்பானவர்களாக ஆகத் தொடங்கினார்கள்.*

*ஆப்கானிஸ்தான் தேசத்தைச் சேர்ந்த எந்த ஒரு முற்போக்கு சக்தியும் ஆக்ரமிப்பையும் அத்துமீறலையும் சித்தாந்த ரீதியில் எதிர்த்துப் போரிடவில்லை. ஒருவர் இதைச் சொல்ல வெட்கப்படத்தான் வேண்டும். ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அநேக முற்போக்கு சக்திகள், முந்தைய POPA (ஆப்கானிஸ்தான் மக்கள் ஜனநாயக கட்சி) உறுப்பினர்கள் உள்பட, அமெரிக்கத் தலையீட்டை ஆதரித்தார்கள். ஆதலால் அவர்கள் எவ்வித நம்பகத் தன்மையும் கொண்டவர்கள் அல்ல. அந்நாட்டின் எந்தவொரு பகுதியிலுமாவது, ஒரு முற்போக்கு இயக்கமாவது அத்துமீறல் மீது எதிர்ப்பு காட்டியிருக்கும் பட்சத்தில், சூழ்நிலையானது கொஞ்சம் சமநிலைப்பட்டிருக்கும். ஆனால் அங்கு அப்படி எந்த முற்போக்கு இயக்கமும் செயல்படவில்லை. வடக்கு கூட்டணி அமைப்பு முழுமையுமாக அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு வேலை செய்தது. வடக்கு கூட்டணி அமைப்பின் ஆதரவில்தான் ஆக்ரமிப்பு நடந்திருக்கும் பட்சத்தில், பெண்களுக்கு உதவி புரியும் முயற்சியாக, அதனிடம் எப்படி தற்பொழுது நிர்வாகத்தை ஒப்படைக்க முடியும்?*

*நாடு கடத்தப்பட்ட ஒரு ஆப்கான் பெண்ணியவாதி, தனிப்பட்ட முறையில் பேசியபோது சொன்னது, எங்களுக்கு இருந்தது மூன்று எதிரிகள்: குடியிருப்பு ஆட்சி, வடக்கு கூட்டணி அமைப்பு மற்றும் தாலிபான். மேலும் அவர் சொல்லும் போது, இப்பொழுது எங்களுக்கு இருப்பது ஒரே ஒரு எதிரி மட்டும்தான்.*

*எல்லாவற்றையும் ஆக்ரமிக்க முயற்சிக்கும் ஏகாதிபத்திய பரப்புரைகளையும் மேலும் அவர்களது, தோல்வியில் முடிந்த கேடுகெட்ட பிரச்சாரமாகிய "அய்யோ, தாலிபான்கள் பெண்களுக்கு எப்படியெல்லாம் கொடுமை இழைக்கிறார்கள்" என்பது மாதிரியான, தற்பொழுதைய அவர்களது வார்த்தைகளையெல்லாம் ஒருவர் எதிர்த்திருக்க வேண்டும். இத்தகைய விடயங்களில் எந்தவொரு அக்கறையும் ஆர்வமும் அற்ற இவர்கள் பெண்கள் விடுதலை குறித்த கேள்விகளில் எப்பொழுதும் எவ்விதத்திலும் ஆர்வம் காட்டியதில்லை. மெய்யாகவும் நேர்மையாகவும் இவர்களுக்கு அத்தகைய அக்கறை இருந்தால், பிறகு, பெண்கள் குறித்த அந்தக் கேள்வியை வெறும் ஆப்கானிஸ்தான் பிரச்சனையாக மட்டும் இல்லாமல், பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அண்டம் முழுமைக்குமான பிரச்சனையாக பார்க்கத் தொடங்குவார்கள். அவர்கள் அதை செய்ய மாட்டார்கள்.*

**தாலிபான்களின் கீழ் இருக்கும் ஆப்கானிஸ்தானின் வருங்காலம் எப்படி இருக்கும்?**

*அமெரிக்கா தோற்கடிக்கப்படும்போதெல்லாம், அது வியட்நாமில் ஆகட்டும் அல்லது*

ஆப்கானிஸ்தானாக இருக்கட்டும், அவர்கள் அந்த நாட்டை குட்டுச்சுவராக்கி தண்டித்து விடுவார்கள் என்றே நான் சொல்வேன். வியட்நாம் தேசம் எந்தவொரு மறுசீரமைப்பையும் பெற்றிடவில்லை. அந்த தேசத்தின் மொத்த சுற்றுப்புறச் சூழலும் ரசாயன ஆயுதங்களால் சீரழிக்கப்பட்டது. குடிமக்கள் திரள் மீது நாபாம் குண்டு பிரயோகிக்கப்பட்டது. நான் வியட்நாமில் இருந்தபொழுது, குழந்தைகளின் முதுகுகள் கருகி எரிந்திருப்பதையும், அவர்களின் முகங்கள் பூதங்களின் முகங்கள் போல சிதைந்திருப்பதையும் கண்டேன். நாபாம் குண்டுகளை பயன்படுத்தியதால் இந்த விபரீதம். இப்பொழுது அவர்கள் ஆப்கானிஸ்தானில் என்ன செய்வார்கள்? 20 வருடங்கள் குடியிருப்பு ஆட்சியின் முகமூடிக்கு கீழமைந்த கடினமான உண்மையை நாம் பார்க்க வேண்டியது அவசியம். உண்மை என்னவெனில், ஆப்கானிஸ்தானில் சிறுஉயர்குடி குழுக்கள் மற்றும் மேற்குலகுடன் கைகோர்த்துக் கொண்டவர்கள் தவிர்த்து, இந்நாட்டில் பெரிதாக எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. மேற்குலகின் சக்திகள் ஆப்கானிஸ்தான் மீது தடுப்பு நடவடிக்கைகளை சுமத்தி இருப்பதோடு, அந்நாட்டிற்கு கிடைக்கும் எல்லா உதவிகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அச்சமூட்டப்படுகிறது. இந்நாட்டிற்கு எதிராக அறம் மீறிய குற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. முதன் முதலில், ரஷ்யர்கள் இந்த நாட்டை ஆக்ரமித்தார்கள்; அது மாபெரும் தவறு என்பதோடு மட்டுமல்லாமல், இன்றைய குழப்பத்திற்கு அதுவே வழிவகுத்தது. 40 வருடங்களாக இந்த நாடும் அதன் மக்களும் போர் ஒன்றைத் தவிர்த்து, வேறெதுவும் அறியாதவர்கள். குழந்தைகள் மீது இது ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து நாம் சிந்திக்க வேண்டும். சிறு குழந்தைகள் போரைத் தவிர வேறெதையும் பார்த்து இங்கே வளர்வதில்லை. அவர்கள் பார்ப்பதெல்லாம் போர் மட்டும்தான். இது வெறும் உளவியல் ரீதியான பாதிப்பு உண்டாக்குபவை மட்டுமல்ல, நாடு முழுவதும் ஒவ்வொரு குடும்பமும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை இழந்திருக்கிறார்கள். இதுவே ஆப்கானிஸ்தானில் நிலவும் இன்றைய சூழ்நிலை.

ஆப்கானிஸ்தானில் வாழும் மக்களுக்காக, நாம் மேற்குலக சக்திகளிடம் சொல்ல முடிந்ததெல்லாம், அவர்கள் மேல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாதீர்கள். தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்குக் கிடைக்கும் உதவிகள் மேல் முட்டுக்கட்டை போடுதல் இதெல்லாம் அவர்களின் தலைவர்களையோ தலைமைத்துவத்தையோ எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. அதற்குப் பதிலாக, மக்கள் மீது சுமத்தப்பட்ட தண்டனைகளாக அவை ஆகிவிடுகின்றன. சில சமயங்களில், அமெரிக்கர்கள் இராக்கிற்கு எதிராக வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் செய்தது போல, அங்கே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட போது, அரை மில்லியன் குழந்தைகள் இறந்து போனார்கள். அவர்கள் அந்நாட்டின் மேல் படையெடுப்பதற்கு முன்பும் கூட இந்த நிலைமை அங்கே ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருக்கும் பகுத்தறிவுக்கு ஒத்த எண்ணம் எதுவாக இருக்கிறதென்றால், ஒரு நாட்டின் மேல் தடுப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தினோமாகில், மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி, அங்கே, அந்த அரசாங்கத்தை கதிகலங்கச் செய்து சீரழிக்கும் கிளர்ச்சிகள் உண்டாகும்.

ஆனால், உண்மை எதுவாக இருக்குமென்றால் பாதிப்படையும் மக்கள் தம் சொந்த தேசத்தை அதற்காக குற்றம் சாட்ட மாட்டார்கள். அந்த பாதிப்புகளை யார் உருவாக்கினார்களோ அவர்கள் மீதே அந்த கோபமும் குற்றச்சாட்டுகளும் நீளும். இந்த அட்டூழியங்களை உருவாக்கியவர்கள் யாரென்பதை மக்கள் அறிவார்கள். இந்த மட்ட ரக சூழ்ச்சித் திறம் அரபு உலகில் எடுபடவில்லை. இதே கணத்தில், வெனிசூலாவில் இத்தகைய எல்லா விஷமங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தும்கூட, அங்கே இந்த தந்திரம் வேலை செய்யவில்லை. ஆப்கானிஸ்தானிலும் இந்த விஷம வேலைகள் எடுபடாது. ஆனால் மக்களின் வாழ்க்கையை துயரம் மிகுந்ததாக ஆக்கும் இது.

தாலிபான்கள் மாற்றம் குறித்து அல்லது நிறைவடையா 20 ஆண்டுகள் குறித்து என்பது மற்றொரு விவாதம். கடந்த இருபது ஆண்டுகளாக வளர்ந்து கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் தலைமுறையானது, அவர்களது கைபேசிகளிலும் கணினிகளிலும் பல்வகைப்பட்ட செய்தி ஏடுகளை வாசித்தறியும் தலைமுறை. இதன் பொருள் யாதெனில் அவர்கள் வழக்கமாக இருந்ததைக் காட்டிலும், தற்காலத்தில், பொதுவாக, அவர்கள் நல்ல விதத்தில் தகவல்களை பெறுபவர்களாக இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானின் மக்கள் தொகையில், பெருந்திரளானவர்கள் 25 வயதிற்கும் குறைந்தவர்கள். அவர்கள் எப்படி எதிர்வினை ஆற்றுவார்கள் என்பதை நாம் பார்க்கத்தான் போகிறோம். ஆனால் ஒரு விடயம் உண்மை: மிகச் சில ஆப்கான் மக்கள் உள்நாட்டுக் கலகம் திரும்ப நிகழ்வதை விரும்புகிறார்கள்.

**தாலிபான்களின் ஆணவ அதிகாரத்தின் கீழமைந்த இந்த நிலப்பரப்பில் நிலவியல் சார்ந்த அரசியல் சிக்கல்கள் என்னவெல்லாம் இருக்கும்?**

முதலாவதாக, நிலவியல் சார்ந்த அரசியல் தொடர்பாக ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கும் என்ற கேள்வியின் மீதாக, நம்மால் சொல்ல இயன்றது என்னவெனில், நாம் இப்பொழுது சற்று மாறுபட்ட காலக்கட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். இன்று, நம் புவிக் கோளத்தின் மீது

காபூலில் ஒரு கிளர்ச்சி: டிசம்பர் 21, 2021 நாடு மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து போராடுகிறது.

இரண்டாவது மாபெரும் சக்தியாக விளங்குவது ஐரோப்பாவோ அல்லது ஐரோப்பிய யூனியனோ (E.U) அல்ல. அது சீனாதான். சீனா ஆசியாவில் இருக்கிறது. சீனாவின் சந்தைப் பொருளாதாரம் வியப்புக்குரிய வகையில் வளர்ந்துவிட்டது. இதில் பொதிந்திருக்கும் உண்மை, சீனா தன் எல்லைகளை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கொண்டிருப்பதால், இன்னும் சில வருடங்களில் இந்நிலப்பகுதியில், நிலவியல் சார்ந்த அரசியல் வளர்ச்சிகளில் ஆப்கானிஸ்தான் பெரும் பங்கு ஆற்றப் போகிறது என்பதாகப் பொருள் படுகிறது. மேலும் தாலிபான் தலைவர்கள் இதில் மிகவும் விழிப்புணர்வு உடையவர்களாக இருக்கிறார்கள். இதனால், தாலிபான்களின் முதல் அயலக தூதுக்குழு சவூதி அரேபியாவிற்குச் செல்லவில்லை. ஆனால், அக்குழுவினர் சீனாவின் அயல்தேச துறை அமைச்சரையும், அதன் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவதற்காக சீனாவிற்குப் பறந்தனர். ஜின்ஜியாங்கில் எந்தவித தலையீடும் இருப்பதை அவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்ற உறுதியான உத்தரவாதத்தை அவர்கள் அளித்தார்கள்.

சீனா இந்தப் பேச்சுவார்த்தையில் மகிழ்ச்சியடைந்திருப்பதையே இது காட்டுகிறது.

*மேற்குலகின் சக்திகள் ஆப்கானிஸ்தான் மீது தடுப்பு நடவடிக்கைகளை சுமத்தி இருப்பதோடு, அந்நாட்டிற்கு கிடைக்கும் எல்லா உதவிகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அச்சுறுத்தப்படுகிறது*

இரண்டாவது விடயம், தாலிபான்களின் ஈரானிய உறவின் மாற்றம். ஈரானுடன் இதன் உறவு மிகவும் மோசமாக இருந்தது. இது ஏனெனில், ஆப்கானிஸ்தானில் சன்னி அடிப்படை மதவாதிகள் ஷியா சமூகத்திற்கு எதிராக தூண்டிவிடப்பட்டனர். ஆனால் கடந்த ஆறு, ஏழு வருடங்களாக ஈரானிய தலைவர்களுடன் பல தடவைகள் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, சமரசத்திற்கான சூழல் நடந்துள்ளன. ஈரானியர்களுக்கு, புதிய ஆட்சியமைப்பை சீர்குலைப்பதில் ஆர்வம் இல்லை. ஈரானியர்களால் உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கான ஊக்குவிப்பும் அங்கு இருக்கப் போவதில்லை.

மூன்றாவது, ஒரு தேசத்தை நடத்திச் செல்வது எப்படி என்பது குறித்து ஈரானியர்களிடமிருந்து தாலிபான்கள் பாடங்கள் கற்றுக்கொள்வார்கள் என்பது நடக்கவியலாதது. ஈரானிய மாதிரி அமைப்பு போல உருவாக்குவதற்கு, மெய்யான வேட்பாளர்களைக் கொண்டு, போலி வேட்பாளர்களால் அல்ல, பல்வகை கருத்துகளையும் வெளிப்படுத்தும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் எதிராக உண்மையான வேட்பாளர்களைக் கொண்டு நடத்தப்படும் தேர்தலை அனுமதிப்பதே முன்னோக்கிய படிநிலையாக இருக்கும். ஈரானிய மாதிரி அமைப்பு போலவே ஆப்கானிஸ்தானிற்கும் உரிய அரசியல் அமைப்பு மாதிரியாக

நிகழ வாய்ப்பு இருப்பதற்கான ஆலோசனைகள் நடந்து கொண்டிருப்பதற்கான சில அறிகுறிகள் தென்படுவதாக நான் நினைக்கிறேன். அடுத்த வருடத்தில் என்ன நிகழும் என்பதை மிகவும் முன் கூட்டி இப்பொழுதே கொஞ்சம் நம்பிக்கையுடனாவது பேசப்படுகிறது.

பாகிஸ்தான் உடன் தாலிபான்களின் உறவு மிகவும் நெருக்கமானது. மிகவும் நெருக்கமானதுதான், ஆனாலும் மக்கள் கற்பனை செய்வது போல முழுமையான நட்புறவாக அது இல்லை. முந்தைய தாலிபான் அரசாங்கத்தின் கடந்த வருட காலக்கட்டத்தின் போது கூட, அங்கு பதட்டங்கள் பற்றிக் கொண்டன. கடந்த 20 வருடங்களாக தாலிபான்களுக்கு பாகிஸ்தான் ராணுவம் உதவியிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதுதான் ருசிகரமான விடயம். பாகிஸ்தான் அமெரிக்காவுடன் நெடு காலத்திய நட்பு நாடாக இருந்து வருகிறது. ஆனால் மற்றொரு வகையில், அதே நாடுதான் தாலிபான்களுக்கு போர்த்திற உதவிகள் மற்றும் ஆதரவையும் அளித்து வருகிறது.

**அமெரிக்கப் படைகள் இப்பொழுது விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் ஆப்கானிஸ்தான் தீவிரவாதத்தின் நாற்றங்கால் போல ஆகிக் கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் மற்றைய தீவிரவாதக் குழுக்களின் செயல்பாடுகள் எப்படி உள்ளன?**

ஐ.எஸ்.ஐ.எஸ் முன்னதாகவே ஆப்கானிஸ்தானில் நுழைந்து தங்களது அஸ்திவாரத்தை அங்கே கட்டமைத்துக் கொண்டனர். அவர்கள் தாலிபான்களின் தயவில் அங்கு இல்லை. உண்மையில் அவர்கள் தாலிபான்களுடன் சண்டையிட்டுக் கொண்டுள்ளனர். தாலிபான்கள் அமெரிக்காவுடன் பேரப்பேச்சு வைத்துக்கொள்ளக்கூடாது என அவர்கள் சொல்கிறார்கள். அரபு உலகத்தில் ஆகட்டும், ஆப்கானிஸ்தானில் ஆகட்டும், ஐ.எஸ்.ஐ.எஸ் வரலாறானது அவர்கள் ஒருபோதும் எதேச்சதிகாரத்தை அல்லது அதன் கூட்டணிகளை குறிவைத்ததில்லை. அவர்களது இலக்கு மற்ற இஸ்லாமிய பிரிவினர் மற்றும் சிறுபான்மை கிறிஸ்தவ மக்கள். இதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஆப்கானிஸ்தானின் உள்பகுதிகளில் அவர்கள் மொத்தத்தில் தாலிபான்கள் மீது தாக்குதல் தொடுத்தபடி உள்ளனர். தாலிபான்களிடம் பிடிபட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் ஒமர் கொரசனி மிகவும் மிருகத்தனமாக கொல்லப்பட்டார் என்பதை நான் சொல்லியிருக்கிறேன். ஐ.எஸ்.ஐ. எஸ் விமானநிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியதாலும் அவர்கள் முதன் முறையாக யாரோ ஒரு அமெரிக்கனை கொன்றதற்காகவும், அவர்களை பழிதீர்க்கவே கொரசனி கைதும் அந்த கொடூர மரண தண்டனையும். தாலிபான்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். ஐ.எஸ்.ஐ.எஸ் எந்த வகையிலும் எதிர்சக்தியாக ஆகிவிட்டால், மாபெரும் துயரமாக ஆகிவிடும் அது. ஆப்கானிஸ்தானின் பஸ்துண் பகுதியில் இவர்களது பலம் பெரிதாக உள்ளது. அவர்கள் பல்கிப் பரவி இருக்கக் கூடும். மற்றும் அவர்கள் சந்தர்ப்பவாத தொடர்புகளை உருவாக்கிக்கொண்டிருக்கக் கூடும். ஆப்கானிஸ்தானிற்கு இது ஒரு துயரமாக இருக்கும். அதனால் ஐ.எஸ்.ஐ.எஸ் அங்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் அதிகாரத்தை கைப்பற்றும் நிலையில் உறுதியாக இல்லை.

**பல மேற்குலக நாடுகளுக்கு முன்னரே அதாவது, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் பெண்களுக்கு வாக்கு உரிமை அளிப்பதற்கு முன்பாகவே, 1919 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு ஓட்டுப்போடும் உரிமையை வழங்கியிருந்ததை பலர் மறந்தே விட்டனர். ஆப்கானிஸ்தானின் நடப்பு தலைவிதி எங்கே அழைத்துச் செல்லும்?**

ஆப்கானிஸ்தானத்தின் கட்டமைப்பை புரிந்து கொள்வதற்கு அது பழங்குடி இனங்கள் பல ஒன்றிணைந்து தன்னைத்தானே எப்படி சுய உருவாக்கம் செய்து கொண்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆப்கானிஸ்தானமாக அறியப்படும் இந்த நாடு வேறுபட்ட பல பழங்குடி இனங்கள் இணைந்து உருவாக்கப்பட்டது. அவர்களது தனித்தன்மை மற்றும் சுதந்திரத்திற்கு கடிவாளம் இட நினைக்கும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராக அவர்கள் யுத்தம் செய்தனர். அவர்களை அடிபணிய வைக்க, அவுரங்கசீப் மேற்கொண்ட தாக்குதல்களை எதிர்த்து ஆப்கான் பழங்குடி மக்கள் பல நெடிய போர்களைப் புரிந்தனர். அவுரங்கசீப் அனுப்பிய ராணுவத்தை இந்து, முஸ்லீம் மற்றும் சீக்கிய தளபதிகள் தலைமை தாங்கி வழிநடத்தினர். மொகலாயப் படையில் இந்து மற்றும் சீக்கிய தளபதிகள் எப்பொழுதும் முக்கியப் பங்கு வகித்தனர். அதனால் ஆப்கானிலிருந்து பலத்த எதிர்ப்புகள் கொண்ட படை திரள அவர்கள் அவுரங்கசீப்பின் படைகளில் ஒன்றைத் தோற்கடித்தனர். இதன் தொடர்ச்சியாக, மொகலாயப் பேரரசர் வீழ்ச்சியடைய, ஆப்கானியர்கள் மிகவும் மேம்பட்ட சக்தியாக ஆனார்கள்.

ஆங்கிலேயர் காலக்கட்டத்திலும், இதே நிலைமை தொடர்ந்ததோடு, ஆப்கானிஸ்தானில் ஆங்கிலேயர்கள் மூன்று போர்களை நடத்தினர். முதல் யுத்தத்தில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்கு அது கசக்கிப் பிழியப்பட்ட தோல்வியாக முடிந்தது. இரண்டாவது யுத்தத்தில் இங்கிலாந்திலிருந்து வந்த தாக்குதல்களால் ஆப்கானியர்கள் பாதிக்கப்பட்டனர். ஆனால் மூன்றாவது யுத்தத்தில் தங்களை சரியாக நிர்வகித்துக் கொண்ட ஆப்கானியர்கள் ஒருவழியாக சமாளித்துக் கொண்டு ஆங்கிலேயர்களை தோற்கடித்தனர். இந்தத் தோல்விகளுக்குப் பழிவாங்கும் விதமாக தளபதி

பொல்லக், காபூலில் இருந்த, வரலாற்றின் இடைக்காலத்தைச் சேர்ந்த, பழம்பெருமை மிகு அங்காடியை சீரழிக்க கட்டளையிட்டான். அந்த அங்காடித் தெரு கலை வேலைப்பாடுகள் கொண்ட மாபெரும் அழகு உடையது. மக்களைத் தண்டிக்க வேண்டுமெனில் நீங்கள் அவர்கள் எதை நேசித்தார்களோ விரும்பினார்களோ மதித்தார்களோ அதை அழிப்பீர்கள். இந்த வகையில் ஆப்கான் மக்களிடம் ஆங்கிலேயர்கள் நடந்து கொண்ட விதம், அறம் பிறழ்ந்த நேர்மைக்கேடான இனக்குழு சார்ந்த ஏதேச்சிகாரம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது. (வின்ஸ்டன்) சர்ச்சில் உள்ளிட்டோர் அனுப்பிய செய்தித் தகவல்களை நீங்கள் படிக்க நேர்ந்தால், இது வெட்டவெளிச்சமாக புலப்படும். (ருட்யார்டு) கிப்ளிங் அவர்களின் சில கவிதைகள் வழியாகவும் இதை உணரவியலும்.

> *ஆப்கானிஸ்தான், ஏகாதிபத்திய தலையீடுகளின் மிக நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தடவையும் அது ஆக்ரமிப்பு ஆட்சியாளர்களை தோற்கடிப்பதில் தொடர்ந்து வெற்றி கண்டு வருகிறது. மொகலாயர்கள் தொடங்கி ஆங்கிலேயர்கள் வரையில், ரஷ்யர்கள் அப்புறம், இப்பொழுது அமெரிக்கர்கள்.*

ஆப்கானிஸ்தான் குறித்து எனது புதிய நூல் ஒன்றிற்காக நான் சில கூடுதலான ஆய்வுகள் செய்து கொண்டிருந்தேன். ஆங்கிலேய அரசின் பொதுத்துறை ஊழியன் ஒருவன் பஞ்சாப் ஆளுனருக்கு எழுதிய செய்தித் தகவல் ஒன்றை கண்டெடுத்தேன். அந்தக் கடிதத்தில் ஆப்கானிய மக்களைப் பற்றிச் சொல்கையில், அந்த மக்களை காட்டுமிராண்டிகள் என குறிப்பிடுவதோடு, மேலும் அவர்களில் சிலர் உயர்குடி காட்டுமிராண்டிகள் என சொல்லப்பட்டாலும் ஆனால் உண்மையில் அவர்கள் காட்டுமிராண்டிகளே, என்கிறான். பல மிகவும் உன்னதமான கவிதைகளை உருவாக்கிய நாடு ஆப்கானிஸ்தான். குஷல் கட்டாக் 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அழகான படைப்பு. மொகலாய பேரரசரைத் தாக்கும் கவிதைகள், ஆப்கானியர்களை ஆதரிக்கும் கவிதைகள், பாடல்கள் போலமைந்த கவிதைகள், காதல் கவிதைகள், அரசியல் கவிதைகள், இப்படியாக இன்னும் பல... இந்த நிலப்பரப்பில் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்நாட்டின் மக்களை 'உயர்குடி காட்டுமிராண்டிகள்' என்று குறிப்பிடுவதிலிருந்து உண்மை வரலாறை புரிந்துகொள்ள இயலாத ஆங்கில வல்லரசின் தகுதிப் போதாமையை காட்டுகிறது.

ரஷ்யாவில் 1917 ஆம் ஆண்டு நடந்த அக்டோபர் புரட்சி புவிக்கோளம் முழுமையாக மாபெரும் தாக்கத்தை உண்டாக்கியது. போல்ஷ்விக் அரசாங்கத்தின் முதல் அரசாணையே அதிரடியானது. ஏதேச்சதிகாரத்தின் கீழ் கொடுமை அனுபவித்துக் கிடக்கும் அனைத்து காலனிய நாடுகளுக்கும் விடுதலை என அந்த அரசாணை சொன்னதோடு மேலும் ஜார் அரசாங்கத்தின் அடிமை நுகத்தடியின் கீழ் வாழும்படி தள்ளப்பட்ட இஸ்லாமிய உலகம் அனைத்திற்குமான விடுதலை என்பதே அதில் குறிப்பிடத்தக்க அம்சம். மற்றைய ஏதேச்சதிகார அரசுகளின் கீழிருக்கும் அடிமை நாடுகளுக்கும் விடுதலை என அந்த அரசாணை குறிப்பிட்டது. போல்ஷ்விக் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட

1988 மே, காபூல் மாகாண சாலையில் மாஸ்கோவிற்கு நம்பிக்கைக்குரிய ஆப்கானிஸ்தானிய அரசுப் படைகளின் (இடதுபுறம்) போர்க் கவசம் பூண்ட படைப்பிரிவினர், இராணுவ ஊர்திகளில், சோவியத் ஊர்திகளின் அருகருகே ஓட்டிச் செல்கிறார்கள்

தொடக்க கால அரசாணைகளில் ஒன்று ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராகிய அமானுல்லா கான் அவர்களை சென்றடைய, அதனால் அவர் மிகவும் அகமகிழ்ந்து போனார். அந்தக் காலக்கட்டத்தில் துருக்கிய தேசியவாதிகள் இஸ்லாமிய சமயத்துறை சார்ந்த அரசியலை மாற்றியமைக்கவில்லை. அதன் தேசியவாதிகள் துருக்கியை நவீனமயமாக்க ஆயத்தமானதோடு பெண்களுக்கு சம உரிமைகள் கொடுத்தார்கள். லெனின் மற்றும் முஸ்தாஃபா கெமால் அடாதுர்க் இவர்களின் ஒருங்கிணைவில் ஆப்கான் உயர்குடி குழுக்கள் மீது மாபெரும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். அமானுல்லா ஆதரவு தெரிவித்து தகவல் அனுப்பினார். ஆப்கானிஸ்தான் 1919 ஆம் ஆண்டு தனக்கேயான சொந்த அரசியல் அமைப்பை உருவாக்கத் தயாராகியது. அந்நாட்டின் பெண்களுக்கு முழுமையான சம அந்தஸ்து தந்தது அந்த அரசியல் சட்டம். இதை ஏதேச்சதிகாரத்திற்கு எதிரான சட்டமாக அவர்களால் பார்க்கப்பட்டது. பிறகு, ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானிற்குள் தலையிட்டு தொல்லை தந்து அமானுல்லாவின் அரசாங்கத்தை சீரழித்தனர். அமானுல்லா மற்றும் ராணி சொராயா இவர்களுக்கு எதிராக போராட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இது பழங்குடியைச் சேர்ந்த பிற்போக்காளர்களால் முன்னின்று நடத்தப்பட்டது. ஆனால் அதற்கு ஆதரவும், ஆயுதங்களும் நிதியும் ஆங்கிலேய வல்லாண்மை அரசால் அளிக்கப்பட்டது. இதே போலதான் சில வகைகளில் ஒத்ததாக, 1970 களின் பிற்பகுதிகளிலும் 1980களிலும் USSR (union of socialist soviet Republics) ஜிம்மி கார்டரால் (ஜிகாத்) புனிதப்போர் தூண்டிவிடப்பட்டது. அதனால் ஆப்கானிஸ்தான், ஏகாதிபத்திய தலையீடுகளின் மிக நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தடவையும் அது ஆக்ரமிப்பு ஆட்சியாளர்களை தோற்கடிப்பதில் தொடர்ந்து வெற்றி கண்டு வருகிறது. மொகலாயர்கள் தொடங்கி ஆங்கிலேயர்கள் வரையில், ரஷ்யர்கள் அப்புறம், இப்பொழுது அமெரிக்கர்கள். கல்வியறிவு இன்னும் கூட விரிவடையாத இந்த தேசத்தின் மக்கள் வரலாற்று நினைவுகளில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டனர், அவர்களின் தொடர்ச்சியான ஏகாதிபத்திய எதிர்ப்பு வெற்றிகளால்.

**ஜின்ஜியாங் விருப்பத் தேர்வு**

**இவற்றிலிருந்தெல்லாம் மேற்குலக சக்திகள் அல்லது அமெரிக்கா குறிப்பிட்டுச் சொல்லும்படியாக, பாடங்கள் எதுவும் கற்றுக் கொண்டார்களா?**

இல்லை. கடந்த காலங்களில் அவர்கள் சந்தித்த பின்னடைவுகள் மற்றும் தோல்விகளால் அவர்கள் பாதிப்பு அடைந்திருந்தும் இவற்றிலிருந்தெல்லாம் அவர்கள் எந்தப் பாடங்களும் கற்றுக்கொள்ளவே இல்லை. அவர்கள் பாடம் கற்றுக்கொள்ளும் காலம் ஒரு தடவை வந்தது. இன்னொரு பேரரசு உருவாகி அவர்களுக்கு சவாலாக அமைந்தபோது இது நடந்தது. அமெரிக்கா ஆர்வவெறி மிகுந்த தூதுக்குழுவை கப்பலேற்றி சீனாவை நிலைகுலையச் செய்ய முயற்சித்தது. தைவானின் விருப்பத் தேர்வு அவர்களுக்கு மிக நன்மை பயக்கக் கூடியதாக இல்லை. ஹாங்காங் விருப்பத் தேர்வானது ஏறத்தாழ முடிவாகி இருந்தது. அமெரிக்காவின் கைவசமிருந்த ஒரே வாய்ப்பு ஜின்ஜியாங்கில் உய்குர்ஸ்களுக்கு ஆயுதம் தந்து, அவர்களை அவிழ்த்து விடுவது. அமெரிக்காவின் சார்பாக, துருக்கியில், ஆயிரக்கணக்கானோர்களுக்கு, துருக்கிய அரசாங்கத்தால் பயிற்சியளிக்கப்படுகிறது என நான் சொல்லியிருக்கிறேன். துருக்கி ஜனாதிபதி ரிசெப் தாயிப் எர்டொகன், அவர்களில் சிலரை இந்நிலப்பகுதியில் இருக்கும் அவரது எதிரிகளுக்கு எதிராகப் போர் செய்யப் பயன்படுத்துகிறார். மிக முக்கியமாக சிரியாவில். அமெரிக்கா இப்பொழுது துருக்கியின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதால், அது முக்கிய பங்காற்றியாக இருந்தபோதும், அது, தன், வரையறுக்கப்பட்ட சுய ஆர்வங்களை சார்ந்திருப்பதால் அந்நாடு சில சமயங்களில் அமெரிக்காவை எதிர்க்கவும் செய்கிறது.

ஜின்ஜியாங்கில் இதை சீனர்களுக்கு எதிராக அமெரிக்கா பயன்படுத்தினால், அது வெற்றியடைந்துவிடும் என்பதை அது அறிந்து வைத்திருப்பதால் அல்ல; ஆனால் சீனா மற்ற விடயங்களால் ஆக்ரமிக்கப்படும் என்பதனால்தான். இது எத்தகைய சூழ்நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை அமெரிக்கர்கள் முன்தீர்மானிக்கவில்லை. மேலும் அது முன்தீர்மானிக்கவும் இயலாதது. இது ஆபத்தான சாகசச் செயல். சீனாவின் கொள்கைகள், அவர்களது தேசிய சிறுபான்மையினர்களைப் பற்றியது என்னவெனில், அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் அல்ல. இடதுசாரி அரசியலைச் சேர்ந்த எவரும் இதிலிருந்து ஒன்றையும் கற்றுக் கொள்ளும்படியாக இல்லை. சீனா, மிகவும் கடுமையான மற்றும் மைய அதிகாரம் குவிக்கப்பட்ட மாகாணத்தை உருவாக்கியுள்ளது. சீனா செய்து கொண்டிருக்கும் காரியங்களை யாரும் ஆதரிக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஜின்ஜியாங்கில் நடந்து கொண்டிருப்பதை இனப்படுகொலையாக மக்கள் வகைப்படுத்த தொடங்கிவிட்டார்கள் என்பது என்னை பதட்டமடையச் செய்கிறது.

இதை இப்படி வகைப்படுத்துவது தவறானது என நான் நினைக்கிறேன். இன்றைய காலக்கட்டத்தில், மேற்கத்திய நாடுகள் விரும்பாத எதையும் எந்த ஒரு நாடோ செய்தார்கள் எனில் அது இனப்படுகொலையாக வகைப்படுத்தப்பட்டு அவ்வப்போது அவர்கள் மீது ராணுவத் தலையீடுகளால் தொல்லை செய்து, அந்நாட்டில் குடியிருப்பு ஆட்சியை உருவாக்க முயல்வார்கள். உலகின் பல்வேறு பகுதிகளில் இனப்படுகொலைகள் நடந்தபடி இருக்கின்றன,

யூதர்கள் மீது, அர்மீனியன்கள் மீது இன்னும் பல இனக்குழுக்கள் மீதும்... ஆனால் மேற்சொன்ன மூன்று உண்மையான இன அழிப்புகளிலும், மேற்குலகம், அந்த மக்களைப் பாதுகாக்க எதையும் செய்யவில்லை.

சிறிய படுகொலைகள் எந்தவிதத்திலும் தடுக்க இயலாதவை, ஆனால் அதை இனப்படுகொலையாக பெரிதுபடுத்துவதில், உண்மையில், ஒரே ஒரு செயல்பாடு மட்டும்தான் உள்ளது. அதனால் அமெரிக்கா ஆப்கானிஸ்தானிடமிருந்து எந்தப் பாடங்களும் கற்றுக் கொள்ளத் தவறிவிட்டது.

1975க்குப் பிறகு, அமெரிக்காவிற்கு ஏற்பட்ட அதிர்ச்சியானது மிப்பெரியது, ஏனெனில் வியட்நாமில் குடியேற்ற ஆட்சி ஏற்படுத்தியதற்காக அதன் சொந்த ராணுவத்தைச் சேர்ந்தவர்களே அதனை எதிர்த்து, கருத்து தெரிவித்தார்கள். ஆயிரக்கணக்கான படைவீரர்கள் மற்றும் ஓய்வுபெற்ற, அனுபவம் மிகுந்த படைத்துறை சேர்ந்தவர்கள் பென்டகனுக்கு வெளியே இதைக் குறித்து விரிவாக விமர்சித்ததோடு ஹோசிமின் மற்றும் நேசனல் லிபரேசன் இதில் வெற்றியடையும் என அவர்கள் நம்பிக்கை கொண்டு, அதன் வெற்றியை முன்னரே சொல்லியும் விட்டார்கள். உங்களது சொந்த ஏகாதிபத்திய ராணுவத்திற்குள்ளேயே இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கும்போது, அது உங்களுக்கு அதிர்ச்சியை அளிக்கும் என்பதோடு, அதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நிதானித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இன்னொரு நாட்டின் மீது தலையீட்டை உண்டாக்க, ரொம்ப காலம் ஆகியிருக்கவில்லை. இந்த எதிர்ப்பு முரண்பாடு ரொனால்ட் ரீகனால் ஏற்படுத்தப்பட்டு, 1970களின் பிற்பகுதிகளில் நிகராகுவாவின் ஆட்சியமைப்பை நிலைகுலைக்க முயற்சிக்கப்பட்டது. நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழிந்ததுமே, தென் அமெரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் வழக்கம் போல வாணிக நடவடிக்கைகள் செயல்பட்டன. 1975 ஆம் ஆண்டு மாபெரும் தோல்வி ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட தோல்வி பின்னடைவை ஏற்படுத்தியதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நீங்கள் ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாக இருக்கும்போது, இந்த மாதிரியான விஷயங்கள் ஏதோ ஒன்று நடக்கத்தான் செய்யும் என கோடிட்டுக்காட்டி விட்டுவிட்டார்கள்.

**மற்றொரு நாட்டில் ஆட்சியமைப்பு மாற்றத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகளை ஒருவர் எதிர்த்தால் கூட, உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவி வரும் ஆட்சியாதிக்கம் என்னும் எதார்த்த உண்மையை ஏற்றுக்கொள்ளும்படி ஆகிவிடும் அல்லவா. இத்தகைய இடங்களில் ஜனநாயக மாற்றம் எப்படி நிகழும்? நிகழ்காலத்திய உலக நடப்பு குறித்த உங்கள் அவதானிப்புகள் என்ன?**

என்னுடைய பார்வை எதுவாக இருக்கிறதென்றால், ஒரு தேசத்தைச் சேர்ந்த அதன் குடிமக்களால்தான் அங்கே உண்மையான மாற்றங்களைக் கொண்டுவர இயலும். இது வெளி சக்திகளால் செய்யப்பட்டால், அது எவ்வகையிலும் நன்மையளிக்காது. இது வெட்டவெளிச்சமான பொது அறிவுதான். இராக்கில் யுத்தத்திற்குப் பிறகு நாம் சுதந்திரத்தையோ ஜனநாயகத்தையோ பெற்றுவிட்டோமா? இல்லை. நாம் பதினைந்து லட்சம் மக்களை இழந்திருக்கிறோம். சிரியாவில், அமெரிக்கத் தலையீட்டால் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கொண்டுவர முடிந்ததா? இல்லை, எப்பொழுதும் அப்படிச் செய்து விட இயலாது. லிபியாவில் (முயாம்மர்) கடாபியை நிலை குலையச் செய்து, அங்கே ஜனநாயகத்தை மலரச் செய்துவிட முடிந்ததா? இல்லை. அலபமாவில் பல பத்தாண்டுகளாக பணம் பண்ணிக்கொண்டிருந்த ஒரு லிபிய வியாபாரியை அவர்கள் அங்கே இறக்குமதி செய்தார்கள். அவரை அவர்கள் பிரதம மந்திரியாக உருவாக்கினார்கள். அவர் ரொம்ப நாள் நீடிக்கவில்லை. அவர் மிகவும் கொஞ்ச காலம் மட்டும் நீடித்திருந்தாலும் உண்மையில், சில லிபியர்களாவது அவரது பெயரை நினைவில் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் லிபியர்களுக்கு தந்ததெல்லாம், மூன்று ஜிகாதி தன்னலக் கும்பல்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டும் ஒருவரையொருவர் கொன்று கொண்டும் ஆகும் படியான நிலையை உருவாக்கியதுதான். அரேபிய மாகாணங்களை உடைத்தெறிவதுதான் அமெரிக்காவின் கொள்கை என தோன்றுகிறது. முதல் உலகப் போரிலிருந்தே, இப்படியான பேரழிவுகளை அரேபிய உலகத்தின் மீதாக அவர்கள் கட்டாயமாக சுமத்தியிருப்பது மாபெரும் மோசமான மாற்றத்தை உலகிற்கு நடைமுறைப்படுத்தி உள்ளது. ஒட்டமான்களிடமிருந்து அரபு உலகத்தை கைப்பற்றிய காலந்தொட்டே அது சின்னஞ் சிறிய மாகாணங்களாக உருமாற்றம் செய்யப்பட்டது. ஆங்கில ஏகாதிபத்தியம் இதைச் செய்ததில் முக்கியப் பங்கு வகித்ததோடு, பிற்காலங்களில் அமெரிக்காவினாலும் இத்தகைய உருமாற்றங்கள் செய்யப்பட்டன. அந்தப் புவிப்பரப்பை அவர்கள் இப்பொழுது நாசம் செய்து அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தம் சொந்த மக்களாலேயே மதிக்கப்படாத உயர்குடி குழுக்களால் வழிநடத்தப்படும், ஊழல் மிகுந்த முதலாளித்துவ ஆட்சியமைப்புகள் களைந்தெறியப்படுவதற்கான உண்மையான பாதை கீழ்க்காணும் இயக்க நகர்வுகளால் நடந்துள்ளன. அதுதான் தென் அமெரிக்காவில் நடந்துள்ளது. ஆனால் அவர்கள் தொடர்ச்சியாக அமெரிக்காவின் சவால்களுக்கு எதிராக இருந்து வருகிறார்கள்.

இடதுசாரி முன்னேற்ற சக்திகளை நொறுங்கச் செய்ய, ஏகாதிபத்திய தாக்குதல் முயற்சிகள் எதுவும் முழுமையாக வேலை செய்யவில்லை. பெரு நாட்டின் ஆசிரியக் குடியரசுத்தலைவரின் அண்மைக் காலத்திய

வெற்றி அதற்கான அடையாளம். 2020 ஆம் ஆண்டு பொலிவியா தேர்தலில் அமெரிக்க சார்பு சக்திகள் தோற்கடிக்கப்பட்டது ஒரு நல்ல உதாரணம். இவர்கள் தொடக்கத்தில் இவொ மொரால்ஸை வல்லடியாக கவிழ்த்து கலங்கச் செய்தவர்கள். பொலிவிய மக்கள் சொல்வதெல்லாம், எங்களது தலைவர் துரத்தியடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டாலும் அவர் இல்லாமலேயே நாங்கள் வென்றுவிட முடியும், ஏனெனில் நாங்கள் வலுவான கட்டமைப்பை உருவாக்கியுள்ளோம்.

ஆசியாவில், சீனா விவகாரம் இதைக் குறித்து முன்னரே நான் விவாதித்துவிட்டேன். தெற்கு ஆசியாவில், இந்தியா தொழில் நுட்ப ரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் ஒரு ஜனநாயக நாடு. இந்தியாவின் நிகழ் கால அரசாங்கம் உருமாற்றத்தை நடைமுறைப்படுத்தவும், தொடக்ககாலங்களில் ஆட்சிமுறைகளில் செயற்படுத்தப்பட்ட காந்தி - நேரு இவர்களது கருத்து ஒருமைப்பாடு என்னும் கோட்பாட்டை முற்றிலும் தகர்க்கவும் அதன் சொந்த சித்தாந்தங்களை உபயோகப்படுத்துகிறது. ஆக, (பிரதம மந்திரி நரேந்திர) மோடி உருவாக்கியிருக்கும் கருத்து ஒருமைப்பாடு என்பது அவரது கட்சிக்கு எதிராக நின்றவர்கள் கூட, அதை எதிர்த்தவர்கள் கூட, அடிப்படையில் அதன் மடியில் விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசியல் கட்சிகள் அதன் சுயமான அரசியல் கட்டமைப்பை ஒருமாதிரியாக சமாளித்து நிர்வகித்து வரலாம், ஆனால் அவர்களது கருத்து வெளியீட்டு விதம், அவர்கள் பேசும் வழிமுறைகள், அவர்கள் வளர்த்தெடுக்கும் ஒத்த சிந்தனைகள், இன்னும் பல வகைகளிலும் ஒற்றுமைகள் அதிகரித்தபடி இருக்கின்றன. என்னுடைய பார்வையில் இந்தியாவின் இருபெரும் எதிர்க் கட்சிகளுள், காங்கிரஸ் கட்சியானது இப்பொழுது கேலியான நிலைக்கு ஆகிவிட்டது. அதனிடமிருந்து, ஏதாவது அதன் மூலத் தத்துவத்திற்கு உரிய முற்போக்கு விஷயங்களை எதிர்பார்ப்பது என்பது நகைச்சுவையாகப் போய்விடும். அது அதிகாரத்திற்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறது. மற்றொரு வகையில், இந்தியாவில் இடது சாரிகள் பலவீன நிலையில் இருந்து வருகிறார்கள் என்பதே அதன் வரலாறு. சோவியத் யூனியன் நொறுங்கியபோது இத்தாலி மற்றும் பிரெஞ்சு நாடுகளின் பலமிக்க இடதுசாரி இயக்கங்கள் சிதைவுற்றன. இந்தியாவில், CPI(M) அதாவது, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு இதுபோல எதுவும் நடக்கவில்லை. அது கேரளாவிலும் மேற்கு வங்காளத்திலும், திரிபுராவிலும், அதன் பிடிப்பை சமாளித்து தக்க வைத்துக்கொண்டதோடு, நாட்டின் மற்ற பகுதிகளிலும் அடிப்படைகளை நிறுவி வருகிறது. பல அறிவுஜீவிகள் மேலும் இதனுடன் இணையப்பெற்று, CPI(M)ற்கு பலம் அளித்து வருகிறார்கள். ஆனால் வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் துடைத்துக் கழுவியது போன்ற தோல்வி இந்தக் கட்சி அதன் சரிவில் உள்ளதற்கான அறிகுறிதான். இந்த உண்மையிலிருந்து ஒருவர் ஓடி ஒளிந்து கொள்ள இயலாது. இதன் கேள்வி யாதெனில், மெய்யாகவே முன்னேற்றம் வேண்டி ஒரு இயக்கம் தேவையாக இருக்கும் ஏராளமான மக்களை நகர்வடையச் செய்வதற்காக சில விஷயங்கள் உருவாக்கப்பட்டிருக்க இயலுமா? நாம் பார்க்கும் படியாக இது தொடர்கிறது.

கொரிய தீபகற்பத்தில், பெரிதாக எதுவும் மாறப் போவதில்லை. ஜப்பான் நாடானது அமெரிக்காவால் மிதமிஞ்சி ஆதிக்கம் செய்யப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது, அந்நாடு, அதற்குரிய சுயமான வெளியுறவுக் கொள்கையை செயற்படுத்திக் கொள்ளவில்லை. மேலும் உள்நாட்டிற்குள் அதன் அரசியல் செயற்பாடுகள் பல்வேறு கட்சிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் உயர்ந்தோர் குழாம்களால் ஆதிக்கம் செய்யப்படுகிறது. சோஷியலிஸ்ட்கள் மற்றும் கம்யூனிஸ்ட்கள் மிகக் கடினப்பட்டே ஜப்பானில் நீடித்து வருகிறார்கள்.

தென் அமெரிக்காவில், பெரும் ஆதரவு பெற்ற இயக்கங்கள் மற்றும் இடதுசாரி சோஷியல் ஜனநாயகம் இவற்றின் கூட்டிணைவு எழுச்சி பெற்றுள்ளது. அவர்கள், மூலதனத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக தவிர, மூலதனத்திற்கு பெரிய சவாலாக அவர்களின் மனப்பாங்கு இல்லை. மூலதனத்தின் ஆதிக்கம் முழுமையாக தொடர்கிறது. இந்த ஆதிக்கத்தின் விளைவாக, முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட புழுக்கூட்டிற்குள் இத்தகைய நாடுகளின் முழு எதிர்ப்பும் அடங்கி ஒடுங்கிவிட்டது. மக்களின் உண்மையான தேவைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பிறகு இரண்டு மாபெரும் நிகழ்ச்சிகளை நீங்கள் அறிவீர். முதலாவது, 2008 ஆம் ஆண்டில் நடந்த வாணிகத் தகர்வு, வால் ஸ்ட்ரீட் வாணிகத் தகர்வு. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, அவர்கள் செய்தது போல, சில சீர்திருத்தங்கள் உள்பட, கொஞ்சம் உண்மையான மாற்றங்கள் செய்வதற்கு முதலாளித்துவத்திற்கு அது ஒரு வாய்ப்பாக இருந்தது. ஆனால் அவர்கள் இதை செய்யவில்லை. இரண்டாவது பெரிய நிகழ்ச்சி, நோய்ப் பெருந்தொற்று. முரண்நகையாக, நோய்ப் பெருந்தொற்றானது புதுமை தாராளவாதத்திலிருந்து அந்தந்த நாட்டின் தலையீடு என்னும் நிலை நோக்கி லேசான இடப்பெயர்வை நிகழ்த்தச் செய்தது. ஆனால் இதுகாறும் உள்ள நிலை மக்களிடையே நம்பிக்கையை உருவாக்கவில்லை. அவர்கள் அதை உருவாக்க விரும்பவில்லை. ஏனெனில் மக்கள் மிகை உணர்ச்சிக்கு ஆட்படுவார்கள், மேலும் அவர்கள் அந்த மக்களுக்கு கொடுக்க இயலாத அளவிற்கும் வழங்கப்பட இயலாத வகையிலும், மக்கள் ஏராளமாக விரும்பியிருக்கக் கூடும்.

**2020 ஆம் ஆண்டில், கோவிட்-19 பெருந்தொற்றின் தொடக்கத்தில் இந்த நெருக்கடிகளிலிருந்து ஒரு மிகச்சிறந்த உலகம் எழுச்சிகொள்ளும் என பல மக்கள் நம்பினார்கள். நெருக்கடி நீடித்த காலக்கட்டத்தில் வேலை இழந்தும் ஊதியம் குறைக்கப்பட்டும், இப்படியாக இன்னும் பல வகைகளில் பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். ஆனால் இதன் பிறகும் கோடீஸ்வரர்கள் பலர் அதிர்ச்சியூட்டும் படியான செல்வங்களை ஈட்டியுள்ளார்கள். பெருந்தொற்று காலத்தில் நடந்திருக்கும் அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சிகள் இவற்றின் மீதாக உங்களது பார்வை எத்தகையது?**

"இன்னொரு உலகத்திற்கு வாய்ப்பு உள்ளது" என்பது எப்பொழுதும் சரிதான். வலது அரசியல் சித்தாந்தம், அது இன்னொரு உலகத்தை உருவாக்க முயல்கிறது. இடதுசாரிகள், மொத்தமாக இவ்விஷயத்தில் பலவீனமாக உள்ளனர், ஆனால் வலதுசாரிகள் இதில் மிக அதிக வெற்றியை ஈட்டியுள்ளனர். (அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்) ட்ரம்ப் வலது சித்தாந்தத்திற்கான மாபெரும் வெற்றியாளராக இருந்தார், இன்னொரு அமெரிக்காவை, தனிமுதன்மை கொண்ட வெள்ளையர்களின் அமெரிக்காவை உருவாக்குவதற்கான மாபெரும் வெற்றி. அதனால், இடதுசாரிகளுக்கு, இதெல்லாம் மிக கடினமான கொள்கைக் குரல்.

"நாம் 99% இருக்கிறோம்" என்ற கொள்கைக்குரல் இடதுசாரி சிந்தனைகளோடு ஒத்துணர்வு உடைய ஒரு விளம்பர நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்டது. 99% மக்களால் உருவாக்கப்பட்ட செல்வ வளம் 1% மக்களால் கட்டுப்படுத்தப்படுகிறது என்னும் விவாதம் எப்பொழுதும் என்னை கொஞ்சமும் சமரசம் செய்வதில்லை. ஏனெனில், இந்த 99 சதவிகிதத்திற்குள்தான், நூற்றுக்கணக்கானவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கானோர்கள் உள்ளனர். இவர்களின் உண்மையான சம்பளம் மாறுபாடு உடையவை. அதாவது ஏழைகள் மற்றும் பசியால் பாதிக்கப்பட்டுள்ளோர் இவர்களைக் காட்டிலும் வேறுபட்ட ஊதியங்களைப் பெறுவோர்களும் இந்த மொத்த சதவிகிதத்திற்குள் அடங்குவர். அதனால் அது சமரசம் செய்யும்படியான கொள்கைக் குரல் அல்ல. இந்த 99 சதவிகிதமென்பது கடக்கவியலா பாதாள பெரும்பிளவு. என்னைப் பொருத்தமட்டில், ஆம், நீங்கள் பெருங்கோடீஸ்வரர்களுக்கு எதிரானவராக இருக்கிறீர்கள். ஏராளமானோர் ஈட்டும் ஊதியத்தின் பாதை மக்கள் தொகையின் 50 சதவிகிதத்தினர் ஈட்டும் ஊதியத்திலிருந்து மிகு தொலைவில் உள்ளது என்பதை அந்த கொள்கைக் குரலால் சொல்லித் தீர்த்துவிட முடியாது. எனது வாழ்க்கையின் பெரும்பகுதியில் நான் இந்த நிலைப்பாட்டை சமாளித்து நிர்வகித்து வருகிறேன், அதாவது கொள்கைக் குரலை வலுப்படுத்துதல் என்பது மட்டுமே எப்பொழுதும் போதுமானதாக இருக்காது. அரசியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பரப்பு எல்லைகள் வழியாக உலகம் எப்படி இயக்கம் கொள்கிறது என்பதை புரிந்து கொள்வதுதான் முக்கியம். கேள்வி எதுவாக இருக்கிறதென்றால், சமூகக் கட்டமைப்புகளில் நிகழும் உருமாற்றம் குறித்துதான். அதாவது பெரும்பான்மை ஆதரவுடன் ஒரு நாட்டின் சமூகக் கட்டமைப்பை உருமாற்றம் செய்தல். மேலும் புதிய அரசியல் அமைப்புகள் மற்றும் புதிய அரசியல் அமைப்புச் சட்டங்கள் அடிப்படையிலான பாராளுமன்றங்கள் போன்ற ஜனநாயக அமைப்புகள் நிறுவப்பட்டு அதன் வழியாக சமூக கட்டமைப்புகளில் உருமாற்றம் நிகழ்த்த வேண்டும். தென் அமெரிக்காவால் தரப்பட்ட மாதிரி வடிவம் மோசமான ஒன்றல்ல. சிலியில், பெரும் சக்தி கொண்ட அரசியல் இயங்குமுறையால் இப்பொழுது புதிய அரசியலமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இத்தகைய வழிமுறைகளின் இணைவு இடதுசாரி அரசியலை மறுபடியும், முன்னோக்கி நகர்த்திச் செல்லும். ஜீவித்திருப்பதற்கான ஒப்புப்போலி நடிப்பு பற்றியதல்ல இங்கு கேள்வி. புதிய வழிமுறைகளில் நீங்கள் தற்போதைய அரசியல் தகர்வை துரத்தி விரட்ட விரும்பினால் நீங்கள் ஆக்கப்பூர்வமாக படைப்புத்திறனுடன் சிந்திக்க வேண்டும். எவ்வளவு மக்கள் அதை விரும்புகிறார்கள் என்பதே கேள்வி.

முதலாளித்துவத்தின் இன்றைய சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு, கடந்த காலங்களில் இருந்தது போல, அதனைச் சார்ந்து பல அமைப்புகளை நிறுவனமாகக் கொண்டுள்ளது. இன்றைய காலக்கட்டத்தின் நிதித் தொடர்புடைய முதலாளித்துவம், அது உலகத்தை மிதமிஞ்சி ஆதிக்கம் செய்கிறது, அரசியல் குழுக்கள் ஒட்டுமொத்தமாக இத்தகு முதலாளித்துவ வாதிகளோடு கூட்டு இணைவில் இருக்கிறார்கள். 2008 ஆம் ஆண்டின் தகர்வுக்குப் பிறகு, ஒரு தெளிவார்ந்த சமூக குடியாட்சி விருப்புடையோர், இதுபோல வருங்காலத்தில் நடப்பதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம், என சொல்லியிருப்பார்கள். ஆனால் நோய்ப் பெருந்தொற்று அவர்களை சிந்திக்க வைத்திருக்கிறது.

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் அவர்களது சில கொள்கைகள் தெரியப்படுத்தியவை யாதெனில், அந்நாடு எப்படியெல்லாம் லாபகரமாக பயன்பட்டிருக்க முடியும். பெரும்பான்மையாக, அது விரும்பியிருக்கும் பட்சத்தில். இந்த திசையில் அதை தள்ளுவதற்கு ஒரு வைரஸ் பெருந்தொற்று தேவைப்படுகிறது என்பதே உண்மை. அத்தகைய இன்னல் மிகுந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தொடரும்

# பழந்தமிழ் இலக்கியங்கள் மறுவாசிப்பு

ந.முத்துமோகன்

*காந்திகிராமம் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா.ஆனந்தகுமாரின் 'தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: மீள் வாசிப்பு' எனும் நூல் சமீபத்தில் என்சிபிஎச் நிறுவனத்தின் சார்பாக வெளியாகியுள்ளது.*

*119 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 9 ஆய்வுக் கட்டுரைகள் அமைந்துள்ளன. இக்கட்டுரைகள் "தொல்காப்பியம், சங்கக் கவிதைகள், மணிமேகலை ஆகியவற்றைப் புதிய கோட்பாடுகளின் வழி மறுவாசிப்பு செய்கின்றன" என்று நூலாசிரியர் அறிமுகம் செய்கிறார். 4 சங்கக் கவிதைகள், 3 தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடுகள், 2 மணிமேகலைக் காப்பியப் பிரச்சினைகள் ஆகியன முறையே ஒவ்வொரு கட்டுரையில் ஆசிரியரால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியப் பனுவல்களை அவர் 20ஆம் நூற்றாண்டின் நவீன கோட்பாடுகளின் வழிநின்று மீளாய்வு செய்வதோடு அவற்றை ஒப்பீட்டு ஆய்வுக்கும் ஆட்படுத்துகிறார். இலக்கண, இலக்கியப் பனுவல்கள், வெவ்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த பழைய, புதிய கோட்பாடுகள் ஆகியவை ஒப்பிடப்படுதல் எனும் சிக்கலான ஆய்வு முறையியல் கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.*




**தமிழ்ச் செவ்விலக்கியங்கள் (மீள்வாசிப்பு)**
முனைவர் பா. ஆனந்தகுமார்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
விலை ரூ.120/-

“இத்தகைய மீள்வாசிப்புகள் பழந்தமிழ்ப் பனுவல்களைப் புதுமையுடையவையாக ஆக்குகின்றன; அவற்றைத் தொடர்ச்சியாக இயங்கச் செய்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லுகின்றன” என்றும் ஆய்வாளர் கூடுதலாகச் சொல்லுகின்றார்.

‘பக்தினும் தொல்காப்பியரும்’ என்பது முதல் கட்டுரை. பக்தின் என்பார் ரஷ்ய உருவவியலை ஆதரித்து நின்ற அறிஞர். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர். குறிப்பிட்ட அக்காலத்தில் ஐரோப்பாவில் எழுச்சியடைந்த அமைப்பியலோடு சில முக்கியமான விவாதங்களை நடத்தியவர் மிகயில் பக்தின்.

அமைப்பியல் எனும் மொழியியல் சிந்தனை மொழியின் அடிப்படை அலகாக ‘சொல்’லை எடுத்துக் கொள்கிறது. அமைப்பியலின் கருத்தை ஏற்காத பக்தின், மொழியின் அடிப்படை அலகு ‘உரையாடல்’ அல்லது ‘பேச்சு’ என்று கூறுகிறார். இக்கருத்திலிருந்து பக்தின் ‘உரையாடலியம்’ *(Dialogism)* எனும் கோட்பாட்டை வளர்த்தெடுக்கிறார். சொல் என்பதற்கு ஒற்றைப்படையான பண்பு உள்ளது எனில், உரையாடலுக்கு (’பேச்சு’க்கு) இருமைப்பண்பு உள்ளது என்பது பக்தினின் நிலைப்பாடு. தஸ்தயேவ்ஸ்கியின் நாவல்களில் மேற்கூறிய உரையாடல் பண்பு பரக்க அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டும் பக்தின் அவரது மொழியியல் கோட்பாட்டை ஓர் இலக்கியக் கொள்கையாக விரிவு படுத்துகிறார்.

மொழியின் உரையாடல் பண்பு பின்னாட்களில் சொல்லாடல் என்பதாக விரிகிறது. தனது x மற்றமை எனும் எதிர்வாகவும் அது செழுமையடைகிறது. குறைந்தபட்சம் இருவர் கொண்ட சமூகச் சூழலில்தான் பொருண்மை உண்டாக்கப்படுகிறது என்று பக்தின் விவரிக்கிறார். வகுப்பறைச் சூழல், பலர் பங்கேற்கும் உடையாடல் சூழல், சந்தைச் சூழல் என அது பெரிதுபடுகிறது. பொருண்மை உற்பத்திக்கும் அதுவே மையமாகிறது. அது ஓர் இடையீடு, நிகழ்வு *(Event)*, இயங்கியல் செயல்பாடு எனப் பலமுகங்கள் கொண்டதாகவும் அது வளரமுடியும். பலகுரல் பண்பு *(Polyphonic)*, தொடர்பாடல் என்றும் அது பெருகுகிறது. இலக்கிய ஆய்வுகளில் படைப்பாளியின் குரல், கதாபாத்திரங்களின் குரல்கள் எனவும் அவை அமைய முடியும். உள்மன உரையாடல்களும் இவ்வகை அணுகுமுறையைக் கொண்டு ஆய்வு செய்யப்பட முடியும்.

பக்தினின் உரையாடல் எனும் வடிவத்தை தொல்காப்பியரும் தனது கிளவியாக்கம் எனும் கருத்தாக்கத்தில் ‘செப்பும் வினாவும்’ எனும் பகுதியில் கேள்வியும் பதிலும் என்பது போல தனது x மற்றமை, கேட்போன் X கூறுவோன், வணிகர் X வாடிக்கையாளர் உறவில், இன்னும் பல்வேறு வடிவங்களில் வகுத்துப் பேசுகிறார். பேச்சுக்களில் குறிப்புப் பொருள், வெளிப்படைப் பொருள் என்றும் பொருண்மை அடுக்குகளைச் சுட்டிக்காட்டுகிறார். தொல்காப்பியரையும் மிகயில் பக்தினையும் பேராசிரியர் ஆனந்தகுமார் சிறப்பாகச் சந்திக்கச் செய்கிறார்.

அகக் கவிதையின் கட்டமைப்பு முறை குறித்துப் பேசும் போது கட்டுரையாசிரியர் தமிழ்ப் பொருள்கோடல் முறையில் வழங்கும் உள்ளுறை/உவமம் போன்ற கருத்தாக்கங்களை நவீன பிரதிக் குறியியலுடன் பொருத்திக் காட்டுகிறார். வெளிப்படையாக விளங்கி நிற்கும் பொருள், மறைபொருள் ஆகியனவும் இதுபோலவே நவீனக் கொள்கைகளுடன் *(Connotation, Denotation)* ஒப்பிட்டுப் பேசப்படுகின்றன. வருணப் பாகுபாடு சார்ந்த வைதீகக் கருத்தியலைப் பயன்படுத்தி, ஓர் இலக்கணப் பிரதி சமூகப் பண்பாட்டுப் பிரதியாக்கலுக்கு ஆட்படுத்தப்படும் நிலையையும் சுட்டிக்காட்டுகிறார்.

அடுத்து வரும் ஒரு கட்டுரையில் தொல்காப்பியத்தின் உள்ளுறைக் கோட்பாடு விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திணை சார்ந்த சூழலையும் மனித உணர்வுகளையும் கொண்ட தமிழ்க் கவிதை சூழலியல் கவிதையியல் *(Eco Poetics)* என மலையாளச் சிந்தனையாளரான அய்யப்பப் பணிக்கரால் சுட்டிக்காட்டப்படுவதை எடுத்துக் காட்டுகிறார். தொடர்ந்து இவ் ஆய்வை பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் குறித்தும் மேற்கொள்ளுகிறார். தொல்காப்பியர் 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்' என இவற்றை விளக்குவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

'சங்க இலக்கியத்தில் பெண்ணும் பெண்மையும்' எனும் கட்டுரை "மறைக்கப்பட்ட பழைய பெண் பிரதிகளைத் தொகுத்தல்" என்ற ஒரு முக்கியமான கடமையைத் தமிழ் ஆய்வாளர்கள் முன் வைக்கிறது என ஆய்வாளர் உணர்த்துகிறார். தமிழில் அத்தகைய பல பெண்ணியப் பிரதிகள் உள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். பழமையும் புதுமையும் இயைபுறப் பொருந்தி நிற்கும் பெண்மையை இக்கட்டுரை அற்புதமாக எடுத்துக் காட்டுகிறது.

மற்றுமொரு கட்டுரை, சங்கக் கவிதைகள் காளிதாசன் காவியங்களோடு ஒன்றிணைந்து ஊடிழை இலக்கியத் தன்மையை உருவாக்குகின்றன என்ற பிரச்சினையைக் கையாளுகிறது. தாக்கம், இணைநிலை, செல்வாக்கு போன்ற ஒப்பிலக்கியக் கூறுகளைக் கடந்து ஒன்று மற்றதுடன் 'ஊடிழை இலக்கியத்தன்மை' *(Inter-Literariness)* கொண்டமைவதைச் சித்தரிக்கிறது. ஊடிழை இலக்கியத்தன்மை என்பதன் வரையறை, அது உருவாகும் சூழல், ஒன்று மற்றதற்கு வழங்கும் பங்களிப்பு ஆகியன விவாதிக்கப்படுகின்றன.

மணிமேகலைக் காப்பியத்தை முன்வைத்து இரண்டு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஒன்று, பௌத்த சிந்தனையின் அறிவுத் தோற்றவியல் குறித்தது. மற்றது, பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் சங்க இலக்கியத் தலைவர்களின் வீரப் பண்பு *(Heroic Pattern)* குறித்து எழுதிய கருத்தை மணிமேகலைக்குப் பொருத்தும் கட்டுரை. அதாவது மறத்திலிருந்து அறத்தை நோக்கி மாறிச் சென்று, மணிமேகலை ஒரு முக்கியமான மடைமாற்றத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் உருவாக்கிய பின்புலம் பற்றிய கருத்தாக்கம். தொடர்ந்து மணிமேகலை அக்காப்பியத்தில் காலத்தைக் கடத்தல், வெளியைக் கடத்தல், பாலின எல்லைகளைக் கடத்தல் போன்ற செயல்களின் மூலம் பெண்மையை மறு உருவாக்கப் படுத்தல் ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன.

செவ்வியல் மீள்வாசிப்பு குறித்த இக்கட்டுரை தமிழுக்குப் புதிய பரிமாணங்களை முன்மொழிகின்றது என்பதைக் காண்கின்றோம். இந்நூலில் இடம்பெறாத தனித்த கட்டுரை ஒன்று தனிநாயகம் அடிகளாரின் பின்னைக் காலனிய அணுகுமுறையை பழந்தமிழ் பனுவல்களுக்குப் பயன்படுத்துகிறது. ரஷ்ய உருவவியல் தொடங்கி பின்னைக் காலனியம் வரையிலான கோட்பாடுகளை ஒருபுறமும், தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகளை மற்றொரு புறமும் சிறப்புற பழந்தமிழ் பனுவல்களின் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பாங்கினை இக்கட்டுரையில் காண்கிறோம். இவ்வகை ஆய்வுகளைத் தமிழ் அறிஞர்கள் மேலும் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று இந்நூலாசிரியர் முன்மொழிகிறார்.

இந்நூலின் கட்டுரை ஒன்றின் கடைசி வரி கீழ்க்கண்டவாறு அமைகிறது.

"எல்லையற்ற முடிவற்ற குறிப் பொருண்மை கொண்டியங்கும் சங்கக் கவிதைகள் படைப்பாற்றல் மிக்க ஒரு திறனாய்வாளனுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன." *(பக். 47)*.

இந்நூலுக்கும் நூலாசிரியருக்கும் இக்கருத்து வெகுவாகப் பொருந்துமாக இருக்கலாம். ■


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**

**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# வாழ்த்துகள்

✿

2021ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடெமி விருது பெறுகிறார் எழுத்தாளர் அம்பை. அவருக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’ நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

தனித்துவப் போக்கில் தொடர்ந்து பயணித்து வரும் பெண்ணியப் படைப்பாளியான அம்பைக்கு வழங்கப்பட்டதன் வாயிலாக சிறப்புகளைச் சேர்த்துக்கொண்டது சாகித்ய அகாடெமி விருது.

✿

2021ஆம் ஆண்டுக்கான பால புரஸ்கார் விருது பெறும் எழுத்தாளர் மு,முருகேஷுக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’ வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

கவிஞர் மு.முருகேஷ் தமிழ்ச் சூழலில் சிறார் இலக்கியத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியவர் என்ற வகையில் பாராட்டப்பட வேண்டியவராவார்.


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடாக...

## வரலாற்றில் ஒரு வாழ்வு

*(வரலாறு குறித்த நூல்களின் அறிமுகம்)*

**ஆ. சிவசுப்பிரமணியன்**




நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் ‘உங்கள் நூலகம்’ மாத இதழில் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிவந்த ‘படித்துப்பாருங்களேன்’ என்ற தொடரில் இடம் பெற்ற நூல் அறிமுகக் கட்டுரைகளின் ஐந்தாவது தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது. இத் தொகுப்பில் வரலாறு குறித்த நூல்களின் அறிமுகங்கள் இடம் பெற்றுள்ளன.

வழக்கமான வரலாற்று வரைவுப் போக்கில் இருந்து விலகி மக்களை முன்நிலைப்படுத்தி எழுதப்பட்ட நூல்களே இவற்றில் அறிமுகமாகி உள்ளன. தமிழக வரலாற்று வரைவு புதிய திசை வழியில் பயணிக்க இந் நூல்கள் துணைநிற்கும் என நம்பலாம்.

₹ 225/-

# தோட்டத் தொழிலாளர் இடப்பெயர்வும் இருப்பும்: இலக்கிய சாட்சி

● இரா. காமராசு

மலையகத் தமிழர்களாக மாறிப்போன புலம்பெயர் தமிழர்களின் இடப்பெயர்ச்சி குறித்த பதிவுகள் குறைவு. மு. சிவலிங்கம் எழுதிய ‘பஞ்சம் பிழைக்கவந்த சீமை’ அதை நிறைவு செய்கிறது.

தமிழ்நாட்டின் திருச்சி - அரியலூர் - வாலிகண்டபுரம் வட்டார முருக்கன்குடி எனும் சிற்றூரிலிருந்து வாழ்வின் வளம் தேடி இலங்கைக்குச் செல்லும் இளைஞர்கள்... வேலாயுதம், அர்ச்சுனன், தாண்டவன், பழனி, சீரங்கன் என்று பஞ்சபாண்டவர்கள் போல புறப்பட்ட இவர்களின், பயணத்தை வைத்து பஞ்சம் பிழைக்கப் போன தமிழர்களின் வாழ்க்கைப் பாதையைச் சித்திரிக்கிறது இந்நெடுங்கதை.

வறுமை, பசி, பட்டினி நிரந்தரமாகிவிட்ட அந்நியராட்சியில் அரசாங்கமும், தனியார் ஏஜெண்ட்களும் பொய், புரட்டுகளைச் சொல்லி கூலிகளாக காலனிய நாட்டுப் பணப்பயிர்த் தோட்டங்களுக்கு தமிழர்களைக் கப்பல் ஏற்றினார்கள். தீரா நோயாய் மாறிப்போன வறுமைச்சுழலில் இருந்து தப்பி வளம் காணா வாழலாம் என்ற பெருங்கனவில் கங்காணிகள், ஆள்கட்டிகளின் வழி பரதேசப்பயணம் தொடங்கியது.

ஆள்கட்டி கங்காணிகள் முன்பணம் கொடுத்து ஆட்களைத் திரட்டினார்கள். அப்படி அரியலூர், திருச்சி வட்டாரத்திலிருந்தும் பிற பகுதிகளில் இருந்தும் ஆயிரம் பேர் புறப்படுகிறார்கள். கண்டிக்குப் பயணப்பட்ட இவர்கள் காட்டுவழிப்பயணம், படகு வழிப் பயணம், கால்நடைப்பயணம் என மாறி மாறி பயணிக்கிறார்கள். திருச்சியிலிருந்து ஒற்றையடிப் பாதை, வண்டிப்பாதைகளில் நடந்து செல்கிறார்கள். பாம்பனை அடைந்து அங்கிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி செல்கிறார்கள். தலைமன்னார் பயணத்தின் இடையில் ஐவரில் அர்ச்சுனன், தாண்டவன் இல்லாமல் போய் வேலாயுதம், பழனி, சீரங்கன் ஆகிய மூவரும் பயணத்தைத் தொடர்கிறார்கள். பசி, பிணி, பாம்புக் கடி, விஷத்தாக்குதல், மிருக வதை... என நூறு, இருநூறு மனிதர்கள் குறைந்து கொண்டே வருகிறார்கள். இறந்த உடல்களை மிருகங்களுக்கு விட்டுவிட்டு, வழிப்பறி, இனவெதிர்ப்பு என எல்லா துயரங்களையும் தாங்கி வயிற்றுப்பாட்டுக்காய் தொடங்கியப் பயணத்தை மாத்தளையில் முடிக்கிறார்கள். அப்போது ஆயிரத்தில் ஐநூற்று ஐம்பது பேரே மிஞ்சுகிறார்கள்.

அடுத்து, ஆள்கட்டி கங்காணிகள் கையிலிருந்து தோட்டக் கங்காணிகள் கைகளுக்கு மாறுகிறார்கள். கண்டி மேமலை கோப்பித் தோட்டம் உருவாக காடழிப்பில் தொடங்கி, காபித் தோட்டங்களை பணம் காய்க்கச் செய்வது வரை தமிழ்க்கூலிகளின் உழைப்பு அடித்தளமாகிறது. காபிக்கு அடுத்து தேயிலை வருகிறது. தோட்டங்கள் மாறுகிறது. முதலாளிகள் மாறுகிறார்கள். ஆனால் வாழ்வு அதே நிலையில்தான். ஆண்களும், பெண்களும் படாதபாடு படுகிறார்கள். பெண்களின் நிலை கூடுதல் பரிதாபம். ஏமாற்றும், மோசடியும் பெருகி அதிகாரத் திமிர்த்தனங்களும் அதிகரிக்கின்றன.

உழைப்பாளிகள் தங்களை உணரத் தலைப்படுகிறார்கள். ஆங்கிலத் துரைகள், தமிழ்க் கங்காணிகள் எதிர்ப்பின் முகம் பார்க்கத் தொடங்குகின்றனர். ஆங்காங்கே உரிமை கோரல் எதிர்ப்புகள். மூன்று கொலைகள் விழுகின்றன. வேலாயுதமும் அவனது பிற கூட்டாளிகள் சிலரும் கைது செய்யப்படுகிறார்கள். சீரங்கமும் பழனியும் வேறு தோட்டங்களில் பணி செய்து ஊர் திரும்புகிறார்கள். ஊரில் வேலாயுதமும் நண்பர்களும் வந்த கப்பல் மூழ்கிச்



செத்துவிட்டார்கள் என்ற வதந்தி பரவி அவனது அப்பாவும் அம்மாவும் அதிர்ச்சியில் இறந்து போன செய்தியும், அவனது முறைப்பெண் பாப்பாத்தி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்ட செய்தியும் வந்து சேர்கின்றன. வழக்கிலிருந்து விடுதலை அடைகிறான். வேலாயுதம் இங்கு ஆதிக்கக் கொலை செய்யப்பட்ட பூபதியின் மனைவி சரஸ்வதியை மணந்து மகன் பசுபதியை ஏற்று, ஒரு புதிய மகளையும் பெற்றெடுக்கிறான். பத்தாண்டுகள் கழித்து 1874 இல் தமிழ்நாட்டுக்கு திரும்புகிறான். தோட்டத் தொழிலாளர்கள் உரிமைக்கு கோ. நடேசய்யர் குரல் கொடுக்கிறார். சங்கம் பிறக்கிறது. கட்சிகள் வருகின்றன. இலங்கையில் தோட்டத் தொழிலாளர் நிலை கேள்விக் குறியாகிறது. சங்கம், தலைவர்கள், அமைச்சர்கள் இருமுகம் காட்டுகிறார்கள். முதலில் சென்ற தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறையினர் அங்கேயே வாழவும் சிலர் தாயகம் திரும்பவும் செய்வதோடு நாவல் நிறைவடைகிறது.

புதுமைப்பித்தனின் துன்பக்கேணி, கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை வரிசையில் 'பஞ்சம் பிழைக்க வந்த சீமையும்' அமைகிறது.

"பிரித்தானிய பெருந்தோட்டம் வியாபாரிகளின் விவசாயத்தை நம்பி வந்த தென்னிந்தியக் கிராமத்துக் குடிகளின் நீண்ட நடைப்பயணம், உலக வியப்புக்குரியதாகும். தாய் மண்ணிலிருந்து, கானகத்துக்கூடாக நீண்ட நடையிலும்... கடல்பயணத்திலும்... மீண்டும் மன்னார்... மலைநாடு வரையிலும் கடந்து வந்த 'பாதையில்' பல்லாயிரக்கணக்கானோர் மடிந்து போன நிகழ்வுகள் மறைக்கப்பட்டன! உலகமறியாத ஒரேயொரு துயர வரலாறு, தென்னிந்தியத் தமிழர்கள் பிரிட்டிஷ்காரர்களின் பின்னால் பெருந்தோட்டச் செய்கைக்காக குடியேற்ற நாடுகளை நோக்கி கடல் கடந்து, அல்லல்பட்டு, அழிந்து போன வரலாறாகும்". என ஆசிரியர் உரையில் மு. சிவலிங்கம் சொல்வது மிகச்சரி.

இது நவீன ஆற்றுப்படை; துயர் பயணப்படைப்பு. தோட்டத் தொழிலாளர் புலப்பெயர்வின் ரிஷிமூலம். ஆசிரியர் சகபயணியாய் நின்று படைத்துள்ளார்.

புலம்பெயர் தொழிலாளரின் புலப்பெயர்வின் முன்னும் பின்னுமாக வாழ்வியல் பதிவுகள் இந்நாவலின் பெருஞ்சிறப்பு. அந்த வகையில் இப்படைப்பு ஒரு வரலாற்று சமூக ஆவணமாகத் திகழ்கிறது.

பிழைப்புக்காக அயலக செல்லும் முன், ஊரில் உறவுகளிடம் விடை பெறுதல், அச்சம் தரும் பயணக்கதைகள், பயண வழி, பயணத் துணை, கங்காணிகளின் கொடுஞ் செயல்கள், இழப்புகள், துயரங்கள், தோட்டங்கள், தோட்ட வேலையின் சிக்கல்கள், தங்குமிடங்கள், பெண்களுக்கான வன்கொடுமைகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், எதிர்ப்புணர்வுகள், நவகாலனியக்கூறுகள் நாவல் முழுக்க விரவிக் கிடக்கின்றன. இந்த வாழ்வும், வலிகளும் ஓர் இனத்தின் வாழ்வுக்கான போராட்டம். அது முடியாதது தொடரும். மாற்றம், புதுமை மலரும் என்ற நம்பிக்கையை இப்படைப்பு முன்வைக்கிறது.

வாழ்க்கையைத் தேடிப் புறப்பட்டப் பயணம், அன்றாடம் வாழ்வின் முடிவை அதன் விளிம்பைக் காட்டிக்கொண்டே நடைபிண மனநிலையை உருவாக்கி விடுகிறது. வயிற்றுப் பிழைப்புக்குமாக ஊசலாடும் மனித இருப்பை உயிர்ப்போடு இந்நெடுங்கதை காட்சிப்படுத்தி விடுகிறது.

**பஞ்சமும் பரிதவிப்பும்**

ஆண்டாண்டு காலமாக பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணில் வாழ முடியாத நிலை ஏற்பட்டு பிழைப்புத்தேடி இளம் தலைமுறை செல்ல நேரிடுகிறது. "பஞ்சத்த இதுக்கு மேல தாங்கிக்க ஏலாது... பணக்காரங் கிட்ட நஞ்ச புஞ்ச இருந்தப்போ... கம்போ, குரக்கனோ, கேவரோ, சோளமோ, கஞ்சி காச்ச சரி கெடச்சிச்சி வெள்ளக்கார நாய்க நெலத்த பறிச்சிகிட்ட பொறகு, யாரால என்னா செய்ய முடியும்? இப்ப இந்த ஏரி கூட அவனுக்கு சொந்தமா போச்சி, தெரியும்ல? அவன் நெனச்சா தான் இனிமே நமக்கு தண்ணி கூட கெடைக்கும்." " எல்லா ஏரியும் வெள்ளைக்காரன் சர்க்காருக்கு சொந்தமாச்சு. தண்ணிக்கும், வயல் நெலத்துக்கும் காணிக்காரங்க வரி கட்டணும், சொந்த வயக்காட்டுல வெவசாயம் செய்ய முடியாது! தோட்டம் கொத்த முடியாது...! எல்லாமே சர்க்காருக்கு சொந்தமாம். அவனுங்க எறக்குமதி செய்ற ஜாமான்களை பணங்குடுத்து வாங்கித் திங்கணுமாம். பணத்துக்கு எங்க போறது...?" "ஊரவுட்டு மட்டுமில்லை; நாட்டவுட்டே போவ வேண்டியிருக்கும்" *(பக். 2-3)*

இந்த நிலையைப் பயன்படுத்த காலனி அரசு முனைந்தது. தன் ஏஜெண்ட்டுகள் வழியாகவும் தனியார் கங்காணிகள் வழியாகவும் மனிதக் கூலிகளை தங்களது காலனி நாடுகளில் உள்ள பணப்பயிர்த் தோட்டங்களுக்கு ஏற்றுமதி செய்தது. மக்கள் கூடும் கோயில் போன்ற இடங்களில் நோட்டீஸ் அறிவிப்பு ஒட்டப்பட்டது. கூலிகளாகச் செல்ல பெயர்ப்பதிவு செய்வோருக்கு கடனாக முன்பணமும் தரப்பட்டது. பயணம் போகிறவர்கள் தங்கள் குடும்பத்துக்கு தேவையான உணவு, உடை, பண்ட பாத்திரங்கள் வாங்கவும் பயணக் கைச்செலவுக்கும் இப்பணம் பயன்பட்டது. அதோடு உறவினர்களோடு கறிவிருந்தும் நடந்தேறியது. "செல்லான் குடும்பத்துல மட்டுமில்ல மச்சினே... காத்தமுத்து, தொப்புலான், ஆண்டி, ராமசாமி குடும்பத்துக்கும் மூனுநாளா தீபாவளி நடக்குது! கெடா அறுத்து, சம்பா பொங்கி, கூத்தும் கும்மாளமும் நடத்துக்கிட்டு இருக்கு...!"

'என்ன விசேஷம்ல...?'

'கண்டி சீமைக்கு போறாஹலாம்...!'

"வீசக்கார சங்கிலிதான் ஆளுக்கட்டியாம். முன் பணம் குடுத்துட்டு போயிறாக்காய்ங்கலாம்! ஆறு நாளுல அக்கர கௌம்பணுமாம்...!" *(ப.2)*.

முன்பணம் பெறுபவர்கள் கங்காணிகளால் கடுமையாக மிரட்டப்பட்டார்கள். சர்க்காரும், போலீசும் சும்மாவிடாது என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

**கண்டிக்குத்தான் போறமுன்று**
**கறிசோறு தின்னுப்புட்டு...**
**தோணிஏற மாட்டோமுன்னு**
**தொங்கலியே ஒளிஞ்சிக்கிட்டா**
**தொலைச்சுடுவான் ஆளுகட்டி...!** (ப. 9)

எனப் பாடும் அளவுக்கு நிலைமை இருந்தது. பயணத்தைப் பற்றியும், தோட்ட வேலையைப் பற்றியும், அங்கு பொருள் ஈட்டி அடையப் போகும் பலன்களைப் பற்றியும் ஆள்கட்டி கங்காணி விலாவாரியாகச் சொல்கிறான்.

"கெவனமா கேட்டுக்கோ சிலோன் போற பயணத்துல சமுசியம், பயம் இருந்தா, பயந்தாங் கொள்ளிக எல்லாரும்

ஓரமா நில்லு...! துணிச்சலானவென் மட்டும் ஒழுங்கா கேட்டுக்கோ! காடு, மேடு ஏறன்னும்... நம்மூரு நீலகிரி மாதிரி இருக்கும். கூதல் ஜாஸ்தியாயிருக்கும். கடலு மேல போவணும். சொந்த ஊர்ல்லாயிருந்து தேவிபட்டணம், பாம்பன் ராமேஸ்வரம் போற வரைக்கும் நடராசா தான் புரியுதா...''? (ப.10)

''கண்டி சீம, இருவத்திரெண்டு கட்ட தூரம்லே! கடல் தண்ணியக் கடந்தா மன்னாரு! ஓங் குப்பத்துலவெட்ட வெளிக்கி போயிட்டு வர்றதூரம்...! அங்க வெளிக்குப்போனா சூத்து கழுவ தண்ணி கெடைக்கும்! அங்க திங்கப் போற தீனி, கொஞ்ச நாளையில் ஒங் குண்டியில கொழுப்ப வெச்சிரும்...! ஒங்கோயி நொப்பன தவுற எல்லாமே கெடைக்கும்! நீ விருப்பப்பட்டா பொண்டாட்டி கூடகிடைக்கும்'' (ப. 10). சங்கிலி கங்காணி கிண்டலாய் பேசினாலும் எளிய மனிதர்கள் நடப்பு நலிந்த வாழ்வைக் கடக்கும் கனவை சுமந்து தானே பயணப்படுகிறார்கள். பயண வழிக் கொடுமைகள் ஒருபுறம் என்றால் 'நரபலி' போன்ற காட்டுமிராண்டி வழக்கங்களும் பயமுறுத்தின. கொழும்பு கண்டி நெடுஞ்சாலையில் பாலம் கட்டும் போது நடந்த 'நரபலி' குறித்தக் கதைகளும் உண்டு.

**நரபலி**

''அந்த மூன்று இளைஞர்களையும் பாலம் கட்டும் இடத்திற்கு அழைத்து வந்திருந்தார்கள். பாலம் நிர்மாணிக்கும் ஓர் உயர்ந்த கட்டடத்தின் அருகில் பூசையை ஆரம்பித்தார்கள். கருப்பன் கங்காணியும், சீமைத்துரைகளும் வந்து விட்டார்கள். அந்த மூவரையும் சாம்பிராணி போடச்சொன்னார்கள். கண்களை இறுக மூடிக்கொண்டு பால் போல் எரிக்கும் அந்த பௌர்ணமி வெளிச்சத்தில் கிழக்குத்திசையைப் பார்த்துக் கும்பிடச் சொன்னார்கள்.

அவர்களும் அவ்வாறு செய்யவே, பூசை செய்பவன் உடனே அவர்களை அடித்தளம் வெட்டியிருக்கும் குழிக்குள் தள்ளி விட்டான்...! குழுமியிருந்த கூலியாட்கள் கற்களை வேகவேகமாக குழிக்குள் உருட்டிவிட்டார்கள். அவசர அவசரமாக மணல், சிமிந்தி சாந்துகளைக் கொட்டினார்கள். வெள்ளைக்காரர்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். கங்காணி பலமாகச் சிரித்தான். 'சீமத்தொரைமார்களே! நரபலி குடுத்துட்டோம். இதுக்கு மேல கட்டு ஒடையாம கட்டடம் ஏந்திரிக்கும் பாருங்கோ' என்று வீரதீரமாகப் பேசினான்'' (ப.6).

**புறப்பாடு**

வேலாயுதம் பயணம் தொடங்கும் முன், அவனது அக்காள் மகள் அவனின் முறைப்பெண் பாப்பாத்தி அவனிடம் நடந்து கொண்ட முறை, ஏறக்குறைய திருமணம் ஆகி, ஆகாமல் அயலகம் செல்லும் பலரின் வாழ்வின் சிறுதுளிதான்.

''அவள் அவனிடம் வெட்கத்தைவிட்டு கேட்டாள். அவனை இழுத்துப் பிடித்து காதுக்குள் வாயை வைத்து சூடு தெரிக்க குசுகுசுத்தாள். 'மாமா, இந்த மூனு நாளைக்கும் நானும் நீயும் புருசன் பொண்டாட்டியா சேந்து இருக்கணும்!' 'பாப்பு..! மடத்தனமா பேசுறியே, நா வெளித்தேசம் போயிவர்ற வரைக்கும் ஒன்னையத் தொடமாட்டேன்னு சொன்னது மறந்து போச்சு?' 'மாமா..! நா ஆம்பள சொகத்துக்கு அலைலீயே மாமா! ஒனக்காக நான் புள்ள பெத்துக்கணும். நீ போன பொறகு நா முழுகாம இருக்கிற சங்கதி சேரிக்குள்ளேயும், ஊருக்குள்ளேயும் தெரிஞ்சிருக்கணும். நான் கெட்டுப் போவணும். அதுதான் எனக்கு பாதுகாப்பு. இல்லேன்னா எங்கப்பன் என்னையை கலியனுக்கு கட்டி வெச்சிடும்' அவள் தேம்பித் தேம்பி அழுதாள்'' (ப. 25).

அப்படியே நடந்து பாப்பாத்தி கருவுற, வேலாயுதம் செத்துப்போனதாக வந்த வதந்தியில் கரு கலைய, தனக்கும், பெற்றோருக்கும் உதவிய கலியனை மணக்க நேர்கிறது. வேலாயுதமோ பல்லாண்டுகள் பாப்பாத்தியை நினைத்தே விரதம் இருப்பது போல தனிக்கட்டையாகக் காலம் கழிக்கிறான்.

**தங்குமிடங்கள்**

நடைப்பயணவழியில் 'திருச்சி - சிலோன் பயணிகள் தங்குமிடங்கள்' உருவாகியிருந்தன. காட்டு வழிப் பயணத்தில் இளைப்பாற, சமைத்து சாப்பிட ஆங்காங்கே தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கோயில்கள், மடங்கள் தவிர்த்து இதற்கெனவே செட்கள், தண்ணீர்த் தொட்டிகள் அமைத்திருந்தார்கள்.

**பயண அவதி**

பயணத்தில் மக்கள் பெரும் அவதிப்பட்டார்கள். நீண்ட தூரம் நடத்தறியாதவர்கள், வயோதியர்கள், நோயாளிகள், பெண்கள், கைக்குழந்தைகள்... வயிற்றுப்பாட்டிற்கான பெருவலியை அனுபவித்துச் சென்றார்கள். ''மூச்சுக்குத்து, மாரடைப்பு, இடுப்புப்புடி, மண்டகுத்து, மொழங்காலு சுலுக்கு, ஆஸ்துமா, காச்சல்னு போனதுக... அப்புறம் சாட்டு சீவாத்து, சிறுத்த, புலி, விரியன், புடையன், வண்டு, கொளவின்னு போனதுக'' (ப. 40) என இறப்புக் கணக்கு வந்துகொண்டே இருந்தது.

காலனிய நாடுகளுக்கு தென்னிந்தியர்கள் கூலித்தொழிலாளர்களாக செல்ல உடனடிக்காரணமாக அமைந்தது. உலகில் அடிமை முறை சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட்டதுதான். அதுவரை அடிமைத் தொழிலில் உடலுழைப்பு நல்கிய ஆப்பிரிக்கர்கள் விடுதலை ஆனார்கள். 'உடல் உறுப்புகளாலும் இதயங்களாலும் நாங்கள் மனிதர்களாகிவிட்டோம்' என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள்.

பணப்பயிர் சாகுபடியில் நுழைந்திருந்த வெள்ளை முதலாளிகள் மாற்றுகளைத் தேடத் தொடங்கினார்கள். உலகில் எப்பகுதி மக்களை விடவும் பொருத்தமானவர்களாகத் தமிழர்கள் இருந்தார்கள்.

''தென்னாப்பிரிக்க கறுப்பர்களைப் போலவே உடல் பலத்திலும், பணிவிலும், அப்பாவிந் தன்மையிலும் அனைத்து குணாதிசயங்களிலும் ஆப்பிரிக்க அடிமைகளைப் போலவே எந்த துயரங்களையும் தாங்கிக் கொண்டு மிருகங்களைப் போன்று உழைத்துக் கொடுப்பதற்கு இந்தியாவின் தென்பகுதி தமிழர் எனும் இனத்தைக் கண்டுபிடித்துள்ளோம்...! அவர்கள் பட்டினியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ரொட்டித் துண்டுகளைத் தேடி நகரத்துக்கு செல்வதற்கும் தயாராகவிருக்கிறார்கள். அங்கே மழை என்ற சங்கதியே கிடையாது...! மண்ணெல்லாம் வெடித்து வாயைப் பிளந்து கிடக்கின்றன. ஊர்முழுக்க தூசி... காற்றடித்தால் தூசி மழைதான் பெய்யும்! தூசிப்புயல் வீசும்! ''நீங்கள் வேண்டிய மட்டும் அவர்களைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்'' (ப.47) என மெட்ராஸ் ஆளுநர் தோட்ட முதலாளிகளிடம் சொல்வார். இந்தியத் தமிழர்கள் தோட்டத் தொழிலாளர்களாக மாறியது இப்படி தான்.

**தப்பு அடித்தல்**

பறை எனும் இசைக் கருவி தமிழர்களின் ஆதியிசைக்கருவி. காலப்போக்கில் தீண்டாமை நுழைந்து போர்ப்பறை சாப்பறையாகி விட்டது. பயணம் தொடங்கும் போதே 'தப்பு' செய்து கொண்டு ஆள்கட்டி வரச் சொல்லி இருந்தான். இரண்டு இடங்களில் அது பயன்படுகிறது. ஒன்று வழிநடையில் காட்டு மிருகங்களிடம் இருந்து காத்துக்கொள்ள, மற்றது தோட்டத்தில் ஆட்களைத் திரட்ட. மன்னாரிலிருந்து மாத்தளை நோக்கிச் செல்லும் காட்டுப் பாதையில் சங்கிலி தப்படிக்க கட்டளையிட்டான். "காட்டுக்குள்ள நொழைஞ்சி போற நேரம் தப்படிச்சிக் கிட்டே போவணும்...! ஆன, சிறுத்த, பிலி, இன்னொம் காட்டுமுருகங்க இருந்தா பயந்து தூர ஓடிப்போகும்! நம்மகிட்ட எந்த சனியனும் வராது..! காட்டுப் பயணத்துல பாதுகாப்பு ஆயுதம் நமக்கு வேற ஏதும் கிடையாது" (ப. 68). பயணவழி காடாக, கரடு, முரடாக இருந்தது. பாதை என்று ஒன்று இல்லை.

"பாதையும் வெட்டி
பயணம் சென்றோம்"

எனப் பாடும்படிக்கு வழிகளை ஏற்படுத்திக் கொண்டு சென்றார்கள்.

**பயணக் கொடுமை**

வழியில் நடந்த துயரங்கள் எழுத்தில் வார்க்க முடியாத சோகச் சித்திரம். நடைபயணத்தில் சிலரைக் காணவில்லை. சங்கிலியும் சில இளைஞர்களும் பின்னோக்கித் தேடி வருகிறார்கள். இதோ அந்தக் காட்சி.

"அங்கே இருவர் நின்று கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் தரையில் கிடந்தார்கள்! 'என்ன மசக்கமா?' என்று ஓடினான் மாறப்பன். நின்று கொண்டிருந்த வாலிபர்கள் அழுதபடி சொன்னார்கள்." 'ரெண்டு பேரையும் இத்தோ தண்டி பொடையன் பாம்பு கடிச்சிருச்சி... பாம்ப பாத்த நாங்க இந்தத் தடியால அடியோ அடின்னு அடிச்சோம்... அது ஒடம்ப உப்பி உப்பி காட்டிட்டு காட்டுக்குள்ள ஓடிப் போயிரிச்சி... இவுங்க ரெண்டு பேரும் கொஞ்ச நேரத்துள்ள மசக்கம் போட்டு விழுந்துட்டாங்க. பேச்சுமூச்சு கிடையாது. தொட்டுப் பாருங்கண்ணே!' என்றான் ஒரு இளைஞன். இரண்டு பேரையும் புரட்டிப்புரட்டிப் பார்த்தான் மாறப்பன். அவனுடன் வந்தவர்களும் தூக்கிப் பார்த்தார்கள். நாடியைப் பிடித்துப் பார்த்தார்கள்... நெஞ்சில் காதை வைத்துக் கேட்டார்கள். இதயத் துடிப்பு நின்றிருந்தது. கைகால்கள் விறைந்து, கண்கள் அகலத்திறந்து கிடந்தன. விசம் ஏறி உடல்கள் நீலநிறமாயிருந்தன" (ப. 77). அவர்களைக் காப்பாற்றத்தான் முடியவில்லை. அடக்கம் செய்யவாவது செய்யலாம் என்றால் அதற்கும் வாய்ப்பு இல்லை. அப்படியே விட்டுவிட்டு காட்டு மிருகங்கள் பார்த்துக் கொள்ளும் என்று பயணத்தைத் தொடர்கிறார்கள்.

பயணம் நெடியதும் கொடியதுமாகி விட்டது. "மன்னார் காட்டிலிருந்து மதவாச்சி வரும் வரை பாம்புக் கடியினால் இறந்து போனவர்களே அதிகமாகவிருந்தனர். பட்டப் பகலில் சிறுத்தைகள் மனிதரை கவ்வி இழுத்துக் கொண்டு போவதைக்கண்டு அலறி சத்தம் போடுவதைத் தவிர வேறொன்றும் அவர்களால் செய்ய முடியாதிருந்தனர். புதருக்குள் பதுங்கியிருக்கும் சிறுத்தைகளும், புல்லுக்குள் பதுங்கியிருக்கும் பாம்புகளும் அவர்களது மரணத்தை நிர்ணயித்துக் கொண்டிருந்தன. அந்தக் கானகப்பயணத்தில் தடுமாறித் தத்தளித்து நகர்ந்து கொண்டிருந்தன. அவர்களுக்குப் பின்னால் மரணம் பத்தடி தள்ளியே வந்து கொண்டிருந்தது.

ஓடையில் நீர் அள்ளி சமையல் செய்த பின்னர், நீராடி வந்து சாப்பிட்டப் பின்னர். நீரோடையின் மேல் பகுதியில் காட்டெருமையின் அழுகிய சடலம் கிடப்பதைக் கண்டு வாந்தி எடுத்தவர்களும் வாந்தி பேதியால் இறந்தவர்களின் கதைகளும் இந்தப் பயணத்தில் மதவாச்சி காட்டில் நடந்ததை நினைத்து வருந்தினார்கள்". (ப. 90)

வழியில் அருவி போன்ற அமைப்பும் ஆறும் குறுக்கிட்டன. மக்கள் அப்படியே நின்றார்கள். சங்கிலியனும் அவன் கூட்டாளிகளும் யோசித்தார்கள். அருகில் இருந்த வேடர் பாலத்தில் மக்களை நடக்கச் சொன்னார்கள். சிலர் சென்ற நிலையில் பாரம் தாங்காமல் பாலம் உடைந்து, இருபது பேர்களுக்கு மேல் நீரில் அடித்துச் செல்லப்பட்டார்கள். அவர்களை மீட்கவோ, காக்கவோ வழியின்றி வேறு மரப்பாலம் வழியாக சங்கிலியன் அழைத்துச் சென்றான். வேலாயுதமும் அவனது நண்பர்களும் ஆவேசம் கொண்டார்கள். என்ன செய்வது?

"மதவாச்சிக்கும், அநுராதபுரத்துக்கும் இடைப்பட்ட காடுகளில் கிட்டகிட்ட மனித எலும்புக் கூடுகளும், மண்டையோடுகளும் கிடந்தன. "எலும்புக்கூடுக கெடக்குற தெசையிலத்தான் நாம நடக்கணும்... அதுகதான் நமக்கு பாத காட்டும்!" என்றான் சங்கிலியன்." (ப.109)

"மண்டை ஓடுகள் எல்லாமே நமது மக்களுடையது தான். மரணத்தைச் சுமந்து கொண்டு, காடுகளைக் கடந்து கொண்டிருப்பவர்களின் மூச்சு நின்று போகின்ற இடங்களிலெல்லாம் இந்த ஓடுகளும், கூடுகளும்




பஞ்சம் பிழைக்க வந்த சீமை, வரலாற்று நெடுங்கதை,
முசிவலிங்கம் | குறிஞ்சித்தமிழ் இலக்கிய மன்றம்,
கொட்டகலை | 2015 | ரூ.650/-

குவிந்து விடுகின்றன. இவை சிலோன் பூர்வீக வாசிகளின் கூடுகளாயிருக்க முடியாது''. *(ப.109)*

இச்சூழலில் துயரம் பெருக்கெடுக்க,

**பாதையிலே வீடிருக்க**
**பழனிச்சம்மா சோறிருக்க...**
**எருமத் தயிரிருக்க**
**ஏண்டி வந்தோம் கண்டி சீமை** (ப.110)

என மக்கள் பாடும் நிலை உருவானது.

வேலாயுதம், பழனி, சீரங்கன், காசி போன்ற இளைஞர்களுக்கு யோசனை சொல்லி வழி நடத்தும் பெரியவராக இருந்த 'சன்னாசி' காட்டில் நடக்க முடியாமல் பின்தங்கி விட்டார். அவரைத் தேடிச் சென்றால் உட்கார்ந்த அவரால் எழ முடியவில்லை. அவரது சிறிய வயது மகன் தூக்கிவர முயல்கிறான். முடியவில்லை. எல்லோரும் விசனப்படுகிறார்கள். மகனக்கூட விட்டு நடக்கலாம் என்றால் முன்பண முதல் போட்ட சங்கிலியன் மிரட்டி முடியாது எனச் சண்டை போடுகிறான். வேறு வழியின்றி சன்னாசி எனும் பெரியவரை நடுக்காட்டில் விட்டு விட்டு பயணத்தைத் தொடரும் பரிதாபநிலை.

''தங்களது வழிப்பயணத்தில் எத்தனையோ பேர்களின் உடல்களை காட்டுச் செடிகளுக்குள் மறைத்து வைத்து விட்டு வந்த வேலாயுதத்துக்கும் நண்பர்களுக்கும், சன்னாசி உயிரோடு மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு வந்து கொடுமையிலும் கொடுமையாகவிருந்தது; எல்லோரும் மௌனமாக நடந்தார்கள். நடைச்சத்தமும், சன்னாசியின் மகனின் விசும்பலுமே வழி நெடுகிலும் கேட்டுக் கொண்டிருந்தது. பையனை இறுகப் பிடித்துக்கொண்டே நடந்தார்கள். அவன் எந்த சந்தர்ப்பத்திலும் திரும்பி ஓடும் மன நிலைலேயே தயாராகவிருந்தான்'' *(ப.116)*. மன்னாரிலிருந்து மாத்தளையை அடையும் காலக்கணக்கெடுப்பு அதிர்ச்சி தந்தது.

''திருச்சி மாவட்டம் பெரம்பலூர் கிராமத்து, காளி கோவில் மைதானத்தில் ஆயிரம் பேர்கள் என்று சங்கிலியன் சொன்னான். பாம்பனுக்கு வந்ததும் தொள்ளாயிரம் பேர்கள் என்றான். மன்னார் கரை இறங்கியதும் நூற்றி ஐம்பது கடலோடு போக, எழுநூற்று ஐம்பது என்று மன்னார் இறங்கு துறையில் சொன்னான். இப்போது... நாளந்தை தங்குமிடத்தில் ஐந்நூற்று ஐம்பது'' *(ப. 132)*.

**கம்பளி**

தோட்டத் தொழிலாளர்களின் தவிர்க்க முடியாத புழங்கு உடையாக கம்பளி திகழ்கிறது. நாவலில் கம்பளி பற்றிய பதிவு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

''கம்பளி என்பது ஒன்பது அடி நீளமாகவும், மூன்றரை அடி அகலமாகவும் நெய்யப்பட்ட போர்வையாகும். அது பருத்தி போன்ற துணி என்று எவரும் நினைத்துவிடக்கூடாது. செம்மறியாட்டு மயிர்களை இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்து, இந்தியாவில் அதற்கென செய்யப்பட்ட நெசவுயந்திரத்தில் நெய்து எடுப்பார்கள். மயிர் ஒவ்வொன்றும் ஒட்டிக் கொள்வதற்காகப் புளியங்கொட்டையில் பசை செய்து பூசி இருப்பார்கள்.

அந்த நீண்டப் போர்வையை இரண்டாக மடித்து, 'கொங்காணி' செய்து தலையில் மாட்டிக்கொள்வார்கள். கம்பளிப் போர்வை கெண்டைக்கால் வரை தொங்கும் குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு கதகதப்பான சுகத்தைத் தரும். நனைந்து விட்டால் ஐந்து, ஆறு இராத்தல் பாரமாகிவிடும். கம்பளி, மழையில் தொழிலாளர் நனையாமல் இருப்பதற்காகவும், குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவுமே அறிமுகப்படுத்தப்பட்டது.

கம்பளி இன்னுமொரு முக்கிய தேவைக்கும் அவசியப்பட்டது. ஆரம்பக் காலத்தில் காடுகளை அழித்துக் கொண்டிருந்த போது உயிர் கொல்லும் குளவிப் பூச்சிகள், தேனிப்பூச்சிகள், இன்னும் பெயர் அறியாத விஷ வண்டுகள் காட்டுக்குள் முதன்முதலாக நுழையும் மனிதர்களைத் தாக்குவதற்கு படையெடுத்து வரும் அந்தத் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கம்பளி மயிர்களில் சிக்கிக் கொண்ட பூச்சிகள், திமிற முடியாமல் மாட்டிக் கொள்ளும் போது ஏனைய பூச்சிகள் பயந்து பறந்து போய்விடும்! கம்பளியில் மாட்டிய பூச்சிகளைத் தரையில் அடித்து மிதித்துக் கொன்று விடுவார்கள். கம்பளிபோடாத வெய்யிற் காலங்களில் குளவிகளால் கொட்டப்பட்டு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலைத் தளத்திலேயே இறந்து போனார்கள்''. *(ப.137)*

தோட்ட மக்களுக்கு கம்பளி மிக அவசியப்பட்ட அன்றாட வாழ்க்கைத் தேவைகளுள் ஒன்றாகிவிட்டது. படுக்கை விரிப்பாகவும், விருந்தினர்களுக்கு ஜமக்காளமாகவும், பந்திப் பாயாகவும் பயன்பட்டது. ''கல்யாணத்துக்குப் போனாலும் கம்பிளியும் கையுமாய் போ'' என்ற பழமொழி உருவானது. மேலும் கங்காணிகள் பொய்க்கணக்கு எழுதவும் கம்பளிகள் பயன்பட்டதை நாட்டுப்பாடல்கள் பதிவு செய்து உள்ளன.

**பாரம் கொடுத்தல்**

கங்காணிகள் தாங்கள் கூட்டி வந்த கூலித் தொழிலாளர்கள் தோட்ட உரிமையாளர்களான ஆங்கிலத் துரைகளிடம் கையளிப்பது பாரம் கொடுத்தல் எனப்பட்டது. ''இப்ப ஒங்க எல்லாரையும் சீமான் தொரகிட்ட பாரம் குடுக்கப் போறேன்...! என்றான் சங்கிலியன்''. *(ப.134)*

**மலையக வாழ்வு**

மலையடிவாரங்களிலேயே கோப்பி தேயிலைத் தோட்டங்கள் அமைந்திருந்தன. அவற்றின் அருகிலேயே தொழிலாளர் தங்குமிடங்களும் அமைக்கப்பட்டன. அருகில் இருந்தால் அதிகம் உழைப்பைப் பெறலாம் என்பதுதான் நோக்கம். தோட்டங்களை முதலாளிகள் 'எஸ்டேட்' என்றார்கள். தங்களது விருப்பமான பெயர்களை ஆங்கிலத்தில் சூட்டிக் கொண்டார்கள். கங்காணிகள் தொழிலாளர்களிடம் கலந்து கொண்டு தமிழில் பெயர்கள் வைத்துக் கொண்டார்கள் ''கல்மதுரை, தென்மதுரை, தங்க மலை, கல்லு மலை, மேமலை, புலிகண்டாமலை, ஆனைக்காடு, மந்திமலை, குரங்குமலை, பிசாசு மலை, உச்சிமலை, மல்லிகைப்பூ, சந்திர காந்தி, சூரிய காந்தி, குடமல்லி, கொத்தமல்லி, ராசா தோட்டம், ராணிதோட்டம், அந்தோனிமலை, மேகமலை, சாஞ்சமலை, பழுங்கு மலை, வழுக்குப்பாறை என்றெல்லாம் பெயர்கள் அமைந்தன. இவை பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே இருந்தன. ஆங்கிலத்தில் அல்பிய, பிரஸ்டன், டிரேட்டன், விக்டன், மேபீல்ட், பெயாபீல்ட், தோர்ன்பீல்ட், ப்ளக்வேட்டர், ப்ரெஸ்வோட்டர். எனப் பெயர்கள் இட்டார்கள். *(ப.140)*

**கோப்பித் தோட்டப் பணிநிலைகள்**

கோப்பித்தோட்ட பல்வேறு பணிகள் பல நிலைகளில் நடைபெறும். தொழிலாளர்கள் காலநிலை, பயிர் பருவங்களுக்கு ஏற்ப பணிகளைச் செய்வர்.

**பழம் பறிப்பது**

"ரத்தச் சிவப்பு பழங்களையும், சிவப்பேறிய பழங்களையும் பறித்துக் கொண்டு போனார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், கை தவறியேனும் பச்சைக் காய்களைப் பறித்து விட்டால், தொலைந்து போய்விடும் அன்றைய நாள் சம்பளம்..! சம்பளம் மட்டுமல்ல, அடியும் உதையும் சரமாரியாகக் கிடைக்கும். பெண்களென்று கூட பார்க்காமல், தலை மயிரைப்பிடித்து குலுக்கி ஆட்டுவார்கள்.

குட்டிச் சாக்கு நிறையும்படி பழங்களைப் பறித்து பொட்டலுக்குக் கொண்டு வர வேண்டும். பொட்டலில் குட்டிச்சாக்கு பழங்களை கோணிச்சாக்கில் கொட்டி நிறைப்பார்கள். சுமந்து செல்லும் அளவுக்கு பாரத்தை நிறைப்பார்கள்" *(ப. 147)*

"கோண கோண மலையேறி
கோப்பிபழம் பறிக்கையிலே
ஒருபழம் தப்பிச்சின்னு
ஒதைச்சானாம் சின்னத்தொரை...!" (ப. 146)

என நாட்டார் பாடலில் இடம்பெறும் அளவுக்கு பழம்பறித்தல் முக்கியத்துவம் பெற்றதாகிறது.

**பழங்களைக் கீழே எடுத்து வருதல்**

மலையிலிருந்து சுமக்கும் அளவு பழங்களைச் சாக்குகளில் கட்டி மலையடிவாரத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். கர்ப்பிணிப் பெண்களும் கூட மிகக் கொடிய இப்பாதையில் நடந்தே தீர வேண்டும். "மலையுச்சிலிருந்து அடிவாரம் வரைக்கும் ஐம்பது யார் தூரத்துக்கு ஒரு வேலையாள் நிற்பான். கோப்பி மூட்டை அப்படி அப்படியே ஒவ்வொருவரது தோள் பட்டைக்கும் மாறிக் கொண்டிருக்கும்.

மலையுச்சியிலிருந்து அடிவாரம் வரைக்கும் படிக்கட்டுகளோ, பாதையோ கிடையாது. நடையில் உண்டாகிய ஒத்தையடி பாதைகள் உருவாகியிருக்கும். பாதை வழுக்கும் தன்மை கொண்டது. எவரும் வழுக்கி விழுந்தால், உச்சியிலிருந்து உருண்டு அடிவாரத்தில் போய்தான் கிடப்பார்கள். மூட்டைச் சுமையோடு வழுக்கி விழுந்தவர்களில் எத்தனையோ வேலையாட்கள் கழுத்து முறிந்து செத்துப்போன சம்பவங்களும்" *(ப. 148)*.

அடுத்து, காபிகொட்டையை ஊரவைத்து இடிப்பது முக்கியமான பணி. "இடிச்ச கொட்டைகள தொட்டிக்குள்ள கொட்டி கழுவணும், தோல் நீக்கணும்... இடிபடாத கொட்டைகளை தனியா பொறுக்கி சேக்கணும்... வைக்கணும்." *(ப.155)*

**நோய்கள்**

தோட்டத் தொழிலாளர்களை புறநோய்கள் போலவே அகக்கொள்ளை நோய்களும் தாக்கி அழித்தன. காலரா, மலேரியா தாக்கி இறந்தவர்கள். வேலையை விட்டு விட்டுத் தாயகம் பயணப்பட்டவர்கள் ஏராளம். "கோப்பிச் செய்கையில் ஈடுபட்ட தொழிலாளர்களையும், தோட்ட உரிமையாளர்களையும் சொல்லி வைத்தாற் போல் கொலரா நோய் தாக்கியது. இந்த நோயை கொள்ளை நோய் என்றார்கள். தொழிலாளர்கள் சாரி சாரியாக மந்தைகளைப் போல இறந்து கிடந்தார்கள். புதைப்பதற்கு சக தொழிலாளர்கள் கிடைக்காததால், அந்தந்த இடங்களில் அழுகிய பிணங்கள் துர்நாற்றத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தன. அந்த நாட்களில் வெள்ளைக்கார சீமைத்துரைமார்களும் பல பேர் கொள்ளைநோய்க்கு பலியானார்கள். முதலாவது கோப்பித் தோட்டத்தை உண்டாக்கிய ஜோர்ஜ்பேர்ட் துரையும், கொலரா நோயினாலே இறந்து போனார். தொழிலாளர்கள், நோய்வந்தால், வைத்தியசாலைக்குப் போகின்ற பழக்கம் அறவே கிடையாது. பக்கத்து கிராமங்களிலிருக்கும் சிங்களவரிடம் நாட்டு வைத்தியம் செய்வதும், பேய் விரட்டும் 'கட்டடி'யிடம் போவதுமாக இருந்தார்கள். அதனால் இவர்களிடையே நோய் கூடுதலாகப் பரவத் தொடங்கியது." *(ப.161)*

**பாஸ்புத்தகம் துண்டுமுறை**

கோப்பிக் காலம் முடிந்து தேயிலைக் காலம் தொடங்கியதும் புதிய பணியிடத்தில், புதிய முதலாளியிடம் கையளிக்கப்பட்டனர். தொழிலாளர் வாழ்வில் பாஸ் புத்தகம், துண்டு முறை முதலியன முக்கியமானவை.

"கடனைக்காட்டி பயமுறுத்தும் கங்காணியின் கணக்குப் புத்தகத்தை பாஸ் புத்தகம் என்பார். அந்தப் புத்தகத்தில் கூலித் தொழிலாளர்கள் தென்னிந்தியாவில் எந்த கிராமத்தில், எந்த ஜில்லாவில், எந்த தாலுக்காவில், எந்த ஜாதியில் என்ற விபரமும் அவர்கள் பாம்பனிலிருந்து புறப்பட்ட நாள்முதல் மாத்தளைக்கும் கண்டி முகாமுக்கும் வந்த நாள் வரையிலான விபரங்கள் எழுதி வைக்கப் பட்டிருக்கும்.

தொழிலாளிக்கு வழங்கப்பட்ட ரேசன் அரிசி, பருப்பு, கொச்சிக்காய், உப்பு, புளி, மாசி, கறுவாடு, எண்ணெய் என்ற உணவுப் பொருட்களின் விபரங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கும் அந்த புத்தகம் எந்தநேரமும் கங்காணியின் உடலில் ஒட்டியிருக்கும் கோட்டுப்பைக்குள்ளேயே வைத்திருப்பான்" *(ப.169)*.

"ஒரு ஆளை இன்னொரு தோட்டத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டுமானால், அந்த ஆள் தற்போது வேலை செய்த தோட்டத்துக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகை, ஒரு துண்டு சீட்டில் எழுதப்பட்டிருக்கும். அது கடன் அட்டையாக கருதப்படும். அந்தத் துண்டோடுதான் தொழிலாளர்கள் புதிய தோட்டத்துக்குப் போவார்கள். அதைத் துண்டுமுறை என்பார்கள்". *(ப.170)*

"கடன் துண்டு, கூப்பன் மாதிரி கடுதாசி அட்டையாகவிருக்கும் ஒரு தோட்டத்துக்குப் போகவிருக்கும் தொழிலாளருக்கு தனித்தனியே எழுதிக் கொண்டு வந்திருக்கும் கடந்துண்டுகளை கங்காணி வாசித்தான். கடனை கட்டி கட்டி, இன்னும் தீராதகடன் இருப்பதாக கங்காணி வாசிக்கும் போது, தொழிலாளர் கூக்குரலிட்டனர்". *(ப. 203)*

**பெண் வதை**

தோட்டத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் படும் இன்னல்கள் சொல்லி மாளாது. தனிப்பெண்கள் சக தொழிலாளர்களால் இன்னலுக்கு உள்ளாவது, துரைமார்கள் விரும்பும் பெண்களை கங்காணிகள் வற்புறுத்திக் கொண்டு செல்வது, கங்காணிகளும் வரம்பு மீறி பெண்களை பாலியல் வல்லுறவு செய்வது என அவை நீளும்.

"கோப்பிக் காட்டுல, தேயிலக் காட்டுல வேல செய்றப்போ அவனுங்களுக்கு புடிச்சிருந்தாதான் அந்திக்கு கங்காணி கிட்ட சொல்லி, அவனுங்க கூடாரத்துக்கு கூட்டிக்கிட்டு வரச்சொல்லுவானுங்க... கறுப்பா, காப்பிரி மாதிரி இருக்குற பொம்பளைகளதான் அவனுகளுக்கு

புடிக்கும்... கங்காணி வாச சவுக்காரம் குடுத்து, குளிச்சுப்புட்டு, சுத்தமா கூடாரத்துக்கு வரச் சொல்லுவான்.

அப்படி அவனுக ஆசப்பட்ட உருப்படிகள கூட்டிக்கிட்டு போர கங்காணி கிட்டேயும் அந்த அப்பராணி பொம்பள படுக்கணும்.'' (ப.174)

இப்படியான அக்கிரம வரிசையில்தான் பூபதியின் மனைவி சரஸ்வதி அம்மை கண்ட தருணத்தில் கங்காணியும் அடியாட்களும் துரையிடம் தூக்கிச் செல்ல, பிரச்சனை முற்றி பூபதி கொலையாகிறான். வேலாயுதமும் அவன் நண்பர்களும் கங்காணியையும் கூட்டாளிகளையும் பலி தீர்த்து மூன்று கொலை விழுகிறது.

**சாங்கு ஊதுதல்**

பறையடித்து மக்களைத் திரட்டியது போல அதிகாலை வேலைக்கு ஆயத்தப்படுத்த சங்கு ஊதுவது வழக்கத்தில் இருந்தது. தொழிற்சாலைகளில் வேலை தொடங்கும், முடியும், இடைவேளை நேரங்கள் சங்கூதி அறிவிப்பு ஆவது போல தோட்டங்களில் சங்கு ஊதுவர். கங்காணிக்கு வேண்டிய நபரே சங்கூதுவார். பின்னர் கங்காணிக்கு உதவியாளாகி, புதிய கங்காணி ஆகிவிடுவதும் உண்டு.

''கொப்பி தோட்டத்து சங்கை, சிங்கமலை அடிவாரத்தில் இருக்கும் சுரங்கத்துக்கு மேலே நின்றுதான் அம்மாசி ஊதுவான். சின்ன தரவளை, பெரிய தரவளை, மல்லிகைப்பூ, டம்பறை, மறுபக்கம் பளிங்குமலை, அந்தோணி மலை வரை கேட்கும். இந்த சங்கு சத்தத்தைத் தொடர்ந்துதான் மற்றைய தோட்டத்து சங்கு சத்தங்கள் கேட்கத் தொடங்கும்''.(ப.225)

**சீட்டரிசி**

உழைப்பாளிகள் தங்களின் சுக, துக்கங்களுக்குத் தேவையான பண்டம் பாத்திரங்களுக்காக சேமிப்பது வழக்கம். நாள், வாரம், மாதம் என்ற கணக்கில் 'சீட்டு' சேர்ந்து தேவையானவர்கள் அதனை எடுத்துப் பயன்படுத்துவர். இன்றைக்கும் சிறந்த சிறுசேமிப்பாக இது விளங்குகிறது. தோட்டத் தொழிலாளர்களின் 'சீட்டரிசி' நடைமுறையினை நாவல் பதிவு செய்துள்ளது.

''அருக்காணி கல்யாணம்... மரணம்... போன்ற நிகழ்வுகளுக்கு இவர்கள் இவ்வாறே சீட்டரிசி சேகரித்துக் கொள்வார்கள். கிழமையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு சுண்டு வீதம் 'சீட்டு' பிடிக்கும் வழமை ஒரு பாரம்பரியமாக வளர்ந்து வந்தது''. (ப. 235)

**லயம்**

லயம் என்பது தோட்டத்தொழிலாளர்களின் குடியிருப்புக் காலனி. லயத்து வீட்டு அறையை 'காம்பரா' என்றார்கள். இவை போத்துக்கீசியச் சொற்கள். சிங்களவர்கள் இப்படி அழைத்ததால் தமிழ்த் தொழிலாளர்களும் அப்படியே அழைத்தனர்.

**தண்டனையும் வெகுமதியும்**

தவறு செய்யும் தொழிலாளர்களை - கங்காணியை எதிர்ப்பது, உரிமைகளைக் கேட்பது, பெண்களை மோசமாக நடத்துவதை எதிர்ப்பது... என எது செய்தாலும் கடுமையாக உயிர்ப்பறிப்பு தண்டனை தரப்பட்டது. அன்றாடம் வேலைக் காட்டில் அடிப்பது, உதைப்பது, அவமானப்படுத்துவது வாடிக்கை. அதே நேரத்தில் மேற்படி தண்டனை என்பது உயிரோடு மரத்தில் கட்டிவைத்து மிருகங்களுக்கு இரையாக்குவது. அல்லது சாகடித்து மிருகங்களிடம் போட்டுவிடுவது. இப்படிச் செய்யும் கங்காணிகள், அடியாட்கள் நிர்வாகத்தால் கூலி உயர்வு வெகுமதி தந்து பாராட்டப்பட்டார்கள்.

''அந்த தோட்டத்தில் புலிகண்டாமலை என்ற கொழுந்து காடு இருக்கிறது. சிறுத்தைகள் மேயும் அந்த மலையில், எதிர்த்துப் பேசும் தொழிலாளர்களைக் கொண்டு போய் மரங்களில் கட்டிவைத்து விட்டு வந்து விடுவார்கள். இரவில் சிறுத்தைகள் வந்து, அடித்து உடலை இழுத்துக் கொண்டு போய்விடும், இவ்வாறு கொலைகள் செய்யும் அடியாட்களுக்கு துரையும் கங்காணியும் மாறிமாறி இரட்டைக் கூலி கொடுப்பார்கள்''. (பக். 238 - 239)

**சுமைதாங்கி கல்**

தோட்டத்தில் கர்ப்பிணிகளாக இருக்கிற பெண்களுக்கு தனிச் சலுகை இல்லை. தப்பித்தவறி இடறி விழுந்தால் மரணம் தான். இப்படி மரணங்கள் நேரும் போது அவர்கள் நினைவாக சுமை தாங்கி கல் நடுவது தோட்டத் தொழிலாளர் வழக்கம்.

''கர்ப்பஸ்திரி கந்தையா சம்சாரம் (பழனியம்மா) கற்பாறையில் வழுக்கி விழுந்து, அங்கேயே சீவன் போய், கம்பளியில் தொட்டில் கட்டி வீட்டுக்கு சுமந்து செல்கிறார்கள்...! பரட்டையன் தாயோழி...! கர்ப்பஸ்திரிகளுக்கு ரோட்டோரம் நெரகுடுக்க மாட்டான்... கர்ப்பஸ்திரி... பழனியம்மாவுக்கு நடந்து காவு இல்லை... கொல...! என்று அரப்புலி சத்தமிட்டான்'' (ப. 271). என்று சாவும் அதற்கு எதிரான மக்கள் எழுச்சியும் நாவலில் பதிவாகிறது. சுமைதாங்கி பற்றி மூத்தவர் வீரமலை வழி சொல்லப்படுகிறது.

''பழனியம்மா தூக்கிச்சொமந்த பாரத்த எறக்கி வைக்காம போயிட்டா... அவ ஞாவகமா சன நடமாட்டம் செய்ற பாதையில, மூனு ரோட்டு, நாலு ரோட்டு பிரியிற சந்தியில 'சொமதாங்கி கல்லு' நாட்டி வைக்கணும்! என்றார். வாலிபர்களுக்கு 'சொமதாங்கி கல்லு' பற்றி புரியவில்லை... சுமைதாங்கி கல் நாட்டி வைக்கும் மரபு ரீதியிலான பழக்கம், தென்னிந்தியாவில் தமிழ்க் கிராமங்களிலிருந்து வந்தது. கர்ப்பவதிகள் பிரசவிக்காமல் இறந்து போனால் அவர்களுக்காக இப்படி ஞாபகார்த்தக் கல் நாட்டுவார்கள். அந்தப் பாதைகளில் சுமைகள் சுமந்து செல்லும் வழிப்போக்கர்கள் தங்களது சுமையை, அந்தக் கல்மேல் இறக்கி வைத்து விட்டு சிறிது நேரம் இளைப்பாறிச் செல்வார்கள். தனிக்கல்லில் ஐந்தடி உயரம் எட்டு இஞ்சி அகலம் தூண் செதுக்கி இரண்டு தூண்களை மூன்றடி இடைவெளியில் நாட்டி, அதன் மேல் இன்னொரு தூணை ஏற்றி வைத்திருப்பார்கள். அது சுமையை வைப்பதற்கும், தூக்குவதற்குமான உயரத்தில் நாட்டப்பட்டிருக்கும்''. (ப.273) இந்த நினைவினை,

"சொந்தம் உறவு என்று
சுமைதாங்கி நின்னமாதா!
சுமைய இறக்காம நீ
சொர்க்க லோகம் போனதென்ன!
என்ன பெத்த மாதா உனக்கு
சுமைதாங்கி கல்லு வச்சோம்!"

என்கிறது நாட்டார் பாடல்.

**நம்பிக்கைகள்**

மனிதர்கள் எங்கு வாழ நேரிட்டாலும் அவர்களுடன் இருப்பது நம்பிக்கைகள். இப்புதினத்திலும் ஆங்காங்கே நம்பிக்கைகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. இரவு தனியாகப் பயணம் செய்பவர்களை எதுவும் அண்டாதிருக்க அவர்களுடன் சில பொருட்களை வைத்து அனுப்புவர்.

"காட்டு வழியாக வீட்டுக்குப் போகும் அவனுக்கு, பேய், பிசாசு அண்டாதிருக்க சோற்றுப் பொட்டலத்தில் கரிக்கட்டை, தகரத்துண்டு வைத்திருந்தாள்". (ப. 195)

புலம் பெயர்ந்து வருபவர்கள் தங்களுடன் தங்கள் சாமிகளையும், தல விருட்சங்களையும் கொண்டு வருவது மரபு. நாவலில் இந்த நம்பிக்கை இடம் பெறுகிறது.

"முனியாண்டி கோவிலுக்குச் சென்றான். ஒரு குத்துக்கல், ஒரு சூலாயுதம், வளர்ந்து வரும் ஒரு ஆலங்கன்று, பச்சைப் பந்தல், கூரையோ, கட்டிடமோ அமைந்த கோவிலல்ல. அந்தக் காலத்தில், இவர்களுக்கு முன்பு இந்த தோட்டத்துக்கு வந்தவர்கள் தாங்கள் கொண்டு வந்த ஆலம் பழத்து விதைகளைத் தூவி கன்று உண்டாக்குவார்கள். தங்களது நண்பர்கள், உறவினர்கள் தோட்டங்களில் வேலை செய்யும் போது இறந்து போகும் இடங்களில் இவ்வாறு ஆலங்கன்றுகளை நாட்டுவார்கள். காடு மேடுகளில் தாங்கள் பயப்படும் இடங்களிலெல்லாம் ஆலங்கன்றுகளை நாட்டி, சூலாயுதம் நாட்டு வைப்பார்கள். அது ஏதாவது ஒரு காவல் தெய்வமாக மாறிவிடும். கருப்பு சாமியோ, காளியோ, மாடனோ, முனியாண்டியோ, வனத்து சின்னப்பரோ, ஏதாவதொரு காவல் தெய்வம் உண்டாக்கப்பட்டிருக்கும்" (ப.212). நாட்டார் சாமிகள் அதன் பரவல் குறித்து இதன் மூலம் உணரலாம்.

**உணவு**

மக்கள் வாழ்வின் உயிர் நாடி உணவு. பயண வேளையிலும் ஊருக்கு ஊரு உணவு வேறுபாடுகள் காணப்படுவது நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பயணம் புறப்படும் முன் கோழி அடித்து விருந்து வைப்பது வழி நெடுக தானிய உணவுகளைப் புசித்தும் காய் கனிகளைத் தின்றும் பசியாறுவது, வெள்ளைக்கார துரை ஆட்டுக்கறி, மாட்டுக்கறி தின்பவர்களுக்கு தனித்தனியே உணவு பரிமாறுவதும் சித்திரிக்கப்படுகிறது.

"லண்டன் தொரமார்களுக்கு விருப்பமான ஊரு... தேனுல ஊற வச்ச மான் இறைச்சி கெடைக்கும்... இந்த ஊரு சனங்களுக்கு சோளம், நெல்லரிசி எல்லாம் தாராளமா நம்ம சீமானுங்க குடுத்து வச்சிருக்காங்க...இவுங்க ஆக்கி வச்சிருப்பாங்க... நாம சாப்புட வேண்டியது... அம்புடுதான்." (ப. 107)

சிங்களவர்களின் பிரதான உணவாக சோளம் விளங்குவது சுட்டப்பெறுகின்றது.

"அன்று இரவு சாப்பாடாக சோளக்கதிர்களை, உப்பு நீர் சேர்த்து அவித்து வைத்திருந்தார்கள். ஒருவர் எத்தனை கதிர்களை வேண்டுமானலும் கடித்துச் சாப்பிடலாம். சோளம் சிங்கள குடிவாசிகளின் பெருமதிமிக்க உணவாகும். கம்பு, கேவர், குரக்கன், மக்கா சோளம்யாவும் தென்னிந்தியர்களின் பிரதான உணவாக இருந்தது". (ப.107)

"நாளத்தை தங்குமிடத்துக்கு நூறு மறாத்தல் பெறுதியான மரை இறைச்சி கிடைத்திருந்தது. கட்டுவலையில் சிக்கிய மரை ஒன்றை கிராமத்தான் ஒருவன் வெட்டித்துப்பரவு செய்து பெரிய காசுக்கு தங்கு மடத்துக்கு விற்றிருந்தான். மரை இறைச்சி, மான் இறைச்சியைப் போலவே இருக்கும்". (ப. 130)

அதே போல அடித்தள மக்களின் விருப்ப உணவான கருவாடு பல இடங்களில் இடம் பெறுகிறது. தோட்டத்தில் வழங்கப்படும் ரேஷன் பற்றிய பதிவு:

"ஒரு கூலியாளுக்கு உப்பு ஒன்னேகா றாத்து, மாசி அரறாத்த, நெத்திலி ஒரு றாத்த... பருப்பு ஒரு கொத்து... பயிறு ஒரு கொத்து... காய்ஞ்ச கொச்சிக்கா முக்கா றாத்த. அரிசி ஒரு பொச, (புசல்) புளி ஒன்னேகா றாத்த, ஈர வெங்காயம் (சின்னவெங்காயம்) ஒரு றாத்த, கொத்தமல்லிகா கொத்து" (ப.195).

**கூலி**

தோட்டத் தொழிலாளிகளுக்கு அவர்களின் உழைப்புக்கேற்ற கூலி எப்போதும் கிடைத்தது இல்லை. சொற்ப கூலியையும் பொய்க்கணக்குச் சொல்லி கங்காணிகள் எடுத்துக் கொண்டனர். பல ஆண்டுகள் உழைத்தும் கடனாளிகளாக ஊர்த்திரும்ப இயலாநிலை. உரையாடலில் அங்கு இருந்த கூலி நிலவரம் இடம் பெறுகிறது.

"மொத வருசம் முடியிற வரைக்கும் ஒரு ஆம்பளைக்கி 10 சிலிங்கு குடுக்குறாங்க. 18 வயசுக்கு மேல இந்த சம்பளம் கெடைக்குது 18 வயதுக்கு கீழ 8 சிலிங்கு குடுக்குறாங்க. பன்னெண்டு வயசு, பதினஞ்சி வயசு பக்கிகளுக்கு (பையன்கள்) 6 சிலிங்கும், பத்து பன்னெண்டு வயசு பக்கிகளுக்கு 5 சிலிங்கும் குடுக்குறாங்க".

"பொம்பளைக்கு, அதாவது 18 வயசுக்கு மேல 6 சிலிங்கும், 15, 18 வயசு புள்ளைகளுக்கு 5 சிலிங்கும் 12, 15 வயசு புள்ளைகளுக்கு 4 சிலிங்கு, 10, 12 வயசு புள்ளைகளுக்கு 3 சிலிங்கும் குடுக்குறாங்க. இதுதான் தொரமாரு சங்கம் குடுக்கும் சட்டப்படி சம்பளம்" (பக்க.188). சிலிங் என்பது இலண்டன் நாணயம்.

**திருமணம் - பெண் கேட்டல்**

நாவலில் தொழிலாளர்கள் திருமணம் போன்ற வாழ்க்கை நிகழ்வுகள் மிக எளிமையாக நடைபெறுகின்றன. கோயிலில் மாலை மாற்றி, மஞ்சள் கயிறு கட்டிக்கொண்டால் அதுதான் திருமணம். அருக்காணி திருமணமும், வேலாயுதம் சரஸ்வதியை மறுமணம் செய்து கொள்வதும் சித்திரிக்கப்படுகின்றன. பெண் கேட்டு உறுதி செய்வதை இப்படி நடத்துகிறார்கள்.

"மூக்கன் வீட்டில் கம்பளியை விரித்துப் போட்டார்கள். பெரியவர், தனது சம்சாரத்தோடும், வேலாயுதத்தோடும் நான்கு கூட்டாளிகளையும் கூட்டிக்கொண்டு போனார் முறைப்படி ஒருவர் கேள்வி கேட்டார், "என்ன சங்கதியாவந்திருக்கீங்க?"

"ஒங்க வூட்ல ஒரு பூவு இருக்கிறதா கேள்விப் பட்டோம். அந்த பூவ எம் பேராண்டி காத்தானுக்கு கேட்டு வந்தோம்" என்றார் பெரியவர்.

அவ்வாறு சம்பிரதாயக் கதைகள் நான்கு வீடுகளிலும் நடந்தன. (நான்கு திருமணப்பெண்கள்) ஒரு புதன் கிழமை, பங்குனிமாதம், நான்கு மாப்பிள்ளைகளுக்கும் 4ம் நம்பர் மலையிலிருக்கும் வழிப்பிள்ளையார் கோவிலில் கலியாணம் நடந்தேறியது''. (ப.213)

**நாட்டார் பாடல்கள்**

நாவல் முழுக்க நாட்டர் வழக்காறுகள் விரவிக் கிடக்கக் காணலாம். மக்களின் துன்ப துயரங்களின் வடிகாலாக நாட்டார் பாடல்கள் திகழ்கின்றன. தோட்டத் தொழிலாளர் வாழ்வின் ஓர் அங்கமாக இப்பாடல்கள் விளங்குகின்றன. முழுப் பாடல்களும் தராமல் சூழலுக்கு ஏற்ப சில வரிகளில் நாவலில் ஆங்காங்கே இவை இடம் பெறுகின்றன.

தோட்டங்கள் இருக்கும் மலைதான் தொழிலாளர்க்கு எல்லாமும் ஆக விளங்குவதை,

**கூனி அடிச்ச மலை**
**கோப்பி கன்னு நட்ட மலை**
**அண்ணனை தொலைச்ச மலை**
**அந்தோ தெரியுது பார்...!** (ப. 138)

வாழ்வாதாரமாகவும் அதே நேரத்தில் உறவுகளைக் காவு கொடுத்த பலி பீடமாகவும் மலை அமைந்துவிடுகிறது. சொல்லொணா துயரங்கள் கொடுமைகள். உயிர் மட்டுமாவது மிஞ்சுமா என்ற கவலையை,

**"கண்டி கருப்பாயி**
**கம்பளத்து மீனாட்சி**
**ஒத்தக்கட ராமாயி - ஒன்**
**உசுரு இருந்தா போதுமடி...!"** (ப. 167)

எனப்பாடி தீர்க்கின்றனர். கூலிக் கணக்கு எப்படியும் தொழிலாளி வயிற்றில் அடிக்கும் பிணக்காகவே இருந்திருக்கிறது.

**ஓடி ஓடி கொழுந்தெடுத்தேன்**
**ஒரு கூடை கொழுந்தெடுத்தேன்**
**பாவி கணக்கப்புள்ளை**
**பத்து ராத்தல் சொல்லுறானே...!** (ப. 184)

இது கணக்கப்புள்ளை காரியம் என்றால், கங்காணி கொடுமை இதோ.

**தோட்டம் பெரளியில்லே**
**தொரை மேலே குத்தமில்லே...**
**கங்காணிமாராலே**
**கணபெரளியாகுதய்யா...!** (ப. 240)

வேலை நேரம் எப்படியெல்லாம் வதைக்கிறது என்பதை,

**தண்ணி கருத்திருச்சி**
**தவளசத்தம் கேட்டிருச்சி**
**புள்ளையும் அழிதிரிச்சி**
**புண்ணியரே வேலை விடு...!** (ப. 257)

இவை தோட்டத் தொழிலாளர் வாழ்வின் விளைச்சல். நாட்டார் மரபில் பரவி உள்ளன. அறியப்படாத வரலாற்றை மலையகத் தமிழர்களின் வாழ்க்கை நெடும்பயணத்தின் இலக்கிய சாட்சியாக மு.சிவலிங்கம் 'பஞ்சம் பிழைக்கவந்த சீமை' அமைகிறது.

26.12.2021 அன்று புதுச்சேரி 25-வது தேசிய புத்தகக் கண்காட்சி வெள்ளி விழாவில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., புத்தக நிறுவனத்திற்கு சிறந்த புத்தக விற்பனையாளர் விருதினை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர்.தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள், புதுச்சேரி முதலமைச்சர் திரு.ந.ரங்கசாமி அவர்கள், மற்றும் முனைவர்.பா.இராமலிங்கம் ஆகியோரிடமிருந்து நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., புதுச்சேரி & விழுப்புரம் கிளை மேலாளர் S.முருகேசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்

₹ 125/-

₹ 135/-




₹ 95/-




₹ 225/-

₹ 200/-




₹270/-

₹ 260/-

₹ 240/-

₹ 50/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

# மோரியர்

**ஆ.கார்த்திகேயன்**

மோரியர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் சில இடங்களில் பயின்று வருகிறது. இச்சொல்லின் சமஸ்கிருத வடிவம் 'மௌரிய' என்பதாகும். மௌரிய, மௌரிய அரசன் அசோகன் ஆகியவை வரலாற்று மாணவர்களுக்கு நன்கு தெரிந்த தொடர்கள். மோரியர் என்ற சொல் தெரியாது. இவ்வடிவம் வரும் பாடல் வரிகளைக் காண்போம். அகநானூற்றில் பாடல் 69-இல் மோரியர் என்ற சொல்லாட்சி வந்துள்ளது. இப்பாடலில் தலைவன் கடந்து சென்ற மலையைப்(வரை) பற்றிக் கூறுகையில், "விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர் / பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த/அறையிகந் தகன்றனர் ஆயினும்" என்று வருகிறது. மோரியர்களின் தேர் விண்ணைத் தொடும் அளவு நெடிதாக இருந்தது. அத்தேரின் உருளைகள் பொன்னால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. அவை செல்லும் பொருட்டு மலையைக் குறைத்தனர். அத்தகைய மலையைத் தலைவன் கடந்து சென்றான்.

அகநானூற்றில் இன்னொரு பாடலில் கிட்டத்தட்ட இதே பொருளில் மோரியர் என்ற சொல்லாட்சி வந்துள்ளது. "முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர் / தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு / விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து / ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த" (அகம்-281) இங்கும் அதே கருத்து வலியுறுத்தப்படுகிறது. மற்றொரு பாடலிலும் (அகம்-251). மோரியர் பாறையைக் குடைந்து பாதையமைத்து தென்திசை நோக்கி வந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. "மாகெழுதானை வம்ப மோரியர் / புனைதேர் நேமி யுருளிய குறைத்த / இலங்கு வெள்ளருவிய அறை". இவை அகநானூற்றில் வரும் செய்திகள். புறநானூற்றில் கூட மோரியர் என்ற சொல் வந்துள்ளது.

**மௌரிய என்ற சொல் பிராகிருத மொழியில்**

மோரிய என்றாகிறது. சமஸ்கிருத ஔகாரம் பிராகிருத மொழியில் ஓகாரமாகத் திரியும். .இந்த

இலக்கண விதிப்படியே மௌரிய என்பது மோரிய என்றாகிறது. இனி, ஔகாரம் ஓகாரமாகத் திரிந்து வரும் வேறுசில தமிழ்ச் சொற்களைப் பார்ப்போம்.

**கௌசிக > கோசிக**

சிலம்பில் கோசிகன் என்ற கதைமாந்தர் வருகிறார். கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் கோசிகன் கோவலனைச் சந்திக்கிறான். மாதவி தந்த கடிதத்தைக் கோவலனிடம் கொடுக்கிறான். மாதவியின் நிலை குறித்தும், கோவலனின் பெற்றோரின் நிலை குறித்தும் உரைக்கிறான். இந்தச் சிறிய பங்குதான் கோசிகனுக்கு உள்ளது.

இங்கே கோசிகன் என்ற சொல் பிராகிருதத்திலிருந்து தமிழுக்கு வந்தது.கோசிகன் என்ற பாத்திரம் இராமாயணத்திலும் வருகிறது. இச்சொல்லிலும் ஔகாரம் ஓகாரமானதைக் காணலாம். இதுவும் பிராகிருதச் சொல்லே.

**கௌதம் என்ற பெயர்ச்சொல்லும் 'கோதம' என்று**

மாறுகிறது. கம்பராமாயணத்தில் "கோதமனை வேண்ட மற்று அவை தவிர்த்து" (அகலிகை-23-1) என்று வரும் இவ்வரியில் ஔகாரம் ஓகாரமாகி கௌதம் என்பது கோதமன் என்றானது. பிராகிருத மொழியில் 'கோயம என்ற வடிவம் கிடைக்கிறது. கௌசிக (கோசிக), கௌதம (கோயம) ஆகிய சொற்கள் சமணம், புத்தம், இந்து சமயங்களில் வழங்குவனவாகும். கௌசல்யா என்பதும் கோசலை என்று மாறுவதை நோக்குக.

**மௌனம் > மோனம்**

மோனம் என்ற சொல்லும் பிராகிருதச் சொல்லே. மௌனம் என்ற சொல் நாவடக்கம், பேச்சின்மை, யோகம் போன்ற பல பொருளில் வந்துள்ளது. சித்தர்கள் பாடல்களில் மோனம் என்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. "மோனம் என்பது ஞான வரம்பு" என்பது கொன்றை வேந்தன். மெய்ஞானத்தின் உச்சம் மௌனம் ஆகும். "மோனம் கைவந்தவர்க்கு சித்தியும் கைகூடும்" என்பர் திருமூலர். "மோனநிலையில் முத்தி உண்டாம் என்றே" என்று இடைக்காட்டுச் சித்தர் தெரிவிக்கிறார். சித்தர்கள் சமஸ்கிருத மூலச் சொல்லைத் தவிர்த்து பிராகிருத வடிவத்தைப் பயன்படுத்தினர்.

**மோனமும் பிராகிருதச் சொல்லே. ஔகாரம் ஓகாரமாவதை**

இங்கேயும் காணலாம்; யோகம் போன்ற புதிய பொருளிலும் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

**கௌபீன > கோவண**

கோவணம் என்ற தமிழ்ச்சொல் இடைக்காலத் தமிழில் மிகுதியாகக் கையாளப்பட்டது. பக்திப் பாடல்களில் சிவபெருமான் கோவணதாரியாக பல இடங்களில் சித்திரிக்கப்படுகிறார்

"கோணன் மாமதி சூடியோர் கோவணம் நாட்டில் வாழ்க்கை" (அப்பர் தேவா.5.05.1) என்றும் "துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ" (திருவா. திருச்சாழல்-2) என்றும் இடைக்கால தமிழில் கோவணம் என்ற சொல் வந்துள்ளது. திருமுறை இலக்கியத்தில் பலமுறை இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

கோவணம் கோமணமாகவும் பேச்சுத் தமிழில் வழங்குகிறது. கோவணன்,கோவணவன் என்றெல்லாம் புதுப்பெயர்கள் சிவனைக் குறிக்க படைக்கப்பட்டன காண்க.

**சௌமியா > சோமி**

சௌமியா என்ற சொல் பிராகிருத விதிப்படி சோமி என்றானது. "சத்தியும் சோமியும் பார்மகளும்" (திருவா. திருப்பொற்சுண்ணம்) என்ற பாடல்வரியில் சௌமி > சோமி என்று மாறியது. சோமி என்றால் மென்மையான என்பது பொருள். நன்மை பயக்கக்கூடிய கடவுள் சோமி ஆகும்

**ஔஷதம் > ஓடதி**

ஔஷதம் என்ற சொல் மருந்து என்று பொருள்படும். இச்சொல்லிலுள்ள ஔகாரம் கெட்டு 'ஓடதி' என்று தமிழில் வழங்கியுள்ளது. (காண்க: கதிரைவேற்பிள்ளை அகராதி, பக் 1126). தற்காலத் தமிழில் ஔடதம் என்றும் வழங்கப்படுகிறது. பாலியிலும் ஓஸத 'மருந்து' ஓசதி 'மருந்து செடிகள்' என்றும் சொற்கள் வழங்குகின்றன.

பிராகிருத மொழியில் 'ஓஸட' (osadha) என்று வழங்குகிறது. இங்கும் ஔகாரம் ஓகாரமாவதைக் காணமுடிகிறது.

**கௌரி > கவுரி**

கௌரி என்ற சொல் கவுரி என்று

சிலம்பில் வருகிறது. இங்கு ஔகாரம் 'அவு' என்றாகிறது. மேற்கண்ட சொற்களுக்கு மாறாக இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

**சௌந்தர்ய > சுந்தர**

சௌந்தர்ய என்ற சொல்லில் உள்ள ஔகான் தமிழில் உகரமாக மாறி சுந்தர என்றானது. பிராகிருத மொழியிலும் சுந்தேர என்று மாறி ஔகாரம் உகரமானதைக் காண முடிகிறது. "சுந்தரச் சுண்ணத் துகளொடு அளைஇ / சிந்துபு பரிந்த செழும்பூ... சேக்கை" (சிலப்-அந்திமாலை:42). என்று வருகிறது. அழகான சுண்ணப் பொடியுடன் பூக்களும் சிந்திக் கிடந்த மலரணை என்ற சூழலில் சுந்தர என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பிற்காலத்தில் அதிக அளவில் பயன்படுத்தப் படுகிறது. சவுந்தர என்ற சொல்லும் காணப்படுகிறது. இங்கு சௌ என்பது 'அவு' மாற்றம் அடைந்தது. கௌரி என்ற சொல் கவுரி என்றானதைப் போல. ஔகாரம்பழந்தமிழில் ஒரு சில சொற்களில் மட்டுமே வந்துள்ளது. பிராகிருத மொழியில் சமஸ்கிருத ஔகாரம் ஓவாகவும், அவு என்றும், உவாகவும் மாற்றம் அடைகிறது. வரருசியின் பிராகிருத இலக்கணத்தில் இதற்கான விதிகள் உள்ளன. ●

கட்டுரை

# கிராமிய மேம்பாட்டுக்கான புதிய பாதை

க. பழனித்துரை

குஜராத் மாநிலம் அமுல் என்ற மகத்தான நிறுவனம் இயங்கிவரும் ஆனந்த் என்ற ஊரில் இந்திய பால் மனிதர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வர்கீஸ் குரியானால் உருவாக்கப்பட்ட கிராமிய மேலாண்மைக் கல்விக் கழகத்திற்கு குரியன் அவர்களின் 100வது ஆண்டு பிறந்த தின நிகழ்வில் பங்கேற்று பேச அழைக்கப்பட்டிருந்தேன். நவம்பர் 2021, 21ஆம் தேதி நிகழ்ந்த கருத்தரங்கில் 'கிராமிய மேம்பாட்டிற்கான நிபுணத்துவச் செயல்பாடுகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் தான் இந்தக் கட்டுரை.

'கிராமிய மேம்பாடு' என்பது ஓர் அறிவார்ந்த மக்கள் செயல்பாடு. இந்தச் செயல்பாடு மூன்று நிலைகளில் நடைபெற வேண்டும். ஒன்று, கிராமிய மேம்பாட்டுக்கான அடிப்படை வசதிகள் கட்டமைக்கப்படல் வேண்டும். இரண்டு, கட்டமைத்த வசதிகள் மற்றும் அமைப்புக்களை மக்கள் முறையாகப் புரிந்து, கண்காணித்து தங்கள் பங்களிப்பைச் செய்து பயன்படுத்தப்படல் வேண்டும். மூன்று, கிராம மக்களை மேம்பாட்டுச் செயல்பாடுகளில் பங்கேற்கத் தேவையான புரிதலை, விழிப்பை ஏற்படுத்தி பொறுப்புமிக்க குடிமக்களாக செயல்பட வைத்தல் வேண்டும். அத்துடன் கிராமங்கள் என்பது ஒரு நாகரீகத்தின் அடையாளமாக விழுமியங்களுடன் ஓர் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்த வரலாற்றை மீட்டெடுத்து உலகுக்கு முன்மாதிரியாக வாழத் தேவையான சூழலை உருவாக்க வேண்டும். இந்தக் கிராமிய வாழ்க்கையின் அடிப்படை என்பது இயற்கையைப் புரிந்து, இயற்கையுடன் இயைந்து வாழும் ஓர் உன்னதமான உயர் மானுட வாழ்வு முறையைக் கட்டமைத்திட வேண்டும். இந்தச் செயல்பாடுகள் அத்தனையும் ஒரு மக்கள் இயக்கச் செயல்பாடாக உருவாக்க வேண்டும். இந்தச் செயல்பாடுகளை கட்டமைக்கத் தேவையான ஒரு மக்கள் கல்வியை உருவாக்கி அதை மக்களிடம் கொண்டு சேர்த்து மக்களை தங்கள் வாழ்க்கைக்கு பொறுப்பேற்க வைத்துச் செயல்பட வேண்டும். இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட வேண்டும். இந்தச் செயல்பாடுகளின் மூலம் ஒரு சமத்துவ சமூகத்தை உருவாக்கி மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளையும் விழுமியங்களையும் பின்பற்றி செயல்படும் குட்டிக் குடியரசுகளை உருவாக்குதலாகும். இந்த மாபெரும் மாற்றங்களைக்

கொண்டுவரத் தேவையான புதிய தலைமைத்துவத்தை உருவாக்கி செயல்பட வைக்க வேண்டும். இந்த மாற்றத்திற்கான பாதை என்பது எதை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டுமென்றால் உலகில் தலைசிறந்த நாகரீகங்களோடு தலைசிறந்த நாகரீகமாக விளங்கிய நம் நாகரீகத்தின் விழுமியங்களைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கான பார்வையை உருவாக்கியவர்கள் சுவாமி விவேகாநந்தர், பகவான் அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி, ஜே.சி.குமரப்பா, மகாகவி பாரதி போன்றோர்கள். இந்தக் கிராமிய வாழ்வில் அரசியல் சமத்துவம் மட்டுமின்றி, சமூக சமத்துவம், பொருளாதார சமத்துவம், கலாச்சார சமத்துவம் அனைத்தும் இருந்திடல் வேண்டும். இந்தச் செயல்பாடுகள் என்பது அரசை முன்னிறுத்தி செயல்படுவது அல்ல, மக்களை முன்னிறுத்திச் செயல்படுவது. சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவது தான் தலையாயப் பணி என்று மேற்கூறிய அனைவரும் கருதினார்கள்.

இவை அனைத்தும் எதிர்கால இந்தியா எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையின் கருத்தாக்க வெளிப்பாடுகள். இந்த சிந்தனைப்போக்கு வலுவாக இருந்தாலும், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகளும், சுதந்திரப் போராட்டம் முடிவுறும் நிலையில் இந்திய சமூகம் சந்தித்த சவால்களும், இந்தியா என்ற நாட்டை கட்டமைப்பதற்கு அரசு என்ற இயந்திரம் வலுவாக கட்டமைக்கப்பட வேண்டிய தேவையை உருவாக்கிவிட்டன. ஒரு வலிமையான இந்தியா உருவாக்கப்பட வேண்டும் என்ற பார்வையில்தான் அனைத்து நடவடிக்கைகளும் இந்திய சுதந்திரம் அடைந்தவுடன் மேற்கொள்ளப்பட்டன. இந்திய நாடு உருவாக்கம், தேசம் கட்டுதல், இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பதும் ஒருமைப்பாட்டை உருவாக்குவதும், அரசு அமைப்புக்களை உருவாக்கி வலுப்பெறச் செய்வதுதான் இந்தியாவின் அன்றைய தேவையாக இருந்தது என்பதை யாரும் மறுக்க இயலாது. சுதந்திரம் அடைந்து இந்தியா உருவானபோது, இந்தியா என்ற ஒரு நாடு மக்களாட்சியில் நிலைத்து நின்றுவிடும் என்று எந்த மேற்கத்திய அறிஞரும் எதிர்பார்க்கவில்லை. அந்த அளவுக்கு குழப்பமும், ஏற்றத்தாழ்வுகளும், அறியாமையும் இந்த நாட்டை ஆக்கிரமித்து இருந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது வலிமையான பாரத அரசாங்கத்தை வலிமையாக கட்டமைத்து உருவாக்க எண்ணிய நம் தலைவர்கள் நம் சமூகத்தின் வலிமையை குறைவாக எடை போடவில்லை என்பதனையும் நாம் மறந்துவிடக்கூடாது. அதேபோல் சமூகத்தை பலமிழக்கச் செய்ய வேண்டும் என்றும் எண்ணவில்லை. மாறாக வலிமையான பாரதம் கட்டமைத்து எழுப்பப்படும்போது அதுவும் மக்களாட்சி முறையில் செயல்பட வைக்கப்படும்போது, அரசாங்கத்தை மக்கள் தங்கள் கண்காணிப்பின் மூலம் மக்களின் மேம்பாட்டுக்கு செயல்பட வைத்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில்தான் அரசைக் கட்டமைத்தார்கள் நம் தலைவர்கள்.

ஆனால் இந்தியா என்ற நாடு பாகிஸ்தான் பிரிவினையைச் சந்தித்து, அடுத்து இந்தியாவில் 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை சுதந்திர இந்தியாவுடன் இணைக்கும் பணி நடைபெறும் சூழலில்; இந்திய மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை என்பது தாழ்வுற்றிருந்தது. இதை மனதில் கொண்டு வலுவான அரசாங்கத்தை உருவாக்கி அதன் மூலம் சமூகப் பொருளாதார செயல்பாடுகளை முன்னெடுத்து புதிய இந்தியாவை உருவாக்கிட முனைந்தனர் நம் தலைவர்கள். அவர்களின் தூய்மையான எண்ணத்தை யாரும் சந்தேகிக்க முடியாது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய அரசானது மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு பொறுப்பேற்று மக்களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டது. இதில் ஒன்றை மட்டும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய அரசாங்கம் எதன்மேல் கட்டப்பட்டது என்றால் வெள்ளையர்கள் தங்களின் ஆதிக்கத்தை செலுத்த உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் மேல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிர்வாகக் கட்டமைப்பு மக்களை சுரண்டும் தன்மை கொண்டது, ஆதிக்கம் செலுத்தும் தன்மை கொண்டது. அந்த அரசுக் கட்டமைப்பை வைத்து இந்திய மக்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்த முனைந்ததுதான் பல சிக்கல்களுக்குக் காரணம் என்று மேம்பாட்டுச் சிந்தனையாளர்கள் தங்கள் ஆய்வின் மூலம் தெரிவிக்கின்றன. இருந்தபோதிலும் திட்டங்கள் மேல் திட்டங்களைப் போட்டு மக்கள் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு செயல்பட்டது நமது மத்திய மாநில அரசுகள் என்பதையும் மறுக்க இயலாது. இப்படி அரசு இயங்கி வந்ததன் மூலம் மக்களின் சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றம் குறிப்பாக பெரும்பகுதி ஏழை மக்களிடையே வந்துவிட்டது. அனைத்தும் அரசாங்கத்தின் பொறுப்பு. நாம் அரசு தரும் பயன்களைப் பெறும் பயனாளிகள். பயன்கள் கிடைக்கவில்லை என்றால் அரசிடம் மனுச் செய்து சலுகைகளைப் பெறும் மனுதாரர் என்ற நிலைக்கு மக்கள் வந்ததன் விளைவு அரசு இயந்திரம் எஜமானாக மாறிக்கொண்டு விட்டது. மக்கள் ஏவல்புரிவோராக மாறி சுயத்தை இழந்து அரசாங்கத்தை சார்ந்து வாழும் மனோபாவத்தைப் பெற்று விட்டனர்.

அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பெரும் இடைவெளி ஏற்பட்டு விட்டது. அரசாங்கத்தின் திட்டங்களுக்கு குறைவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து ஒரு 50 ஆண்டு காலத்தில் 2000க்குமேல் திட்டங்களை கிராமப்புறங்களில் நடைமுறைப் படுத்தியிருக்கின்றன; மத்திய மாநில அரசு என்று உலக வங்கி தன் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளது. திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதிக்கும் குறைவில்லை. இருந்தும் கிராம மக்களின் வாழ்க்கை அறிவியல்பூர்வமாக மானுட வாழ்வு எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ வேண்டிய சூழலில் அவர்கள் வாழ்க்கை இல்லை என்ற நிதர்சனமான உண்மையை அரசு புரிந்து கொண்டது. சுதந்திரம் பெற்றபோது 42 கோடியில் இருந்த மக்கள் தொகை 136 கோடிக்கு இன்று வந்துவிட்டது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்பது 8% வந்தபோது 80 கோடி மக்கள் உணவுப் பாதுகாப்புக்கு அரசை நம்பும் சூழலில் வாழவேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றனர் என்றால், நாம் அடைந்த வளர்ச்சி எங்கு சென்றது? என்ற கேள்விக்கு விடை தேட வேண்டிய நிலைக்கு அரசாங்கம் வந்துவிட்டது. இந்தச் சூழல்தான் ஒரு புதிய உள்ளாட்சி அமைப்பை அரசாங்கமாக ஏற்படுத்தி அதில் மக்களை பங்கேற்க வைத்து ஆளுகையையும், மேம்பாட்டுச் செயல்பாடுகளையும் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதற்கான புதிய முயற்சியில் ஈடுபட்டது. அதன் விளைவு தான் 73வது மற்றும் 74வது அரசியல்சாசனத் திருத்தச் சட்டங்கள். அது மட்டுமல்ல, அதனைத் தொடர்ந்து சமூகப் பொருளாதார மேம்பாட்டை உரிமைகளாக அரசு சட்டபூர்வமாக்கித் தந்து விட்டது. இதன் அடிப்படை நோக்கம் விளிம்புநிலை மக்கள் எல்லா உரிமைகளையும் வென்றெடுக்க இந்த உள்ளாட்சிச் செயல்பாடுகள் உதவிகரமாக இருக்கும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டவைகள்.

இதில் மிக முக்கியமானது என்னவென்றால் அடிப்படையில் புதிய சூழலில் உருவாக்கப்பட்ட உள்ளாட்சியின் அடிப்படைகளையும், மேம்பாட்டு உரிமைகள் அனைத்தும் சட்டங்களாக உருவாக்கப்பட்டிருப்பதும், இவைகளைத் தாண்டி உரிமைகள் சட்டத்துடன் திட்டங்களையும் பெரிய அளவு நிதி ஒதுக்கீட்டில் புதிய வாய்ப்புக்கள் உள்ளாட்சிக்கு வருகின்றன என்ற செய்திகளை யாருக்குச் சென்று சேர்க்க வேண்டுமோ அவர்களுக்கு கொண்டு சேர்க்கவில்லை. அது மட்டுமல்ல, புதிய சூழலில் இந்தப் புதிய உள்ளாட்சியை எப்படிப் பார்க்க வேண்டும், அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற புரிதல் பெரும்பான்மை மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் குறிப்பாக விளிம்புநிலை மக்களுக்கும் கிடையாது. ஆகையால்தான் புதிய உள்ளாட்சி அரசாங்கமாக உருவாக்கப்பட்டு இருபத்து ஐந்தாண்டுகளைக் கடந்தும், அது என்னென்ன விளைவுகளை உருவாக்க வேண்டுமோ அவைகளை உருவாக்க இயலவில்லை. இருந்தும் புதிய உள்ளாட்சியால் பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் நல்ல தலைமைத்துவமும், நல்ல சமூகங்களும் இருக்கின்ற இடங்களில் மிகப் பெரிய மாற்றங்கள் நடைபெற்றுள்ளதை ஆய்வுகள் நமக்குக் கொண்டு வந்து தந்துள்ளன.

இந்தக் காலக்கட்டத்தில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியவைகள் பல உள்ளன. ஒன்று அரசாங்கத்திட்டப் பயனாளியாக இருந்த மனோபாவத்திலிருந்து உரிமைகள் சார்ந்து செயல்படத் தேவையான புதுச் சிந்தனையை மனோபாவத்தை மக்களிடம் உருவாக்கி, அரசுத் திட்டங்களை மக்கள் தேவைகளில் பொருத்திட மக்கள் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுதல் என்பது முதன்மையானது. இதற்குத் தேவையான புரிதலை முதலில் உள்ளாட்சியில் செயல்படும் தலைவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அடுத்து அந்தப் புரிதலை பொதுமக்களிடம் மக்கள் பிரதிநிதிகள் ஏற்படுத்த வேண்டும். இந்தப் புரிதலுடன் செயல்பட்டால்தான் மக்கள் அதிகாரப்படுத்தப்படுவார்கள். புதிய உள்ளாட்சி என்பது பொதுவாக மக்களை குறிப்பாக விளிம்புநிலை மக்களை அதிகாரப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்டது என்பதையும் நாம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அடுத்து இன்னொரு மிக முக்கியமான புரிதல் நம் உள்ளாட்சித் தலைவர்களுக்கும், மக்களுக்கும் தேவைப்படுகிறது. அது இன்று யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்திய அரசியல்சாசனம்தான் மூன்று அரசாங்கங்களுக்கும் அதிகாரங்களைத் தருகிறது. மத்திய அரசும் இந்திய அரசியல் சாசனம் தரும் அதிகாரங்களை வைத்துத்தான் செயல்படுகிறது. மாநில அரசாங்கங்களும் இந்திய அரசியல்சாசனம் தரும் அதிகாரங்களை வைத்துத்தான் செயல்படுகின்றன. அதேபோல்தான் உள்ளாட்சிகளும் அரசியல்சாசனம் தருகின்ற அதிகாரங்களை வைத்துச் செயல்பட வேண்டும். ஆனால் உள்ளாட்சிகள் அப்படிச் செயல்படுவதாகத் தெரியவில்லை. மாநில அரசுகள் கொண்டு வந்திருக்கும் உள்ளாட்சிச் சட்டங்கள் என்பது அரசியல் சாசனம் தந்த வரையறைக்குட்பட்டுத்தான் உருவாக்கப் பட்டுள்ளன. எனவே இதற்கு அரசியல் சாசனத்தின் பின்புலம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டால் நம் உள்ளாட்சித் தலைவர்கள் தங்கள் பார்வையையும் செயல்பாடுகளையும் விரிவாக்கிக் கொண்டு செயல்படுவார்கள்.

ஊரக வளர்ச்சிக்கு அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டும். நல்ல சாலை வசதிகள் வேண்டும், நல்ல பள்ளிக்கூடம் தேவை, நல்ல சுகாதார நிலையங்கள் தேவை, நல்ல கூட்டுறவு அமைப்புக்கள் தேவை, நல்ல சத்துணவுக் கூடங்கள் தேவை, கிராமங்களுக்கு மின்சார வசதி தேவை, தூய்மையான குடிதண்ணீர் தேவை, பிராணிகள் நலம் பேண பிராணிகள் சுகாதார நிலையங்கள் தேவை, நல்ல பஞ்சாயத்து அலுவலகம் தேவை, மழை பெய்தால் மழைநீர் சேமிக்க நல்ல குளங்கள், குட்டைகள் போன்ற நீர்நிலைகள் பராமரிப்புத் தேவை, அந்த நீர்நிலைகளுக்கு பெய்யும் மழைநீர் சென்றடைய தேவையான வரத்துக் கால்வாய் தேவை, அதேபோல் உபரி நீர் வெளியேற போக்குக் கால்வாய் தேவை, இதன் வழியே தங்குதடையின்றி நீர் செல்ல சிறு பாலங்கள் தேவை, கழிப்பிடம் இல்லாக் குடும்பங்களுக்கு பொதுக் கழிப்பிடம் தேவை. இதுபோன்று இன்ன பிற வசதிகள் கிராம மேம்பாட்டிற்கு அடிப்படை என்பதை எவரும் மறுக்க இயலாது.

ஆனால் அதைவிட மிக முக்கியம் எது என்றால் இந்த வசதிகளைப் பற்றிய புரிதல், அவைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற புரிதல், அந்த வசதிகளை எப்படி சமூகம் தக்க வைத்து, அந்த வசதிகளுக்கு சொந்தக்காரராக மாறுவது என்ற புரிதலும் உருவாக்கப்பட்ட வசதிகளை அந்த சமூகம் பொறுப்பேற்று கவனித்து, பராமரித்து, உபயோகப்படுத்தத் தேவையான விழிப்புணர்வும், பார்வையும், தெளிவும் தேவை. இவைகள் இல்லை என்றால் அந்த வசதிகளால் அந்தச் சமூகத்திற்கு எந்தப் பலனும் கிடையாது. அந்த வசதிகள் உருவாக்க வேண்டிய விளைவுகள் எதுவும் மக்களுக்குக் கிடைக்காது. கிராமத்தில் உள்ள மக்கள் அத்தனை வசதிகளுக்கும் பொறுப்பேற்று, அவைகளை தமதாக்கி, பராமரித்து உபயோகப்படுத்தக் கற்றுக் கொண்டால் கிராமங்கள் உண்மையிலேயே உன்னதமான வாழ்விடமாக மாறிவிடும். அதற்கு கிராமத்தில் கூட்டுப் பொறுப்பு உருவாக்கப்படல் வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை இந்த வசதிகளை மத்திய அரசும் மாநில அரசும் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே வருகின்றன. ஆனால் இந்த வசதிகள் கிராமங்களில் முறையாக பராமரிக்கப்படுகின்றனவா, முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா அதற்கான பொறுப்புக்களை கிராமங்களில் ஏற்க மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா, உருவாக்கப்பட்ட வசதிகளின் முக்கியத்துவம் அவசியம், பயன்பாடு பற்றிய புரிதல் மக்களிடம் உருவாக்கப்பட்டதா என்பது இன்றுவரை கேள்வியாகவேதான் இருக்கின்றது. இருந்தபோதும், இந்த வசதிகள் உருவாக்குவதை அரசாங்கம் நிறுத்தவில்லை. இன்று அந்த வசதிகள் உருவாக்கும் பணி என்பது இன்று எங்கு வந்து நிற்கிறது என்றால் ஜல்லி, மண், இரும்பு, சிமெண்ட் கொண்ட வேலைகள் தான் கிராம மேம்பாட்டுச் செயல்பாடுகள் என்ற சிந்தனையில் அனைவரும் செயல்பட்டு வருகின்றனர். இந்தச் செயல்பாடுகளில் ஒரு லாபம் ஒரு சிலருக்கு கிடைத்துக்கொண்டே இருக்கிறது. இதன் விளைவு கிராமங்களில் பொதுச் சொத்துக்கள் நிறைய உருவாக்கப்படுகின்றன, ஆனால் அவற்றிற்கு யாரும் பொறுப்பேற்றுக் கொள்வதில்லை, அவைகள் அனைத்தும் அரசாங்கச் சொத்துக்கள் என்ற சிந்தனையில் வாழ்வதுதான் பெரும் சோக நிகழ்வு. எனவே அவைகள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படுவதும் கிடையாது, பயன்படுத்துவதும் கிடையாது. இதன் விளைவு பொதுப்பணம் விரயம், பெருமளவில் வசதிகள் உருவாக்கம் என்ற பெயரில் நடைபெறுகின்றன. மக்களுக்குத் தேவையான வாழ்க்கை மேம்பாடு பற்றிய பெருமளவு விழிப்புணர்வை ஏற்படுத்த தவறி விட்டோம். இதன் விளைவு தனிமனித மேம்பாட்டுக்கான அரசின் நலத் திட்டங்கள் அரசு தரும்போது அதைப் பெற்று பயன்பெறும் பயனாளிக் கூட்டமாக மக்கள் தங்களை உருவாக்கி பழக்கிக் கொண்டு விட்டார்கள். இந்தப் பயனாளிச் சிந்தனை என்பது சுயமரியாதைக்கு எதிர்மறையானது. இந்தச் சிந்தனை தன்மானத்தை இழக்கச் செய்யும் சிந்தனை. இந்த சொல்லாடல்கள் முன்னேற்றச் சிந்தனைக்கு எதிரானது என்பதை நாம் எவரும் புரிந்து கொள்வதில்லை. இதன் விளைவுதான் மக்களை முன்னிலைப்படுத்துவதற்குப் பதில், அவர்களை கடைசி நிலையில் பயன்கள் பெறுவோராக வைத்துவிட்டோம்.

அதே நேரத்தில் நாம் இன்னொரு முக்கியமான நிகழ்வையும் பார்க்கத் தவறிவிடக்கூடாது. எங்கெல்லாம் சமூகம் விழிப்புடன் இருந்ததோ அங்கெல்லாம் இந்த வசதிகளைப் பயன்படுத்தி சிறந்த கிராமமாக மாற்றப்பட்டு நல்ல மேம்பட்ட சமூக பொருளாதார வாழ்க்கை நடைபெறுகிறது பல கிராமங்களில் என்பதையும் நாம் கணக்கில் எடுக்கத் தவறக் கூடாது. இதன் விளைவுதான் ஒருசில மாவட்டங்கள் முன்னேறிய மாவட்டங்களாக மாறிவிட்டன. மற்றவை பின்தங்கியவைகளாகக் காட்சியளிக்கின்றன. இன்னொரு முக்கியமான காரணத்தை நாம் பார்க்கத் தவறக்கூடாது. எங்கெல்லாம் ஒரு நல்ல தலைமை கிடைத்ததோ அங்கு மேம்பாடு என்பது வெள்ளிடைமலை. கிராமத்திற்கான தலைமையாக இருக்கலாம், சமூகத்திற்கான தலைமையாக இருக்கலாம், கட்சிக்கான தலைமையாக இருக்கலாம், நிர்வாகத்திற்கான தலைமையாக இருக்கலாம், வணிகத்திற்கான தலைமையாக இருக்கலாம், தொழிலுக்கான தலைமையாக இருக்கலாம், கல்விக்கான தலைமையாக இருக்கலாம், அந்தந்த இடங்களுக்குக் கிடைக்கும் சட்டமன்ற உறுப்பினராக

இருக்கலாம், பாராளுமன்ற உறுப்பினராக இருக்கலாம். இந்தத் தலைமைகள்தான் மற்றொரு காரணியாக விளங்குகின்றது. அதைவிட முக்கியமாக இந்த தலைமையை எப்படி சமூகங்கள் உபயோகப்படுத்திக் கொள்கின்றன என்பதையும் பொறுத்ததுதான் முன்னேற்றம் என்பது நடைபெறுகிறது.

இவற்றையும் தாண்டி மக்கள் ஆங்காங்கே உழைப்புக்கு எப்படித் தயாரிக்கப்படுகிறார்கள், மேம்பாடு அடைவதற்கு எப்படி உணர்வு பெற்று செயல்படுகின்றார்கள் என்பதைப் பொறுத்தும் வளர்ச்சியும் மேம்பாடும் சமூகங்களுக்குக் கிடைக்கின்றன.

காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகள் தேசிய அரசாங்கத்தை பெரிதாக வலுவாகக் கட்டி அனைவருக்கும் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் கொண்டுவர எண்ணிய செயல்பட்ட பெரும்பாலான நாடுகளில் ஒரு நிலைக்குமேல் சமூக மேம்பாட்டையும் பொருளாதார வளர்ச்சியையும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்க்க முடியவில்லை என்பதை ஆமோதித்து மாற்றுப்பாதைக்கு முனைந்தன. அந்த நேரத்தில்தான் பொருளாதார புதிய பாதை தனியார் மயம், தாராளமயம், உலகமயம் என்ற முழக்கத்துடன் செயல்பட உருவாக்கப்பட்டது. அதே காலக்கட்டத்தில் வளரும் பொருளாதாரம் அனைவருக்கும் சென்று சேரவேண்டும். அதற்கு அதிகாரங்களை பரவலாக்கி மக்களை அதிகாரப்படுத்தி மக்களை பயனாளி என்கின்ற நிலையிலிருந்து, மேம்பாட்டில் பங்குதாரர், பங்காளி என்கின்ற நிலைக்கு தயார் செய்து அனைத்து மேம்பாட்டுச் செயல்பாடுகளிலும் பங்கெடுக்க வைக்க வேண்டும், அதற்கு ஆளுகை அதிகாரத்தை பரவலாக்கி மக்களுக்கு அருகாமையில் ஒரு அரசாங்கத்தை உருவாக்கினார். இது ஏறத்தாழ 80 நாடுகளில் பெரிய அளவில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த முன்னெடுப்புகளுடன் அடுத்த ஒரு செயல்பாடு பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டது. அதுதான் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவது. மக்களாட்சியை விரிவுபடுத்தாமல், ஆழப்படுத்தாமல், அகலப்படுத்தாமல் முன்னேற்றத்தை மேம்பாட்டை, வளர்ச்சியை அனைவருக்கும் கிட்டிட செயல்பட முடியாது என்ற அடிப்படையில் மக்களாட்சியை விரிவுபடுத்தும் விரிவாக்கப் பணியும் பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் புதிய முன்னெடுப்புக்களைப் பற்றிய புரிதலுடன் மக்கள் பிரதிநிதிகள் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால் இந்தப் புதிய முன்னெடுப்புக்களினால் வரும் புதிய வாய்ப்புக்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டு வளர்ச்சியை அனைவருக்கும் பங்கிட்டு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுவார்கள். அப்படி எல்லா நாடுகளிலும் நடந்ததா என்று ஒரு கணம் உலகத்தை ஆய்ந்து பார்த்தால் சீனாவைத் தவிர வேறு எந்த நாடும் பெருமளவில் பயன்பெற்றதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் இந்தியாவை ஆய்வு செய்து பார்த்தால் நமக்கு ஒரு புரிதல் கிடைக்கும். இந்தியா என்பது ஒரு துணைக் கண்டம். பல நாடுகளின் தொகுப்பு என்றுதான் கூறவேண்டும். இதில் இருக்கும் வேறுபாடுகள், வித்தியாசங்கள், ஏற்றத் தாழ்வுகள் அனைத்தும் மக்களாட்சிக்கு எதிராகச் செயல்படும் காரணிகளாகும். இந்த நாடு ஒன்றுபட்டு மக்களாட்சியில் 75 ஆண்டுகாலம் இருப்பதே மிகப்பெரும் சாதனை. இந்திய நாட்டில் 8% பொருளாதார வளர்ச்சி அடைந்தபோது 80 கோடி மக்களுக்கு அரசின் உதவி இல்லாமல் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது என்றால் வளர்ச்சி எங்கே சென்றது என்பதுதான் நம் கேள்வி.

எனவே இந்திய நாட்டின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு கிராமத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு இன்றியமையாதவை. உலக வங்கியின் ஆய்வின்படி 2017ல் 66.5% மக்கள் இந்தியக் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். அதில் வேலைக்குத் தகுதியானவர்களில் 69% மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பகுதி ஆரோக்கியமான வாழ்க்கை வாழத் தேவையான அடிப்படை வசதிகளுடன் வாழ இயலவில்லை. பெரும்பகுதி விளிம்புநிலை மக்கள் தொடர்ந்து பாதிப்புக்களுக்கு உள்ளாகி அதிலிருந்து மீளமுடியாமல் வாழ்ந்து வருகின்றனர். கிராமத்தின் உற்பத்தித்திறன் குறைவதும், கிராமத்திலுள்ள மக்களின் திறன் வளர்க்கப்படாமல் அல்லது தேவைக்கு ஏற்ற அளவில் திறன் கூட்டப்படாமல் இருப்பதும் கிராமத்திலுள்ள குடும்பங்களின் முடிவெடுக்கும் திறனையும் ஆற்றலையும் குறைத்துள்ளது. அதுமட்டுமல்ல, கிராமத்தில் பொருளாதாரச் செயல்பாடுகள் என்பது முற்றிலும் நலிவடைந்து அவைகள் வாழ்வாதாரமாக செயல்படும் நிலைக்கு வந்துவிட்டன. கிராமங்களில் உள்ள நீர்நிலைகள் பெரும்பகுதி செப்பனிடுவதற்குப் பதில், அவைகள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதும் குப்பை கொட்டும் குப்பைக் குளங்களாக மாறுவதும் எதார்த்தமான நிலை. அத்துடன் கிராமங்களில் உள்ள கனிம வளங்கள் அரசின் ஆசியுடன் சுரண்டப்படுவதும், அதன் விளைவாக எங்குப் பார்த்தாலும் கிராமங்கள் மேடு பள்ளங்களாகக் காட்சியளிப்பதும் அடுத்து நாம் காணும் எதார்த்த நிலை. அளவற்ற நுகர்வு கிராமங்களில் குவிகின்ற குப்பைகள், கிராமச் சுகாதாரத்தை கெடுப்பதுடன் சுற்றுச் சூழலையும் கெடுத்து வருகின்ற நிலையை நம்மால் உணர முடியும். பல்லுயிர் பெருக்கம், துப்புரவு, தூய்மை, உயிர்ச்சூழல் பாதுகாப்பு இவைகளெல்லாம் விவாதத்தில் இருக்கின்றன. செயலில் குப்பை மட்டும் கூட்டப்பட்டு

ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றன. எல்லா வீடுகளிலும் ஆன்ராய்டு மொபைல் போன் இருக்கிறது, மோட்டார் சைக்கிள் இருக்கின்றது. ஆனால் கழிப்பிடம் இல்லை. அளவற்ற உடைகள் விதவிதமாக அணிய பழகிக் கொண்டுள்ளனர். ஆனால் அடிப்படைத் தேவையான கழிப்பறைக் கலாச்சாரத்தைப் பார்க்க முடியவில்லை. விதவிதமான உணவு வகைகள் நெகிழிப் பையில் அடைக்கப்பட்டு சந்தையில் விற்கப்படுவதை மக்கள் வாங்கி ருசித்து உண்ணுகின்றனர். ஆனால் சமீபத்தில் வந்த ஆராய்ச்சி அறிக்கையின்படி 55% கிராமப்புறக் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் 52% வளர் இளம் பெண்கள் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு சந்தைப்படுத்தும் வாய்ப்பு உருவாக்கிக் கொள்ளாமையாலும், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் இணைந்த செயல்பாடாக, கிராமத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்தாததன் விளைவு தங்கள் உற்பத்திக்கு உண்டான லாபமும் மரியாதையும் கிடைக்கவில்லை. ஆனால் கிராமங்களில் மின்சாதனப் பொருள்களின் பயன்பாடு என்பது அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. கான்கிரிட் வீடுகள் வளர்ந்த வண்ணம் இருக்கின்றது. எனவே இன்று கிராமங்கள் என்பது ஒரு கலாச்சாரம் சார்ந்த விழுமியங்களுடன் இயைந்த கிராம தற்சார்பு வாழ்க்கையாக இல்லாமல் அரசு தரும் திட்டப்பயன்களைச் சுவைக்கும் பயனாளிக் கூட்டம் வாழும் இடமாக மாற்றிவிட்டன. எனவே கிராமங்களில் மக்கள் நகர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், கிராம வாழ்க்கையின் முக்கியத்துவம் உணராமல்.

இந்தச் சூழலை மாற்றுவதற்காக வந்ததுதான் இன்றைய உள்ளாட்சிகள். இந்த உள்ளாட்சியின் அடிப்படையை புரிந்து கொண்டு, கிராமப் புனரமைப்புக்கான ஒரு மக்கள் இயக்கத்தைக் கட்டி, கிராம வளங்களையும் வசதிகளையும் மீட்டெடுத்து கிராம வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் மக்களைத் திரட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தி ஒரு கிராமக் குடியரசை உருவாக்குவது தான் இதன் அடிப்படை. இதற்கான பார்வையையும், விழிப்புணர்வையும் இன்றுள்ள உள்ளாட்சித் தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஏற்படுத்தி கிராம மேம்பாட்டை நிபுணத்துவம் மிக்க செயல்பாடாக மாற்றி கிராம வாழ்க்கை நாகரீகத்தின் சின்னம் என்ற செய்தியை உலக மக்களுக்கு தந்தாக வேண்டிய கடமையில் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றும் அத்தனை பேருக்கும் பொறுப்பும் கடமையும் இருக்கிறது. எனவே இந்தப் புதிய பாதையில் பயணிக்க நம் மக்களும் தலைவர்களும் கிராமங்களில் தயாராக வேண்டும். அதுதான் இன்றைய நமது தேவை.

■


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

**ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

912 2885
877 2886
879 7591
878

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தனி இதழ் ₹ 30.00,
ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00,
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
சந்தாத் தொகையை

**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**

**A/c.No. 1035249018**

**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

# சிலப்பதிகாரமும் கேரளக் கண்ணகி தொடர்பும்

அ.கா.பெருமாள்

மலையாள மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டும் என்னும் கோரிக்கை எழுந்த போது மலையாள அபிமானிகள், நவீன எழுத்தாளர்கள், மலையாள இலக்கியவாதிகள், ஊடகக்காரர்கள் என்பவர்களில் சிலர் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் இரண்டையும் கேரளத்து இலக்கியங்களாகவே சொல்லிக் கொண்டார்கள். அப்போது மு.ராகவையங்கார் திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் வழி பதிப்பித்த சேரவேந்தர் செய்யுட் கோவை, Some Aspects of Kerala from Tamil literature என்னும் இரண்டு நூற்களும் தூசிதட்டிப் படிக்கப்பட்டன. இது குறித்த கட்டுரைகளும் வந்தன.

கேரளத்தின் பழம்பண்பாடு மொழி இரண்டுமே தமிழைப் போல் பழமையானவை என்று கூறுவதற்கு கண்ணகி வழிபாடு அப்போது தேவைப்பட்டது. இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் மலையாளச் சார்புடனே பேசப்பட்டன.

பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் வரும் பதிகத்தில் (பரணர்) கடவுளர் பத்தினிக்குக் கால்கோள் வேண்டி என்னும் வரி மலையாளத்தில் பலரும் அறிந்த வாசகம் ஆனது. இந்தப் பாடல் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் பற்றியது. இவன் சேரமான் இமயவரம்பனின் மகன் சோழன் மணக்கிள்ளியின் மகள் வயிற்றில் பிறந்தவன். இவனே கண்ணகிக்குச் சிலை எடுத்தவன். அதற்காக வடநாடு சென்றவன். இந்தப் பதிகச் செய்தி கூட மலையாளம் செம்மொழி என்பதற்குச் சான்றாக எடுக்கப்பட்டது.

இப்படி எல்லாம் இருந்தாலும் கேரளத்தில் சிலப்பதிகாரத்தின் செல்வாக்கோ கண்ணகி வழிபாடோ முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்று தோன்றுகிறது. இன்றும் கூட இதைச் செய்யலாம்.

ஆரம்பகாலத் தமிழ் ஆய்வாளர்களான பின்னத்தூர் நாராயண அய்யர், மு.ராகவையங்கார், எஸ்.வையாபுரிப்பிள்ளை போன்றோர்கள் சங்கப்பாடல்களில் சிலப்பதிகார வேர் உள்ளது என்றனர். சில சான்றுகளையும் எடுத்துக் காட்டினர். இவர்களின் ஆதாரங்கள் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களுக்கு அவல் கிடைத்தது மாதிரி ஆயிற்று. அவர்கள் தங்கள் பங்குக்கு விளக்கம் கொடுத்தனர்.

சிலப்பதிகாரத்தை ஆரம்பத்தில் பதிப்பித்த தி.ஈ.ஸ்ரீனிவாச்சாரியார்(1872) தி.சு.அப்பு ரெட்டியார்(1880) உவேசா(1882) கரந்தை தமிழ்ச் சங்கத்தர்(1942) வேங்கடசாமி நாட்டார்(1946) ஆர்.கே.சண்முகம் செட்டியார்(1957) மர்ரே ராஜம்(1867) சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்-என்பவர்கள் பழம் பாடல்களில் சிலப்பதிகாரத்தைத் தேடும் முயற்சியில் தீவிரமாக இருக்கவில்லை.

கண்ணகியின் கதையின் வேர் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது என்று கூறுபவர்களின் கருத்தை பார்ப்போம்.

வையாவிக் கோப்பெரும் பேகன் என்னும் குறுநில மன்னன் தம் மனைவி கண்ணகி என்பவளைப் பிரிந்த செய்தியை கபிலர், பரணர், அரிசில், கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகியோர் பாடியுள்ளனர் (புறநானூறு 141-147) இச்செய்தியைக் கண்ணகி கதையுடன் தொடர்புபடுத்திச் சொன்னார்கள். பண்டைக்காலத்தில் பரத்தை காரணமாக மனைவியைப் பிரிவது அபூர்வமான செய்தி அல்ல; ஆகவே இக்கருத்து பொருத்தமற்றது என்று ஆரம்பகாலத்திலேயே - மறுப்பும் வந்துவிட்டது.

மருதன் இளநாகனார் "காதலனால் கைவிடப்பட்ட ஒருமுலை அறுத்துக் கொண்ட திருமா உண்ணி என்பவள் வேங்கை மரம் ஒன்றின் கீழ் நின்ற செய்தியைக் குறிப்பிடுகிறார்" (நற்றிணை 216). நற்றிணையை முதலில் பதிப்பித்த (1915) பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் "திருமா உண்ணி என்பது கண்ணகியைக் குறிக்கிறது போலும்" என்று எழுதினார். (சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் 1952 ப.24.7).

பின்னத்தூராரின் இக்கருத்தை நீலகண்ட சாஸ்திரி, ராகவையங்கார், வையாபுரிப் பிள்ளை போன்றோர் எற்றுக்கொண்டனர். அதோடு கண்ணகி கதை சங்ககால ஆரம்பத்தில் வாய்மொழியாகப் பேசப்பட்டது என்ற முடிவுக்கும் வந்தனர். நாட்டார் வழக்காற்றியலாளர்களுக்கு இது வசதியாகப் போயிற்று.

பின்னத்தூராரின் இக்கருத்தை மயிலை சீனி வேங்கடசாமி மறுத்து திருமாவுண்ணி முலையிழந்து நின்ற இடமும் கண்ணகி நின்ற இடமும் வேறானவை என்று மறுத்துக் கூறுகிறார்.

யாப்பருங்கலவிருத்தி செய்யுளியல் புறநடையில் ஆரிடைச் செய்யுள் என்பதற்குத் தண்டியலங்காரத்தில் உள்ள மேற்கோள் பாடல் ஒன்று குறிக்கப்படுகிறது.

**கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க**
**ஒண்செங்குருதியின் ஓ கிடந்ததே-தெண்டிக்**
**கெழு தகைமை இல்லேன் கிடந்தூடப் பன்னாள்**
**அமுத கண்ணீர் துடைத்தகை**

என்றும் இப்பாடல் பத்தினிச் செய்யுள் எனப்படுகிறது.

இந்தப் பாடலை சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டதாக ஊகித்த மு.ராகவையங்கார் (ஆராய்ச்சித் தொகுதி ப.238) கூறியதை வையாபுரிப்பிள்ளை ஒத்துக் கொள்ளுகிறார். இதைக் கண்ணகி பாடியதாகவே கொண்டனர். இக்கருத்துக்கு 50களில் மறுப்பு வந்துவிட்டது. இதில் கண்ணகி கோவலன் பெயர்கள் இல்லை. கண்ணகியைத் தவிர வேறு பத்தினிப் பெண்ணைப் பற்றிதாக இப்பாடல் இருந்திருக்கலாம். இந்தப் பாடல் ஒரு வீரன் இறந்தது கண்டு அவனது மனைவி பாடியது போன்ற அமைப்பை உடையது. ஆகவே மு.ராகவையங்கார் கருத்து தவறானது (தமிழ்ப் பொழில், கரந்தை தமிழ்ச் சங்கம் 1959 ப.181).

தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையில் (சூத் 100)

**காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி**
**மாதரிக்குக் காட்டி மனையினகன்று போய்**
**கோதிலிறைவனது கூடற்கட் கோவலன் சென்**
**றேத முறுதல் வினை**

என்ற பாடல் வருகிறது.

சிலப்பதிகாரம் நாட்டார் மரபுடன் தொடர்புடையது என்பதற்கு இப்பாடலை ஆதாரமாகக் கொள்ளுகிறார் நா.வானமாமலை. இதையும் ஊகமாகவும் கொள்ளுகின்றனர்.

இப்படி எல்லாம் இருந்தாலும் கேரளத்தில் கண்ணகி வழிபாட்டை ஆராய்கின்ற போதும், அங்கு வாய்மொழி வடிவில் உள்ள கண்ணகி பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் போதும் சிலப்பதிகாரம் ஒருகாலத்தில் நடந்த நிகழ்ச்சி வாய்மொழி வடிவில் பரவியதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

'கண்ணகி' கேரளத்துத் தெய்வமாக சிலப்பதிகாரம் கேரளத்தின் ஆரம்பகால இலக்கியமாகக் கருதப்படுவதற்கு எவ்வளவோ சான்றுகளை இன்றும் தேட முடியும். ஆனால் இது குறித்த முழுமையான ஆய்வு நடந்ததாகத் தெரியவில்லை.

கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகக் கருதும் மனநிலை இருந்ததைச் சாலினி வாய்வழி இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார். சாலினி கண்ணகியைப் பார்த்து,

**இவளோ கொங்கச் செல்வி குமலையாட்டி**
**தென்றமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி**

என்கிறார். (வேட்டுவ வரி 47-50).

இந்த வரிக்கு அரும்பத உரையாசிரியர் "இவளைத் தெய்வமாகக் கொண்டாடும் இடம் கூறினபடியாலே இவள் துர்க்கையாகவும் பிறந்தாள்" என்கிறார். (உவேசா 1960 ப.313) வேங்கடசாமி நாட்டார் "இவள் கொங்கு நாட்டிற்குத் தெய்வமாகியுள்ளவள். குடமலை நாட்டை ஆளும் செல்வி. இவள் தமிழ் நாட்டுப் பாவை. உலகோர் செய்த தவத்தின் கொழுந்து" என்கிறார். (1942 ப.233).

வேட்டுவ வரியில் வரும் கொங்கு குடமலை, தென்றமிழ் என்னும் பதங்களுக்கு ஆய்வாளர்கள் சில விளக்கங்கள் கொடுத்துள்ளனர்.

கொங்கு கேரளத்தை ஒட்டிய கோவை, ஈரோட்டுப் பகுதி, குடமலை கேரளத்தை நேரடியாகக் குறிப்பது. தென்றமிழ் மதுரை என்பது பொது வழக்கு. இந்த மூன்று இடங்களில் கேரளப் பகுதியே அதிகம்.

ஆரம்பத்தில் சேரன் மட்டுமல்ல கொங்கு இளம் கோசர், இலங்கைக் கயவாகு, சோழன் மூவரும்

கோவில் எடுத்தனர். (உரைபெறு கட்டுரை). இவர்களில் கோசர் முக்கியமானவர். கேரளத்தில் கண்ணகி வழிபாடு சேரர்களால் மட்டுமல்ல கோசர்களாலும் பரவியது. கோசர்கள் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் உள்ளன.

கோசர் பழைய ஆலமரத்தடியில் கூடுவர் (குறுந் 15). கோசரின் நாடு வயல்கள் நிறைந்தது (அகநா 113). வேலெறிவதில் வல்லவர்; முருக்கம் கம்பால் செய்த பலகையில் வேலெறிந்து பழகுவர் (புறநா 169). வாய்மையைக் காப்பவர் (அகநா 305). ஆயுத வடுக்களை உடையவர் (அகநா 90). இவர்களின் தலைவர் தப்பாத வாளை உடையவன் (ம.காஞ்சி 772-773). இது போல பல செய்திகள் (அகநா 5, 196, 19, புறநா 107, 283, குறுந் 73).

கோசர்கள் கேரளத்தின் வட பகுதியில் இருந்தவர். இன்றைய - காசர்கோடு மாவட்டம் கோசர்கள் இருந்த இடம் (எஸ்.ஷெட்டர் 2010 ப.192) கண்ணகி வழிபாட்டை வட கேரளத்தில் கோசர்களும் மத்திய கேரளத்தில் சேரரும் தென்கேரளத்தில் தென்பாண்டியரும் பரவலாக்கினர் என்று கருதலாம்.

சிலப்பதிகாரப் பதிகத்தின் படி கண்ணகி நின்ற நெடுவெண்குன்றம் (திருச்செங்கோடு) இன்றைய கொடுங்கல்லூர் என்பது அடியார்க்கு நல்லாரின் கருத்து. "குற்றம் கொடுங்கல்லூருக்கு அயலதாகிய - செங்குன்றம் என்றும் மலை" என்று கூறுகிறார். (உவேசா 1960 ப.19).

கண்ணகி பாண்டி நாட்டிற்கு கணவனுடன் வந்ததற்குக் காரணம் - வெளிப்படையாக உள்ளது. ஆனால் கணவனை இழந்தபின் ஏன் சேரநாட்டுக்கு சென்றாள். இது புரியாத புதிர். இந்தப் புதிருக்கு விடை கேரளத் தொன்மங்களிலும் இல்லை.

கண்ணகிக்கு முதலில் எடுக்கப்பட்ட கோவில் மங்கலாதேவி கோவில் என்ற நம்பிக்கை இன்றும் தொடருகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் மங்கலமடந்தை கோட்டம் (வரி 63, 88) என்பதற்கு மங்கலாதேவி எனக் கொள்ளுகிறார் அரும்பத உரைகாரர். (உவேசா 1960 ப.580) இவரது காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு. எனவே இக்காலத்தில் மங்கலாதேவி வழக்கு இருந்தது என்று கொள்ளலாம்.

இங்கு குறிப்பிடப்படும் மங்கலாதேவிக் கோவில் கம்பம் பள்ளத்தாக்கில் மங்கல மலையில் உள்ளது. கம்பத்திலிருந்து பேருந்தில் ஏறி பனியக்குடி சென்று காட்டுவழி 1335 கி.மீ மலையில் நடந்து இக்கோவிலை அடையலாம். குமுளியிலிருந்து கேரள எல்லை சென்று 850 மீட்டர் உயரம் நடந்து இக்கோவிலை அடையலாம். கூடலூர் வழி தெற்கு மலையில் நடந்து இக்கோவிலின் வடக்கு வாசலை அடையலாம்.

1957 வரை மங்கலாதேவி கோவில் பற்றிய செய்திகள் வாய்மொழியாகவே பேசப்பட்டன. இது பற்றி புலவர் சோமசுந்தரனார் எழுதியபோது பெரிதுபடுத்தப்படவில்லை. தொல்லியலார் இக்கோவில் கல்வெட்டுகளைப் படி எடுத்தபோது (1960) சில செய்திகளை வெளியிட்டனர். 1983 - 84ல் சென்னை ஜார்ஜ் கோட்டையிலிருந்து வெளிவந்த கெசட்டீரில் இங்குள்ள வண்ணாத்திப் பாறை என்ற இடமும் மங்கலாதேவி கோவிலும் தமிழகத்திற்குச் சொந்தம் என்றும் 1927, 1956, 1957ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வரைபடங்கள் இப்பகுதி தமிழகத்திற்குச் சொந்தம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தன. 1975 ஏப்ரல் 18ல் கேரள தமிழக மாநில நில அளவை அறிக்கைகளிலும் இக்கோவில் தமிழகத்திற்குச் சொந்தம் என்று இருந்தது.

அறுபதுகளின் இறுதியில் மதுரை பல்கலைக்கழகம் பேராசிரியர் கோவிந்தராசன் மங்கலாதேவிக் கோவிலைக் கட்டியவன் சேரன் செங்குட்டுவன் என்னும் செய்தியை எழுதினார். இக்கோவிலில் இருந்த ஒரு பெண் தெய்வத்தைக் கண்ணகி என அடையாளம் காட்டினார். அன்றைய நிலையில் இது தமிழக அரசு இதழில் (1972 ஜூலை) செய்தியாக வந்தது. இதன் பின்னர் புலவர் ராசு (1976) துளசி இராமசாமி (1987) ஆகியோர் ஆய்வு செய்து விரிவாக எழுதினார்.

மங்கலாதேவி கோவிலை அடுத்து சிவன் கோவில் இருந்தது பின்னர் இது துர்கா தேவி கோவில் ஆனது என்றும் கருத்துகள் படிப்படியாக வெளியாயின. இக்கோவிலில் எட்டு கல்வெட்டுகளை அடையாளம் கண்டனர்.

இவை முதல் ராஜராஜனின் கல்வெட்டு; இதில் பூர்ணி என்ற சொல் உள்ளது. இது சிதைந்து விட்டது.

முதல் ராஜராஜனின் ஒரு கல்வெட்டு கோவில் பலிபீடத்தைக் குறிக்கிறது.

குலசேகரப் பாண்டியனின் (கிபி 10 நூற்) தமிழ், வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இவை நிபந்தம் பற்றிப் பேசுகின்றன. ஸ்ரீவல்லபதேவன் (கிபி 10ஆம் நூற்) நிபந்தக் கல்வெட்டும், இன்னொரு பாண்டியனின் 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டும் உள்ளன. பாண்டியன் கல்வெட்டொன்று மாசாத்துவான் பெயரைக் குறிக்கிறது.

மங்கலாதேவி கோவில் சேரன் செங்குட்டுவன் கட்டியது அல்ல என்றும் அது இராஜராஜ சோழன் காலத்தது என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகளும் வேறு சான்றுகளும் உள்ளன என்பதை உறுதி செய்து உள்ளனர்.

முதல் ராஜராஜன் சிங்கள அரசன் ஐந்தாம் மகிந்தனை வென்று அவன் மனைவியைச் சிறைப் பிடித்து தஞ்சைக்குக் கொண்டு வந்தான். அவள் மங்கலாதேவிக் கோவிலிலிருந்து பிடிமண் எடுத்துத் தஞ்சையில் கண்ணகிக்குக் கோவில் எடுக்க வேண்டினாள். இராஜராஜனும் அப்படியே செய்தான். அந்தக் கோவிலை சிங்கள அரசி வணங்கியதால் அது செங்களாச்சி அம்மன் கோவில் ஆயிற்று.

நான் தமிழினி வசந்தகுமாருடன் 2004ல்

இப்பகுதிக்குச் சென்ற போது கூடலூர் மக்களிடம் செய்தி சேகரித்தேன். கூடலூர் மக்கள் மங்கலாதேவி கோவிலைக் கண்ணகி கோவில் என்றே கூறினர். இக்கோவில் சடங்கில் தாலி, சிலம்பு இரண்டும் எடுத்துச் செல்லப்படுவது நடைமுறை. கூடலூர், கம்பம் பகுதிகளில் உள்ள பகவதி கோவில்களில் கவுண்டர் சாதியினரே பூசகராக உள்ளனர். இங்கு பலியும் உண்டு. இது கண்ணகி கோவிலாக இருந்து மலையாளிகளின் செல்வாக்கால் பகவதி கோவிலாக மாறியது. இது போன்ற செய்திகளின் வழி கி.பி.11ஆம் நூற்றாண்டில் கேரள தமிழக எல்லைப் பகுதிகளில் கண்ணகி வழிபாடு இருந்தது தெரிகிறது.

கேரளத்தை ஒப்பிடுகின்ற போது தமிழகத்தில் கண்ணகி வழிபாடு மிகமிகக் குறைவு. இதற்குக் காரணம் என்ன, சிலவற்றை ஊகிக்கலாம், தமிழகத்தின் மேல் படை எடுத்த கன்னடர், தெலுங்கர், மராட்டியர் செல்வாக்கால் நாட்டார் வழிபாட்டிலும் நிறுவன சமய வழிபாட்டிலும் கணிசமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இக்காலத்தில் கண்ணகி வழிபாடு தமிழக அயலாரின் பெண் தெய்வங்களுடனும், வைதீக மரபுடனும் கலந்திருக்க வேண்டும்.

தமிழகப் பெண் தெய்வங்களான காளி, மாரியம்மன், வட்டபுரியம்மன், செல்லத்தம்மன் ஆகியவற்றின் வழிபாட்டுக் கூறுகளில் கண்ணகி வழிபாட்டின் எச்சத்தைக் காண முடியும். வட்டார ரீதியாக துல்லியமாக கள ஆய்வு மேற்கொண்டு செய்தி சேகரித்தால் தமிழகத்தின் கண்ணகி வழிபாட்டை கொஞ்சமாவது மீட்டெடுக்க முடியும்.

சிலப்பதிகாரக் கதையுடன் நெருங்கிய தொடர்புடைய மதுரையில் கண்ணகி வழிபாடு பெரிய அளவில் இல்லை. மதுரை யாதவத்தெரு செல்லத்தம்மன் கோவிலை சிலப்பதிகார மாதரியின் வீடு என்று கூறுகின்றனர் (பி.இ.139) கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த மாதரி செல்லத்தம்மனாகக் கொண்டாடப்படுகிறாள். இக்கோவிலில் கண்ணகி சிலை உள்ளது. கண்ணகி மதுரையை எரித்துவிட்டு அமர்ந்த இடத்தில் ஒரு அம்மன் கோவில் உள்ளது. இப்போது இது விராட்டிப்பத்து என்ற இடத்தில் இருக்கிறது. கண்ணகி ஓய்வெடுத்த இடத்தில் (பொன்னமராவதி) அழகிய நாச்சியாரம்மன் கோவில் உள்ளது என்பன போன்ற நம்பிக்கைகள் உள்ளன.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள துர்க்கையின் மார்பில் வெண்ணெய் வீசும் வழக்கம் கண்ணகியுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. **கண்ணகி மார்பைப் பிய்த்து எறிந்தபோது அவளது மார்பில் வெண்ணெய் தேய்த்து சாந்தப்படுத்தினதால் அவள் யாதவர் தெருவைப் பாதுகாத்தாள் என்பது நம்பிக்கை.** புகழேந்திப் புலவரின் கோவலன் கதை அம்மானையின் உருவாக்கம் மதுரையுடன் தொடர்புடையது என்பதை இங்கு நினைத்துப் பார்க்கலாம்.

ஈரோடு சுணக்கம்பாளையம் பகவதி கோவிலைக் கண்ணகி கோவில் என்பர். அம்மனுக்குக் கம்பம் போடுதல் நிகழ்வு கண்ணகி கோவிலைக் குறியீடாகக் கொண்டது. ஆத்தூர் கண்ணகி கோவில் வழிபாட்டுச் சடங்கில் அம்மன் உருவத்தில் தலையினை ஒட்டுதல் என்ற நிகழ்வு உண்டு. இது கம்மாளரைக் கண்டித்த செயலை நினைவுபடுத்துகிறது. சென்னை திருவொற்றியூர் சிவன் கோவில் வடக்கு வீதியில் இருக்கும் துர்க்கை கோவிலை கண்ணகி கோவில் என்பர். புகழேந்திக் கதையுடன் ஒத்து நடக்கும் சடங்குகளை இக்கோவில் வழிபாட்டில் காணலாம். இங்கே விழாவில் பொய்ப் பந்தலை எரிக்கும் நிகழ்ச்சி உண்டு. இது மதுரையை எரியூட்டுவதை நினைவூட்டும். ■

2022 ஜனவரி முதல்
'நியூ செஞ்சுரியின் உங்கள்
நூலகம்' மாத இதழ் இந்திய
அரசின் பல்கலைக்கழக
மான்யக்குழுவால் (UGC)
அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி
இதழ்கள் பட்டியலில் இடம்
பிடித்துள்ளது என்பதை மகிழ்வுடன்
தெரிவித்துக்கொள்கிறோம்

– பொறுப்பாசிரியர்

கட்டுரை



# பெரியாரின் பார்வையில் சூத்திரர், பஞ்சமர் நலமே தொழிலாளர்கள் நலம்

முனைவர் க. கிருஷ்ணமூர்த்தி

நவீன கால வரலாறு கல்வி மறுமலர்ச்சியால் துவங்குகிறது, தொழிற்புரட்சி அதன் அசுர குழந்தையாக அவதரிக்கிறது. தொழிற்புரட்சியால் ஏற்பட்ட துயரங்கள் தாங்க முடியாமல் போன பொழுது காரல்மார்க்ஸ் கண்டுபிடித்த அருமருந்துதான் விஞ்ஞான கம்யூனிசம். மார்க்ஸின் மகத்தான சிந்தனைகளை செயல்படுத்த லெனின் செய்த முயற்சிதான் ரஷ்ய புரட்சி. இந்த புரட்சி கண்டு வியந்த அறிஞர்களும் உண்டு, பயந்து ஓடிய கொடியவரும் உண்டு.

இந்த நவீன காலம் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் காரணமாக இந்தியாவில் நுழைந்தது. அறிவின் அடிப்படையில் அமைந்த நவீன காலம், ஆரியர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொண்ட பார்ப்பனர்களுக்குப் பயனுற அமைந்துவிட்டது.

உழைக்காமல் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வேதம் ஓதி வாழ்ந்த கூட்டம், நவீன காலத்தில் உடல் உழைப்பின்றி உண்டு கொழுக்க ஏற்றதாகக் கல்வி மறுமலர்ச்சி உதவுவதை தங்களுக்கு உகந்ததாக ஏற்றுக்கொண்டனர். பள்ளி, கல்லூரிகளில் அவர்களே ஆக்கிரமித்து இருந்தனர். அரசு அலுவலகங்களில் அவர்கள் ஆதிக்கமே அதிகமாக இருந்தது. உழைத்து உழைத்து ஓய்ந்து போன திராவிட இனம் நவீன காலத்தில் வாழ முடியாமல் தவித்தனர். வாழ்வில் பின்தங்கினர். கல்வியில் கீழ் நிலையில் கிடந்தனர். பதவிகளை பிராமணர்க்கு பலி கொடுத்தனர். உதவுவார் இன்றி உயிர் வதைய தவித்தனர்.

திராவிடர்கள் வேதத்தை படிக்கக்கூடாது கேட்கக்கூடாது என்று பார்ப்பனர்கள் வேதகாலத்திலேயே தடை போட்டனர். எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே சூத்திரர்க்கு (திராவிடர்க்கு) என்று சதி செய்தனர். ராஜாஜி 8500க்கும் மேற்பட்ட திராவிடர்கள் கற்கும் பள்ளிச்

சாலையை இழுத்து மூடினார். தாங்கள் மட்டுமே கற்றால் தான் தலைமைப் பதவியில் இருக்க முடியும் என்று எண்ணினார். திராவிடர்களைத் தங்களுக்கு தொண்டு செய்யும் தொண்டர்கள் நிலையிலேயே வைத்துக் கொள்ள துடித்தனர்.

இந்த நிலையில் தான் தவிக்கும் திராவிடர்களின் துயர் துடைக்க வந்தது நீதிகட்சி என்னும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம். டாக்டர் நடேச முதலியார், T.M. நாயர், பிட்டி தியாகராயச் செட்டியார் போன்ற திராவிடத் தலைவர்கள் துவங்கிய இந்தக்கட்சி 1917 - 1937 வரை திராவிடர்கள் நலம் கருதி பற்பல சட்டங்கள் செய்தனர். திட்டங்கள் தீட்டினர். அதன் பயனாய் திராவிடர்களின் வாழ்வு துளிர்த்தது.

போலி தேசியமும் போலி சுதந்திரமும் பேசிய போலி தலைவர்களிடம் மாயையில் மயங்கிய திராவிடர்களாகத் தங்களுக்கு உழைத்த தாயொத்த திராவிட இயக்கமான நீதிக்கட்சியைத் தோற்கடித்தனர். திராவிடர்கள் தங்கள் வாழ்விற்குத் தாங்களே தீயிட்டுத் தீய்ந்தனர். தொலைந்தார்கள் திராவிடர்கள் என்று பார்ப்பனர்கள் பறைசாற்றி பெருமை பட்டுக்கொண்ட பொழுது ஏமாந்த திராவிடர்கள் ஏங்கி அழுதபோது இருள் போக்கும் எழுஞாயிறாய், வசந்தம் தரும் வான்மழையாய், விடிவெள்ளியார் தந்தை பெரியார் என்று அழைக்கப்பட்ட ஈ.வெ.ராமசாமி அவர்கள் திராவிடர்களின் நலம் காக்க தன் உயிர் 'உடல்' உடைமைகளை ஒப்படைத்தார். ஓயாது உழைத்தார். ஆரிய பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு காரணம் என்னவென்று அயராது ஆய்வு செய்தார். அவர்களது மதம் அவர்களது ஆதிக்கத்திற்கு உதவுவதைக் கண்டார். அவர்களின் இந்து மத ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று உறுதி கொண்டு ஓயாது உழைத்தார், படித்தார், எழுதினார், பேசினார்...

அவர்களுடைய காலம் மாறி விட்டதை உணர்ந்தார். திராவிடர்களின் விஞ்ஞான அறிவை வளர்க்க வேண்டும் என்று விழைந்தார். பகுத்தறிவைப் பரப்பினார். மதிகெட்டு மானங்கெட்டு மாற்றானின் காலடியில் மதத்தின் பெயரால் மக்கிப்போய் கிடந்த திராவிட மக்களை ஆரியரின் மத ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப் போராடினார். நவீன உலகத்திற்கு திராவிடர்களை நயந்து நயந்து அழைத்தார். நவீன காலத்தில் கிடந்த எல்லா மாற்றங்களையும் வரவேற்றார். தன் மக்களையும் ஏற்கச் செய்தார். அவற்றில் ஒன்றுதான் காரல் மார்க்ஸின் கம்யூனிசம். அதை செயல் படுத்திய 1917 ரஷ்யபுரட்சி. பொதுவுடமைக் கொள்கை பல அறிஞர்கள், தலைவர்களை ஈர்த்தது. பெரியார் ஈ.வெ.ரா. அவர்களையும் ஈர்த்தது. ஆனால், அதை ஒரு மாற்றத்துடன் பெரியாரும் நடைமுறைப் படுத்தினார்.

**பெரியாரின் கம்யூனிச கவர்ச்சி**

காரல் மார்க்ஸின் கம்யூனிச அறிக்கையை 04-10-1931 முதல் தனது குடியரசு ஏட்டில் தமிழகத்தில் முதன்முதலாக பெரியார் தொடர் கட்டுரையாக வெளியிட்டார். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரும் மற்றும் பிற பொதுவுடைமை சிந்தனையாளர்கள் பொதுவுடைமை குறித்தும் சோவியத் ஒன்றியம் குறித்தும் எழுதிய பற்பல கட்டுரைகளைக் குடியரசு ஏட்டில் விரும்பி வெளியிட்டார்."[1] திருத்துறைப்பூண்டி மாநாட்டில் தலைமையுரை ஆற்றும் பொழுது பெரியார் "நான் ரஷ்யாவிற்கு போவதற்கு முன்பே பொதுவுடமை தத்துவத்தை சுயமரியாதை இயக்கத்துடன் கலந்து பேசி வந்தது உண்மைதான். தீவிரமாக பிரச்சாரம் செய்ததும் உண்மைதான்"[2] என்று பேசிய பேச்சு அவரின் பொதுவுடைமைப் பாசத்தை புரிந்து கொள்ள பயன்படுகிறது.

பெரியார் ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 1931 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ம் தேதி பயணம் மேற்கொண்டார். 1932 ஆம் வருடம் நவம்பர் மாதம் 11ந் தேதிதான் தமிழகம் திரும்புகிறார். ஏறத்தாழ 11 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்த இந்தத் தருணத்தில், அதிக நாட்கள் ரஷ்யாவில்தான் செலவிட்டார்."[3]

ரஷ்யாவிலிருந்து திரும்பிய பெரியார் சிந்தனை சிற்பி சிங்காரவேலருடன் கலந்து ஆலோசித்து சுயமரியாதை சமதர்ம கட்சியை துவங்க ஏற்பாடு செய்தார். தனது மனைவி நாகம்மை உட்பட அனைவரையும் தோழர் என்று கம்யூனிஸ்ட்டுகள் போல அழைக்கும் பழக்கத்தை அமைத்துக் கொண்டார். தனது தொண்டரின் படைகளையும் அவ்வாறே அழைக்கும்படி அறிவுறுத்திய அவரது மாண்பு போற்றுதற்குரியது.

அவர் பேசுகிற பொழுது ஒருமுறை "நான் என்றைய தினம் சுயமரியாதை இயக்கம் என்று ஆரம்பித்தேனோ அன்று முதலேதான் இவ்வியக்கத்தைப் பற்றி பலரால் இது பொதுவுடைமை இயக்கமென்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. என்பதோடு சுயமரியாதை இயக்கத்தின் முடிவான இலட்சியமாகவும் எடுத்துச் சொல்லும் போதெல்லாம் நாமும் மேற்கண்ட தத்துவத்தையேதான் சொல்லி வந்திருக்கிறோம்"[4] என்று பெரியார் தன் இயக்கத்தின் கொள்கையும் ஒன்று தான் என்று கூறி வந்திருக்கிறார்.

சென்னை பக்கிங்காம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்கள் போராட்டம் தொடர்பாகத் திருவல்லிக்கேணி கடற்கரையில் பேசும் பொழுது பெரியார் "நீங்கள் தொழிலாளர்கள் என்றாலும் நாங்கள் உங்கள் தொண்டர்கள், உங்களுக்காகவே உயிர் வாழ்பவர்கள். இதை உணருங்கள்[5] என்கிறார்"

தொழிலாளர்கள் நலம் காக்கும் பொருட்டு தொழிலாளர்களுக்கே தான் தொண்டன் என்று உணர்ச்சி ஊற்றெடுக்க உரையாற்றியது அவரது தொழிலாளர் நலத்தில் உள்ள அக்கறையைக் காட்டுகிறது. திராவிடர் கழகமே தொழிலாளர் இயக்கமாகும் என்று அடிக்கடி கூறிவந்தார்.

தமிழ்த்தென்றல். திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அவர்கள் 13.11.1936-ம் தேதியில் நவசக்தியில்

'நாயக்கர்' என்ற தலைப்பில் பெரியார் ஈ.வெ. ராவிற்கு சில கேள்விகள் கேட்டு அறிவுரைகள் கூறி இருந்தார். அதற்கு விடை கூறும் விதமாகப் பெரியார், "ராமசாமிக்கு சமதர்மம் தெரியும். எப்போது பிரச்சாரம் செய்வது என்பதும் அவருக்குத் தெரியும்"[6] என்று குடியரசில் தன் நண்பன் என்றும் பாராமல் வெகுண்டு வேகத்துடன் பதில் எழுதியது அவர் எந்த அளவிற்கு பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் பற்று கொண்டிருந்தார் என்பதைப் புலப்படுகிறது.

அதனால் தான் மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் கே.டி.கே. தங்கமணி, பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி அவர்கள் எழுதிய நூலில் கீழ் வருமாறு கூறுகிறார்.

"இன்னும் ஐநூறு ஆண்டுகளானாலும் இந்திய வரலாற்றில் இடம் பெறக் கூடியவர்களாக மா. சிங்காரவேலர், தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி ஆக இரண்டு பேர்களாகத்தான் இருப்பார்கள்"[7]

அதனால் தான் திராவிட கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் "தந்தை பெரியார் தம் சுயமரியாதை இயக்கம் வேறு, பொதுவுடமை இயக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை பொதுவுடமை + பொதுவுடமை + சமதர்மம் = சுயமரியாதை இயக்கம்"[8] என்று எழுதினார்.

### ரஷ்யப் புரட்சி

இந்தியாவில் இருந்த 51 தொழிற்சாலைகளில் 43 தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருந்தன.[8] தொழிற்சாலைகள் மட்டுமே திறந்து இருந்தன. 80,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தனர். அந்த நேரத்தில் ரஷ்யாவை புகழ்ந்து,

"முதலாளித்துவ ராஜ்ஜியத்திலும் 3கோடி 4கோடி வேலையில்லாமல் திண்டாடி, அவதியுறும்போது, ரஷ்யாவோ தங்கள் நாட்டில் வேலையில்லாது ஏங்குவோரோ அல்லது நாளைக்கென்ன செய்வோம் என்று கவலையுறுவோரோ இல்லாமல் செய்து விட்டது. 5 ஆண்டு திட்டத்தின் மூலம் உற்பத்தி பொருட்கள் கைத்தொழில் வளர்ச்சிகள் முதலியன அளவுக்கு மீறி ஏற்பட்டிருக்கின்றன"[9] என்று தனது புரட்சி இதழில் பெரியார் எழுதிஉள்ளார்.

"ரஷ்ய தேசத்தில் அரசியல் ஆதிக்கமோ, ஜாதிமத ஆதிக்கமோ செல்வந்தர்கள் ஆதிக்கமோ ஒன்றும் கிடையாது. அந்த நாட்டில் உள்ள வாலிபர்களுக்கு அரசியல் என்றால் என்ன 'மதம் என்றால் என்ன' ஏழை பணக்காரர்களுக்கு அர்த்தமே தெரியாது"[10] என்று ஆதிக்கம் அற்ற சமத்துவ சமுதாயம் சமைத்த ரஷ்ய அரசைப் பாராட்டி பேசினார்.

ரஷ்யர்கள் சமூக சேவை செய்வதற்கு மிக முக்கியமான முதன்மையான இடத்தை ஒதுக்கி உள்ளதையும், எல்லா தொழில்களையும் கூட்டுறவு முறையில் செய்து கூட்டுயர்வு நாட்டுயர்வு என்ற நல்லதொரு கொள்கை கொண்டு நாளும் வாழ்வதால் தான் அவர்கள் உத்வேகத்துடன் மகிழ்வுடன் வாழ்கிறார்கள் என்று பெரியார் உண்மையிலேயே நம்பினார். நம்பியதையே மக்களிடம் எடுத்துக் கூறினார்"[11].

### பெரியாரின் பொதுவுடைமைக் கொள்கை

காரல் மார்க்ஸின் கம்யூனிச தத்துவத்தால் கவரப்பெற்று இருந்தாலும், ரஷ்யப்புரட்சியைப் பார்த்து மெய் சிலிர்த்தாலும், அவர்களின் அடிப்படையான பொருளாதார சமுத்துவத்தை ஏற்ற, இந்திய மக்களின் பண்பாட்டிற்கு ஏற்ப ஒரு பொதுவுடைமை கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொண்டு அதை, "பொதுவுடைமை என்பது ஒரு குடும்பத்தில், உள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள் இலாப நஷ்டங்கள், இன்ப துன்பங்கள், போக போக்கியங்கள், பொறுப்பு கவலைகள் முதலியவைகள் எல்லாம் எப்படி அக்குடும்ப மக்களுக்குப் பொதுவோ அது போலத்தான் ஒரு கிராமத்திலோ ஒரு பட்டணத்திலோ, ஒரு மாகாணத்திலோ, ஒரு தேசத்திலோ, ஒரு கண்டத்திலோ, ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம் ஆங்காங்கு உள்ள அவ்வளவு பேருக்கும் பொதுவானது ஆகும். சுருக்கமாய் சொல்ல வேண்டுமானால் பொதுவுடைமை கொள்கையின் கட்சி இலட்சியம் உலகம் பூராவும் ஒரு குடும்பம்"[12] என்று விளக்கிக் கூறுகிறார்.

ஓராண்டு கழித்து சமதர்மத்தைப் பற்றி அவர் பேசும் பொழுது, "ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் வேலை செய்து சமமாக உண்டு உடுத்தி களிப்புடன் வாழ்க்கை நடத்தவில்லையா? அது போலவே ஒரு கிராமம், ஒரு ஜில்லா, ஒரு மாகாணம் அல்லது தேசத்திலுள்ள எல்லா மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்ப பொது சொத்து போல் எல்லா மக்களுக்கும் பொதுவாகிய அந்த அக்குடும்பத்திற்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவரவர்கள் இஷ்டம் போல் அனுபவிக்கும் தனி உரிமை யாருக்கும் இல்லை. எல்லோரும் ஒன்றுபட்டு, ஆளுக்கொரு வேலை செய்து உண்டு உடுத்தி இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் சமதர்மம்"[13] என்று மீண்டும் தன் சமதர்ம பார்வையைப் பகிர்ந்து கொள்கிறார்.

### தொழிலாளி

தொழிலாளி யார் என்று விளக்கம் கொடுக்கும் பொருட்டு, ஒருமுறை பேசும் பொழுது, "இங்கு இருப்பவர் கூலிக்காரர்கள், தொழிலாளர்கள் இல்லை. தொழிலாளி என்பவன் நாட்டின் நன்மைக்காக ஒரு தொழிலைக் கற்று, அத்தொழிலை தானாகவே சுயேச்சையுடன் செய்து, அதன் பயன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி"[14] என்று தொழிலாளி குறித்த ஒரு விதி வகுக்கிறார். தொழிலாளன் ஒருவன் தானே தன் விருப்பம் போல் ஒரு தொழிலை செய்து அந்தத் தொழிலின் பயன்

முழுவதையும் தானே அடைபவனாய் இருக்க வேண்டும் என்ற கொள்கை உடையவராய் இருக்க வேண்டும். அதனால் தான் பெரியார், ‘‘முதலாளி சொல்லுகிறபடி வேலை செய்கிறவன் தான் தொழிலாளி என்றும் அவரிடம் கூலிக்குப் போராடுவதைத்தான் தொழிலாளர் இயக்கம் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் எந்த விதத்திலும் தொழிலாளி ஆக மாட்டார்கள்‘‘[15] என்று கூறுகிறார்.

‘‘ஒரு தொழிற்சாலைக்கு அங்கு வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது முட்டாள்தனம், அடிமைத்தனம், மானமற்றதனம் ஆகும்[16] என்கிறார்"

உழைப்பவனுக்கே தனது உழைப்பின் பயன் சேர வேண்டும். இதுதான் தற்கால நாகரீகத்தின் சரிசமத்துவ வாழ்க்கை. உலகமக்களில் எவருக்கேனும் இந்த சரிசமத்துவ சமதர்மம் குறைவு ஏற்படுமேயானால், அது காட்டுமிராண்டி அநாகரீக வாழ்க்கையே ஒழிய அது நாகரீகமாகாது என்றும் எது நாகரிக வாழ்க்கை எது நாகரிகமற்ற வாழ்க்கை என்பது குறித்தும் தனது கருத்தை பதிவு செய்து உள்ளது பெரியாரின் பொதுவுடைமை பார்வையை விளக்குகிறது.

**தொழிலாளர் இயக்கம்**

தொழிலாளர் இயக்கம் எப்படி இருக்க வேண்டும் என்று தனது எண்ணத்தை வெளிப்படுத்தும் பொழுது, தொழிலாளர்கள் இயக்கத்தின் போக்கை கண்டித்தும் உள்ளார். ‘‘எஜமானன் அதிக லாபம் அடைவதைப் பார்த்து பொறாமை கொண்டோ, தொழிற்திறத்திற்கு என்று அல்லாமல் வயிற்றுக்கு போதாது என்ற காரணத்தினாலோ தாங்கள் இல்லா விட்டால் வேலை நடக்காது என்று நினைத்து தங்களுக்கு அதிக கூலி வேண்டும், தராவிடின் வேலை நிறுத்தம் செய்வோம் வேறு ஒருவன் அந்த வேலையை செய்யவும் அனுமதிக்க மாட்டோம்.

முதலாளி எங்கள் வேலை நிறுத்தத்தால் நஷ்டமடைய வேண்டும் என்பது கூலிக்காரர்கள் இயக்கம்’’[17] என்று கூறுகிறார்.

"அரசியலில் தொழிலாளர்கள் ஈடுபடக்கூடாது. அரசியல் அவர்களிடம் வந்து சேரட்டும் என்று அவர் அரசியல்வாதிகளின் ஆசைக்கு பலிகடா ஆக வேண்டாம் என்று அறிவுறுத்தினார்’’[18]

**தொழிலாளர் தலைவர்கள்**

பல தேச பக்தர்கள் என்பவர்கள் முதலாளிகளிடம் கூலி பெற்றுக் கொண்டு தொழிலாளர்களை அரசாங்க பக்கம் திருப்பி விட்டு விடுகிறார்கள். இப்போதும் இந்நாட்டில் உள்ள துன்பத்திற்குக் காரணம் என்று தவறாக தொழிலாளிகள் கருதுகிறார்களே தவிர முதலாளிகள் என்று அவர்கள் கருதுவதில்லை. அரசால் அதிக நட்டம் தொழிலாளர்களுக்கு இல்லை என்பதை தொழிலாளர்கள் உணர வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

‘‘சென்னை பார்ப்பன தலைவர்கள் தங்களைத்தான் தொழிலாளர் விஷயத்தில் அதிக அக்கறை உள்ளவர்கள் என்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய சகல சௌக்கியங்களும் தாங்களே செய்யக்கூடுமென்றும் காங்கிரஸ் சுயராஜ்ய கட்சியில் சேர வேண்டும் என்பது சூழ்ச்சி என்று தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை செய்தார்’’[19]

‘‘காதினிக்க பேசுபவர்களைக் கண்டு தொழிலாளர் மயங்குவது அறிய பெரிதும் தான் வருந்துவதாகவும் கூறி வருத்தப்பட்டார்’’[20]

தொழிலாளர்களாக இல்லாதவர்கள் தொழிலாளி தலைவர்களாக வருவதை பெரியார் வெறுத்தார். தொழிலாளர்களே தொழிலாளிகளின் தலைவர்களாக வர முடியா விட்டால் தொழிலாளர் சங்கமே வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். தொழிலாளிகள் முன்னேற்றத்திற்கு தொழிலாளர்களையே நம்புங்கள் என்றும் அறிவுறுத்தினார்.

பிராமணர் அல்லாதாருக்கு பிராமணர் குருவாய் இருப்பது போலவும் இந்தியரை ஐரோப்பியர் ஆள்வது போலவும் தொழிலாளர்களுக்கு அரசியல்வாதிகள் தலைவர்களாய் வருவது ஒக்கும் என்று அரசியல்வாதிகளைத் தலைவர்களாக ஏற்க வேண்டாம் என்றும் தொழிலாளர்களை எச்சரித்தார்.

**முதலாளிகள்**

‘‘தொழிலாளிகளை மோசம் செய்யும் முதலாளிகளின் செயல்கள் எல்லாம் தொழில் திறமையாகவும், நிர்வாகத் திறமையாகவும் கருதப்படுவதைக் கண்டு வருதப்பட்டார்’’[21]

‘‘ஒரு முதலாளிக்கு அவனுடைய நாய்க்குட்டியோ மைனாக் கிளியோ, எருமை மாடோ மாண்டு போனால் அதை நட்டமாகக் கருதி துக்கப்படுவதும் ஒரு தொழிலாளி மரணித்தால் அதற்கு வருத்தப்படாமலிருப்பதும் கண்டு வருத்தமும் கோபமும் பட்டார்‘‘[22]

‘‘சம்பளத்தை ஏற்றிக் கொடுக்கும் முதலாளிகள் விலைவாசியை ஏற்றிக் கொடுத்த சம்பளத்தை தொழிலாளிகளிடமிருந்து பிடுங்கி விடும் ஏமாற்று வேலையைக் குறித்தும் எச்சரித்துள்ளார்‘‘[23]

**அரசியல் கட்சிகளின் மோசடி**

பண்டித ஜவகர்லால் நேரு தலைவராய் இருப்பதால் தாங்கள் காங்கிரசில் சேர முடியாது என்று பம்பாய் வர்த்தகர்கள் அறிக்கை விட்டதைக் கண்டு அஞ்சி, அவர்களை சமாதானம் செய்யும் பொருட்டு நேராக பம்பாய் சென்று அவர்களை சமாதானம் செய்யும் வழியாக தன் சமதர்மம் என்பது வெறும் பிரச்சாரமே தவிர கட்டாயமில்லை என்று சொல்லியதை எடுத்துக்காட்டி நேருவை தொழிலாளர்கள் நம்ப வேண்டாம் என்று எச்சரித்தார். காங்கிரஸ் சமதர்மத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சத்தியமூர்த்தி ஆனைமலையில் நடந்த ஐரோப்பியர்

சங்கத்தில் ஐரோப்பியர் முன்னிலையில் பேசியதைக் குறிப்பிட்டு காங்கிரஸை தொழிலாளர்கள் நம்பக் கூடாது என்றும் எச்சரிக்கை செய்தார்"[24]

வரதராஜுலு நாயுடு மற்றும் அன்னிபெசன்ட் அம்மையார் போன்ற தலைவர்கள் தங்கள் அலுவலகங்களில் அதிக எண்ணிக்கையில் பார்ப்பனர்களை வேலைக்கு அமர்த்தி உள்ளதையும் சுட்டிக்காட்டி இந்திய தலைவர்கள் பலரை நம்ப வேண்டாம் என்றார்"[25]

அப்போது இங்கிலாந்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த தொழில் கட்சியின் போலித் தனத்தையும் அதன் முகமூடியை கிழித்தும் தொழிலாளர்களுக்கு காண்பித்தார்"[26]

**தொழிலாளர் போராட்டமும் பெரியாரும்**

ஈரோட்டில் நடந்த தொழிலாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்மானத்தை முன்மொழிந்ததோடு நில்லாமல் தன்னால் ஆன பண உதவிகளையும் ஆன உதவிகளையும் செய்வதாக தொழிலாளர்களுக்கு வாக்களித்தார்"27 தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேசனில் இருந்த சாதி பாகுபாடு கொண்ட பிராமணர்களுக்கு இருந்த தனி சாப்பாட்டு இடம் பிராமணர் அல்லாதாருக்கு தனி சாப்பாட்டு இடம் என்று இருந்த ஏற்பாட்டை எதிர்த்தார்"[28] தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரை தேர்ந்தெடுத்த காரணத்திற்காக நாகை தொழிலாளர் சங்கமே உண்மையான சங்கம் என்று மனதாரப் பாராட்டினார்"[29] நாகை தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களுக்கும் இரயில்வே அதிகாரிகளுக்கும் நாகையில் பொன்மலைக்கு தொழிலாளர் குடிபுக வேண்டிய விஷயமாய் ஏற்பட்ட சிறு தகராறு சுமுகமாய் தீர்ந்து விட்டது அறிந்து பெரியார் மகிழ்ச்சி அடைந்தார்"[30]

கோயம்புத்தூரில் நூலாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டதைப் பற்றி மிகவும் வருத்தம் அடைந்தார்"[31]

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் தங்கள் குறையை எடுத்துச் சொல்லவும், அதை நிவர்த்தி செய்ய தாங்கள் கொண்டுள்ள முறைக்கு ஆதரவு தேடியும் ஊர் ஊராய் செல்லும் போது, ஆங்காங்கு உள்ள பொது மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டார்"[32]

வங்காளத்தைப் பின்பற்றி சென்னையிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டதை கடுமையாகக் கண்டித்தார்"[33] ஜமின்தார் முறையை ஒழிக்க வேண்டும் என்று விழைந்தார்"[34]

இலேவாதேவிக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, முதலாளிகள் அல்லாதார் மாநாடு, தொழிற்சாலை சொந்தக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, வீடுகளின் சொந்தக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, மேல் சாதிக்காரர்கள் அல்லாத மகாநாடு, பணக்காரர்கள் அல்லாதார் மகாநாடு என்று பலவிதமான மாநாடுகளை நடத்திக் காட்டினார்.

**இரங்கல் செய்திகள்**

மகத்தான தொழிலாள தலைவர்கள் மறைந்த பொழுது அவர்களின் மறைவிற்கு இரங்கல் செய்திகள் வெளியிட்டார். சக்லத்வாலா அவர்கள் 26.01.1936 - அன்றும், பகவத்சிங் 29.03.1931 அன்றும், சிந்தனை சிற்பி 16.02.1948 அன்றும், டிராட்ஸ்கி 25.08.1940-ம் அன்றும் மறைந்த பொழுது இரங்கல் செய்திகளை வெளியிட்டு தான் கம்யூனிஸ்ட் கொள்கையின் மீது இருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தி உள்ளார்.

**மேதினம்**

உலகெங்கும் கடந்த 50 வருடங்களாக மேதினத்தை ஒரு பெருநாளாகத் தொழிலாளர்கள் விவசாயிகள் முதலாளிகள் கவனித்து வருகின்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர் களுக்கும் எமாற்றப்பட்டவர்களுக்கும் இந்நாள் ஒன்றே சிறந்த தினமாகும். இந்நாளில் கோடான கோடி மக்கள் தாங்கள் படும் கஷ்டங்களையும் குறைகளையும் தெரிவிக்க வேண்டி ஆங்காங்கு கூட்டங்கள் போடுவதும், ஊர்வலம் வருவதும் உபன்யாசங்கள் செய்வதும் வழக்கமாயிருக்கிறது. England, France, Russia, Germany, Italy> U.S.A., India உள்ள பரிகாரம் தேடி[35] போவதும் பற்பல தீர்மானங்கள் செய்வதும் வந்திருக்கின்றன.

ஒழுங்காயும், நியாய முறைப்படி கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"36 என்று மேதினத்தைப் பற்றி கூறியுள்ளார்.

**இந்து சூத்திரர்களே கம்யூனிச தொழிலாளர்கள்**

இந்து மதத்தில் உள்ள சூத்திரர் பஞ்சமர் என்ற திராவிட மக்களுக்கு உழைப்பதையே கம்யூனிஸம் போற்றும். அவ்வாறு போற்றக்கூடிய தொழிலாளர்களின் நலத்திலும் அக்கறை செலுத்தினால் அதுவும் உழைப்பதற்கு ஒப்பாகும் என்று பெரியார் வாதிடுகிறார். சாதி இருக்கிறவரையில் எப்படிப்பட்ட பொதுவுடைமை திட்டம் ஏற்பட்டாலும் அந்தணர்களின் வாழ்வானது முன்புபோலவே நடக்கும் என்றும் கூறினார்."[37] இந்தியாவில் இந்து மதம் உள்ளவரையில் கம்யூனிஸம் வந்துவிடும் என்று யாரும் பயப்பட தேவையில்லை என்று கேலி செய்கிறார்"[38] இந்தியாவை பொறுத்த வரையில், வர்க்கத்தைக் கூட வருணம் தான் நிர்ணயிக்கிற முக்கிய காரணியாக விளங்குகிறது என்றும் விளக்கினார்"[39] சமதர்ம உணர்ச்சி ரஷ்ய நாட்டை விட இந்தியாவில் முதன் முதலில் ஏற்பட்டு இருக்க வேண்டும். கல்வி, அறிவு, உலகஞானம், சமதர்ம உணர்வு ஏற்படாமல் காட்டு மிராண்டிகளாய் இந்தியர்கள் இருக்கக் காரணம் இந்து மதமும், இந்து கடவுள்களும், இந்து கடவுள் சித்தாந்தமும், இந்து விதி கோட்பாடுகளும் என்று நம்பி, அதை மக்களும், தொழிலாளர்களும் உணர வேண்டும் என்று ஓயாமல் உரைத்துக் கொண்டே இருந்தார்"[40]

அதனால் மக்களிடமும், அதில் தொழிலாளர்களும் உணர வேண்டும் என்பதற்காகப் பின்வருமாறு கேள்விகள் கேட்டார்.

“தொழிலாளிகள் யார்? பிராமணர்களா? சத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள் தானே இது மாதிரியான தொழிலாளிகளாய் இருக்கிறார்கள். அந்த சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம் தானே சூத்திரர் என்ற பட்டியலில் சட்டப்படியும், சாத்திரப்படியும் கடவுள் படைப்புப்படியும் தின நடவடிக்கை வாழ்க்கை முறையில் இருந்து வருகின்றோம். திராவிடன், தொழிலாளி, சூத்திரன் என்பவன் காங்கிரசில் கொடி தூக்கி பார்ப்பனர்களுக்கு வால்பிடித்து அனுமார் வாழ்வு வாழ்வதைப் பார்க்கிறோமே"[41] என்றார்.

"ஒவ்வொரு இந்து கடவுளும் கற்சிலைகளாக இருந்தாலும், கோடிகணக்கில் வருவாய் ஈட்டும் முதலாளிகள் கல் முதலாளிகள் என்றார்"[42]

"இந்திய சமூகத்தில் சுகபோகிகள் எல்லாம் மேல் சாதிக்காரர்களாகவும், பாட்டாளிகள், உழைப்பாளிகள் எல்லாம் கீழ்ச்சாதிக்காரர்களாகவும் இருப்பதைக் கண்டு மனம் பதைத்தார்"[43]

அதனால் தான் பெரியார், "உயர்வு தாழ்வை ஒழிப்பதை முதல் அபேதவாதமாகக் கருதினார். பிறகு தான் பொருளாதார சமத்துவ அபேதவாதம் ஒழிக்க முயற்சிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்“[44]

இறுதியாகத் தனது சமதர்ம கொள்கையைப் பற்றி பின்வருமாறு கூறி முடிக்கிறார்.

இன்று சமதர்மவாதியாவதை தயவு செய்து கொஞ்ச நாளைக்காவது, பணக்காரனை வைவதை மறந்துவிட்டு ஜாதியை ஒழிக்கும் வேலையில் ஈடுபட்டு, சமுதாய சமதர்மத்தை உண்டாக்கவும், சமுதாய புரட்சிகளை உண்டாக்கவும் பாடுபடுவார்களாக எதிர்பாராதச் சம்பவங்களால் நிலைமை அனுகூலமாய் இருக்கும் சமயம், பொருளாதாரத்தைப் பற்றியும் யோசிப்போமாக“[45] என்கிறார்.

பெரியார் கம்யூனிச கொள்கையில் முதலில் கவரப்பட்டதைக் கண்டோம். ஆனால், இறுதியில் தன் சுயமரியாதை இயக்கம் மேற்கொண்டுள்ள சமூகநீதி போராட்டத்திற்கு முதன்மை அளித்தார் என்பது தெரிகிறது.

இந்து மதத்தின் வருணாஷ்ரம தர்மப்படி சமுதாயத்தில் அமைந்துள்ள சூத்திர பஞ்சம எனும் நான்காம் ஐந்தாம் சாதியினரே இந்தியாவில் தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு செய்யும் தொண்டே தொழிலாளர்களுக்குச் செய்யும் தொண்டு என்று கருதினார். சாதி அழிந்து சமதர்ம சமுதாயம் அமைக்கப்பட்டு விட்டால் இந்தியாவில் தொழிலாளர் என்பவரின் துன்பங்கள் தீரும் என்று அவர் வாதிட்டதையும் நம்பியதையும் காணமுடிகிறது.

**பின்குறிப்புகள்**


1. கி. வீரமணி, தந்தை பெரியாரின் பொதுவுடமை சிந்தனைகள், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம், சென்னை - 600007, 2019, P-XXVIII.
2. குடி அரசு - 21.03.1935
3. கி. வீரமணி. அணிந்துரை பெரியாரும் பொதுவுடமை கொள்கையும், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிருவனம், சென்னை - 600007, 2019, P-IX
4. குடி அரசு - 01.01.1933
5. குடி அரசு - 06.07.1946
6. குடி அரசு - 22.11.1936
7. கி. வீரமணி. அணிந்துரை பெரியாரும் பொதுவுடமை கொள்கையும், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிருவனம், சென்னை - 600007, 2019, P-XXI
8. கி. வீரமணி, தந்தை பெரியாரின் பொதுவுடமை சிந்தனைகள், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிருவனம், சென்னை - 600007, 2019, P-V
9. புரட்சி - 29.04.1934
10. குடி அரசு - 12.03.1933
11. குடி அரசு - 12.11.1933
12. குடி அரசு - 10.09.1933
13. குடி அரசு - 10.06.1934
14. குடி அரசு - 30.05.1926
15. குடி அரசு - 28.06.1925
16. புரட்சி - 01.04.1934
17. குடி அரசு - 28.06.1925
18. குடி அரசு - 30.05.1926
19. குடி அரசு - 16.04.1933
20. குடி அரசு - 24.04.1927
21. குடி அரசு - 25.06.1930
22. குடி அரசு - 11.12.1932
23. குடி அரசு - 01.10.1933
24. குடி அரசு - 30.05.1931
25. குடி அரசு - 15.01.1928
26. குடி அரசு - 18.12.1932
27. குடி அரசு - 29.07.1925
28. குடி அரசு - 05.06.1926
29. குடி அரசு - 21.11.1926
30. குடி அரசு - 21.11.1926
31. குடி அரசு - 04.09.1927
32. குடி அரசு - 15.07.1928
33. குடி அரசு - 01.10.1949
34. குடி அரசு - 27.08.1933
35. குடி அரசு - 27.08.1933
36. குடி அரசு - 14.05.1933
37. கி. வீரமணி. அணிந்துரை பெரியாரும் பொதுவுடமை கொள்கையும், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிருவனம், சென்னை - 600007, 2019, P-V - XI
38. மேலது, V - XIV
39. மேலது, V - XIX
40. குடி அரசு - 04.10.1931, 11.10.1931, 18.10.1931, 25.10.1931, 01.11.1931.
41. குடி அரசு - 06.07.1946
42. மேலது, V - VII
43. குடி அரசு - 29.11.1936
44. குடி அரசு - 01.08.1937
45. குடி அரசு - 29.11.1936


■

கட்டுரை

# இஸ்லாமிய இலக்கியம்

## ஒரு கண்ணோட்டம்

**உதயை மு.வீரையன்**

தமிழ் இலக்கிய வரலாறு தொன்மை மிக்கது. அதனைச் சங்க காலம் (கி.பி.300-கி.பி.100) என்றும், சங்கம் மருவிய காலம் (கி.பி.100-கி.பி.600) என்றும் வரலாற்றாசிரியர் கூறுவர். சங்க காலமே தமிழர்களின் பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

சங்கம் மருவிய காலத்தில் சமயம் வந்தது. சமய இலக்கியங்களும் வளர்ந்தன; சைவம், வைணவம் முதலிடம் பெறுகின்றன. அடுத்து சமண, பௌத்த இலக்கியங்கள் தமிழை வளர்த்தன. அதனைத் தொடர்ந்து கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் தமிழ்ப்பணியும், தமிழ்த் தொண்டும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆயினும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமியரின் தமிழ்த் தொண்டு விரிவாக எழுதப்படவில்லை. இந்தக் குறைபாடு இன்னும் களையப்படவில்லை. இனியாவது இஸ்லாமிய இலக்கிய ஆய்வு முறையாகவும், விரைவாகவும் எழுதப்பட வேண்டும்.

### இஸ்லாமிய எழுச்சி

“கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கிய தமிழகத்தில் இஸ்லாமிய சமய உறவு ஏற்பட்டுவிட்டது. வணிகத் தொடர்பு இங்கு நிலைபெற்றுள்ளது. பாரசீகம், அறபு, உருது மொழித் தொடர்புகள் குறிப்பிடற்பாலன...” என்கிறார் முனைவர் தமிழண்ணல்.

தொடக்கக் காலத்தில் தமிழை அறபு எழுத்துகளில் எழுதினர். பேச்சுத் தமிழ் நடைக்கு ஒப்பான ஒரு நடையில் எழுத முற்பட்டனர். இவ்வாறு தொடங்கிய இஸ்லாமிய இலக்கியத் தமிழ் இறுதியில் சீரியத் தமிழாகியது.

“இஸ்லாம் தமிழ் நாட்டில் பரவிய பிறகு, அந்தச் சமயத்தைச் சார்ந்த பலர் தமிழ் கற்று தமிழராகவே வாழ்ந்தனர். பழைய தமிழ் இலக்கியங்களைக் கற்று வல்லவய்த் தமிழ்ப் புலவர்களாய்ப் புகழ் பெற்றனர். அவர்களில் ஒருசிலர் புதிய நூல்கள் பலவற்றைப் படைத்துத் தரவும் முற்பட்டார்கள்...” என்று டாக்டர் மு.வ தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகிறார்.

**இஸ்லாம்+தமிழ்+இலக்கியம்**

“இஸ்லாம், தமிழ், இலக்கியம் என்னும் மூன்று சொற்களையும் கொண்ட சொற்றொடரே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம். இஸ்லாம் எங்கள் வழி; தமிழ் எங்கள் மொழி; இலக்கியம் எங்கள் விழி என்பதற்கேற்ப வழி, மொழி, விழிகளாய் அமைந்துள்ளது இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்...” என்று கூறுகிறது மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு.

எனவே இஸ்லாமியர்கள் தமிழர்களாகவே வாழ்ந்தனர்; தமிழுக்காகவும் வாழ்ந்தனர்; தமிழ் இலக்கியம் வளரவும் பாடுபட்டனர்; அவர்கள் தமிழ் இலக்கியம், கலை, வரலாறு இவற்றோடு இணைந்தவர்கள். அவர்களைப் பிரித்தாலும் பிரிக்க முடியாது என்பதைக் காலம் சொல்லும்.

“இஸ்லாம் என்றால் அமைதி. தமிழ் என்றால் இனிமை. இரண்டும் சேர்ந்து அமைதியில் இனிமை, அமைதியில் இன்பமான இனிமை. இதனையே எவரும் விரும்புவர். அமைதியில் இன்பமான இனிமை தருவது இஸ்லாமும் இன்பத் தமிழும் எனின் அது மிகையாகாது...” என்றார் இஸ்லாமிய இலக்கிய ஆய்வாளர் முகமது உவைஸ்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியம் இருவகைப்படும். இஸ்லாமிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை ஒருவகை; இஸ்லாமியப் புலவர்களால் எழுதப்பட்ட சமயத் தொடர்பற்றவை மற்றொரு வகை. இவை தமிழுக்கு அணி செய்தன; அவர்களுடைய சமயப் பிரச்சாரத்துக்கும் கருவிகளாக அமைந்தன; ஒன்றுக்கொன்று உதவின என்றுதான் கூறவேண்டும்.

**பேரிலக்கியமும், சிற்றிலக்கியங்களும்**

“சீறாப் புராணம் போன்ற சில நூல்களே தமிழ் உலகிற்கு அறிமுகப்பட்டிருந்தனவேயொழிய, தமிழ்த் தொண்டிலே ஊறித் திளைத்த பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் படைப்புகள் அறிமுகப்படுத்தப்படவில்லை. தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய எழுத்தாளர்களும், இஸ்லாமியத் தமிழ்த் தொண்டு பற்றி ஓரிரு நூல்களைக் குறிப்பிட்டிருந்தனரேயொழிய, இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பரப்பை ஆராயவில்லை. இஸ்லாமியரே தமது இலக்கிய வளம் பற்றி அறியாதிருந்தனர்...” என்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.வித்தியானந்தன்.

இன்றும் இதுதான் உண்மை. இஸ்லாமியப் புலவர்களின் இணையற்ற தமிழ்த் தொண்டை ஏனைய தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய பணியை இஸ்லாமியரே செய்யவில்லை. காரணம் அவர்களில் பலரே அவற்றை அறியவில்லை; இது எவ்வளவு பெரிய வேதனையாகும்.

சைவம், வைணவம், சமணம் முதலிய சமயங்கட்கு இணையாக இஸ்லாமிய இலக்கியங்களும் படைக்கப்பட்டன. தாயுமானவர் போல தத்துவப் பாடல்களும், அருணகிரிநாதரைப் போல அழகிய சந்தப்பாடல்களும் பாடப்பட்டன. இவற்றுக்கும் மேலாக தமிழ்க்காப்பியங்களும், பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கியங்களும் இயற்றப்பட்டன.

இஸ்லாமியத் தமிழ் நூல்களுள் தலை சிறந்தது சீறாப்புராணம் என்னும் காப்பியமே என்பதைத் தமிழுலகம் தடையின்றி ஏற்றுக் கொண்டது. சிற்றிலக்கிய வகைகளுள் ஆற்றுப்படை, அந்தாதி, உலா, பரணி, கலம்பகம், கோவை, தூது, பிள்ளைத்தமிழ், சதகம், வண்ணம் ஆகியவற்றையும் முஸ்லிம் புலவர்கள் பாடியுள்ளனர்.

**புலவர்களும், படைப்புகளும்**

குலாம் காதிறு நாவலர் இயற்றிய மதுரைத் தமிழ்ச் சங்கத்து புலவராற்றுப்படை, ஆ.கா.பிச்சை இபுராகீம் புலவர் படைத்த திரு மதீனத்தந்தாதி, நாகூர் வித்துவான் வா.குலாம் காதிறு நாவலரின் திருமக்காத் திரிபந்தாதி, செய்கு அப்துல் காதிறு நாயனார் ஆலிம் இயற்றிய நாகையந்தாதி ஆகியவை கிடைத்துள்ளன.

நபிநாயகம் பிள்ளைத்தமிழ் செய்யிது அனபியா சாகிபு என்பவரால் எழுதப்பட்டது. மக்காக் கலம்பகம் காயல்பட்டினம் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் இயற்றியது. கோவை நூல்களுள் திருமக்காக் கோவையின் ஆசிரியர் செவத்த மரைக்காய சீரியர்.

நபியவதார அம்மானை கி.பி.1713இல் இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் சீறா எழுதிய உமறுப்புலவரின் புதல்வர் கவிக்களஞ்சியப் புலவர். முதுமொழி மாலை உமறுப்புலவரால் பாடப்பட்டது. நபியுல்லா மாலை என்னும் இரசூல் மாலை சாமு நெயினார் லெப்பை என்பவரால் இயற்றப்பட்டது. இவ்வாறு எராளமான மாலை வகைகள்.

இவை தவிர, நபிகள் நாயகத்தைப் போற்றிப் பாடப்பட்ட திருப்புகழ் (காசீம் புலவர்), அப்துல் காதிறு லெப்பை கலீபாப் புலவரால் இயற்றப்பட்ட சுகிர்த மெய்ஞ்ஞானச் சங்கீர்த்தனம், தொண்டி நகரைச் சேர்ந்த சீனி காதிறு முகியித்தீன் அவர்களால்

பாடப்பட்ட நவநீத ரத்நாலங்காரச் சிந்து, பூவடிச் சிந்து (காளை ஹசனலிப் புலவர் இயற்றியது) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இன்னும் கும்மி, தாலாட்டுப் பாடல்களும், உரைநடை நூல்களும் இயற்றப்பட்டுள்ளன. காரைக்காலைச் சேர்ந்த காதிறு கனிப் புலவரால் எழுதப்பட்ட பஞ்சா வரலாற்று விளக்கம் சிறந்த உரைநடை நூலுக்கு உதாரணமாகக் கூறலாம்.

**புதிய இலக்கிய வரவு**

தமிழ் நாட்டில் முஸ்லிம் நாயன்மார்களும் சிறந்து விளங்கினார். குணங்குடி மஸ்தான் சாயபு (என்னும் சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம்), காலங்குடி மச்சரேகைச் சித்தன் (என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் செய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானா ஐதுரூஸ்), தற்கலை பீர்முகமது சாகிபு ஆகியோரின் பாடல்கள் இஸ்லாமுக்கும், தமிழுக்கும் அணி சேர்ப்பன.

முகமது புலவர்கள் தமிழ் மொழிக்கு புத்தம் புதிய இலக்கிய வகைகளையும் வழங்கியுள்ளார். போரைச் சித்திரிக்கும் 'படைப்போர்' அல்லாவைத் தொழும் 'முனஜத்' வரலாறு கூறும் 'கீசா' வினா விடையாக அமையும் 'மசலா' மற்றும் 'நாமா' இவற்றைக் கூறலாம்.

**காலம் இடும் கட்டளை**

"உலகிலே வேறெந்த மொழிகளுக்குமில்லாத தனிப்பெரு... சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. எல்லாச் சமயத்தவரும் தமிழைப் பேணி வளர்த்திருக்கின்றனர். சைவர்கள், வைணவர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோர் இலக்கியங்கள் தமிழை வளப்படுத்தியுள்ளன.

இவர்கள் போலவே எண்ணிறந்த இஸ்லாமியப் புலவர்கள் மிகச் சிறந்த நூல்கள் பலவற்றைத் தமிழிலே படைத்திருக்கின்றனர். பொருளமைப்பிலும், உருவத்திலும் இவ்விலக்கியங்களினாலே தமிழ் இலக்கியம் பெரும் பயன் அடைந்திருக்கின்றன. ஆனால் இவ்விலக்கியங்கள் பற்றிப் பலருக்குத் தெரியாமல் இருந்தது..." என்று யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு.வித்தியானந்தன் குறிப்பிடுகிறார்.

இதனை இஸ்லாமியர்கள் மட்டுமல்ல, தமிழ் இலக்கிய உலகமே கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லாதவற்றை உருவாக்க வேண்டிய தருணத்தில் இருப்பதையே அறியாமலும், அறிமுகப்படுத்தாமலும் இருந்து விட்டோம்; இனியாகிலும் விழித்தெழுவோம். இதுவே காலம் நமக்கு இடும் கட்டளை.

30.11.2021 அன்று திருப்பூரில் 36வது தேசிய புத்தகக் கண்காட்சியை திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் அவர்கள் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் கீதாஞ்சலி கோவிந்தப்பன், ஆர்.கிருஷ்ணன், எம்.நாராயணமூர்த்தி, சுப்ரபாரதிமணியன், பி.ஆர்.நடராஜன், முனைவர் ஏ.ஆர்.ஈஸ்வரி, முனைவர் நா.பாலசுப்பிரமணியன், என்சிபிஎச்.கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் கோவை கிளை மேலாளர் எஸ்.குணசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




₹ 290/-




₹ 35/-




₹ 335/-

₹ 185/-




₹ 50/-




₹ 50/-

₹ 55/-

₹ 40/-

₹ 135/-

கட்டுரை

# அகாதெமி விருதுபெறும் அம்பை : சன்னலில் இளைப்பாறும் பறவை

- வீரபாண்டியன்

**'விளக்கு'** விருது, கனடாவின் 'இயல்' விருது பெற்ற அம்பைக்கு சாகித்திய அகாதெமி 2021ஆம் ஆண்டுக்கான தமிழ்மொழிக்குரிய விருதினை வழங்குகிறது. தமிழில் இவ்விருதினைப் பெறும் நான்காவது பெண் எழுத்தாளர் இவர். ஒரு நல்ல படைப்பாளி என்ற முறையில் அம்பையைப் பார்த்தாலும் ஒரு நல்ல படைப்பு என்ற முறையில் 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை'யைப் பார்த்தாலும் சாகித்திய அகாதெமி விருது வரவேற்கக் கூடியதாக இருக்கின்றது.

அம்பை(1944) கோவையில் பிறந்து, சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இளங்கலை முதல் ஜே.என்.யூ.வில் முனைவர்பட்டம் வரை பெற்ற ஒரு வரலாற்றுத்துறைப் பேராசிரியர். சி.எஸ். லக்ஷ்மி எனும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆண்டுகளாகப் பெண் முன்னேற்றத்திற்கான பல்வேறு செயல்பாடுகளை நிகழ்த்தி வருகின்றார். ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இவரது பல நூல்கள் வெளிவந்துள்ளன. 1976இல் வெளிவந்த இவரது முதல் சிறுகதைத் தொகுப்பான 'சிறகுகள் முறியும்' நூல் தொடங்கி, வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காட்டில் ஒரு மான் எனத் தொடர்ந்து, விருதுபெற்றுள்ள இந்த ஏழாவது சிறுகதைத் தொகுப்பு வரையிலுள்ள பெரும்பாலான கதைகள் பெண் இருப்புக்கான அடங்காக் குரலை, அதீத வலியை அமைதியுடன் பகிர்பவை. ஆனால் முள்ளென நறுக்குத் தைத்தாற்போல் இருப்பவை.

குறிப்பான வேறுபாடென்றால், ஊசியேற்றம் வலிப்பதில்லை. மருந்து ஊடுருவி வலியைப் பரவச்செய்யும் கதைகள். போராளி இரோம் ஷர்மிளாவின் *'Fragrance of Peace'* எனும் நூலை 'அமைதியின் நறுமணம்' என்றாக்கி மொழிபெயர்ப்புத் தளத்திலும் இயங்கிவரும் அம்பை, மொழி வேறுபாடுகளைக் கடந்தும் பெண் வாழ்வியலில் பல்வகைப்பட்ட அழுத்தங்கள் பொதுமையாகவிருப்பதைக் கடத்தும் புனைவாக்கத்தில் பொலிவுறுகிறார். 200 பக்க அளவுடைய இந்நூலும் இதனை ஆழமாக வழிமொழிகின்றது. அதேநேரம் பெண்மை கடந்து அக்கதைகளுக்குள் பரந்துபட்ட சமூக அசைவியக்கங்களையும் காட்சிப்படுத்தக் கூடியவர். தமிழக மனநிலைகளுக்கு அவ்வளவு எளிதில் சிக்காத கதைகள் இந்நூலில் உள்ளன.

முதல் கதையான 'தொண்டைப் புடைத்த காகம் ஒன்று' தொண்டைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தந்தையின் இயல்பு தவறிய வாழ்வியலைக் காட்டுகிறது. தொண்டைப் புடைத்த காகம் இரையை விழுங்குவதற்குக் கொள்ளும் கடினம் உயிர்வாழ்தலுக்கான துயர வெளிப்பாடு. காகத்தின் அக்காட்சியையும் அப்பாவின் தொண்டை நோயினையும் ஒருசேரப் பார்க்கப்பட்டுள்ள பார்வையே கதைவயம் ஈர்க்கிறது. ஓர் ஆளுமையாய் இருந்து நிழலாடியவர் அடங்கிக் கிடக்கிற தன்மையென்பது மரணத்தினும் வலிதரக்கூடியது. அவர் மறைவுக்குப் பின் அவருடைய பொருட்களை அகற்றிய போது அவர் எழுதி வைத்த குறிப்பு ஒன்று கிடைக்கிறது: 'பாதை நீளமென்று தெரிகிறது. வழி தெரியவில்லை. இருட்டு. பாதைகளை மறைக்கும் அடர் காடு. போகுமிடம் மறந்துவிட்டது. எங்கோ தூரத்தில் அது. அதன் பெயர் தெரிந்தால் ஆசுவாசம் பிறக்கும்.

ஆனால் அதற்குப் பெயர் உண்டா? அப்படிப் பெயர் தெரிந்துவிட்டால் வழி புரிந்துவிடுமா?' என்பது ஜீவிக்கத் துடிக்கும் எல்லாருக்குமானது.

'சாம்பல் மேல் எழும் நகரம்' கதையின் தலைப்பிலேயே அதனாழத்தை உணரமுடியும். இன்றளவும் நவீனப்படுத்துதல், உடைமையாக்கல் என்பவற்றின் பேரில் எத்தனைக் குடியிருப்புகள் கொளுத்தப்படுவது உள்ளிட்ட அகற்றப்படுதல்களால் வேர் பிடுங்கப்படுகின்றன என்பதைக் கண்ணுற முடிகிறது. அதிலும் இயங்க முடியாத முதியவர்களைக் கொண்டு வீடு அடைகாக்கப்படும் கூடு போன்று பெரும்பாடு; பெருங்கவலை. ஊர்மிளாவும் மாமியாரை வைத்துக்கொண்டு மிகச் சிரத்தை எடுக்கிறார். ஊர்மிளா மாமியாருக்கு முன்பே இறந்தாளா இல்லையா எனும் ஐயப்பாடு இக்கதையில் எழுகிறது. வீட்டு வேலை செய்யக்கூடிய பெண்களுக்கான சங்கம் இருப்பதை இக்கதை காட்டுகிறது.

'எவ்வளவுதான் தணிக்கை செய்து அவள் வாழ்க்கைக் குறிப்பை எழுதினாலும் அதில் பூமியின் ஏகப்பட்ட அடிமட்ட பூகம்பக் கோடுகள். அவற்றைத் தவிர்ப்பது கடினம்' என்கிறது 'பயணம் 21' கதை. இக்கதையில் இன்னொரு குறிப்பிடத்தகுந்த ஒன்று புத்தகங் கிடங்கு குறித்த எண்ணம். என்னென்ன புத்தகங்கள் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும் எனும் பட்டியல் சமூகத்தின் அறிவுப்புலத்தின் மீதான அக்கறையும் அவரது அறிவுபலத்தையும் காட்டும் பகுதி அது. கிடங்கினை, 'வதைபடும் மிருகம் ஒன்றின் ஈனக் குரல்போல ஓசையிட்டு, துருப்பிடித்தப் பூட்டு இறுகப் பூட்டிக்கொண்டது' என்று கதை முடிகிறது.

இரண்டு மூன்று கதைகளில் இந்திராகாந்தி ஆட்சியில் அவசரநிலைப் பிரகடனத்தின் வரிப்பதிவு இடம்பெறுகிறது. அதில் ஒன்றான 'வீழ்தல்' கதையில் 12ஆவது மாடியிலிருந்து தற்கொலை செய்துகொள்ள வீழ்ந்துவிட முயலுதலிலிருந்து வாழ்க்கை எங்கெல்லாம் மனிதர்களை வீழ்த்துகிறது என்பது உணர்த்தப்படுகிறது. கதையை வாசித்த பிறகு மனதுக்குள் சமூகத்தின் வீழ்ச்சி குடைகிறது. உடம்பில் எது. ஒன்றும் முறியலாம் ஆனால் முதுகெலும்பு முக்கியம். அதன் பலம் பெண்களைப் பொருத்தவரையில் காலாவதியாகாத ஒன்று என்று மாளாத உழைப்பைப் பொதுமையாய்க் குறிப்பிட்டுச் சக்கர நாற்காலி வாழ்க்கை தற்கொலையின்பால் சரியத் தொடங்குவதைக் காட்டுகின்றது.

புராணம், இசை, அறிவுப்புலம் சார் குறிப்புகளுடன் மெருகேறியுள்ள கதைகளின் பலமான பொருண்மைகளுள் நூல் தலைப்பிலான கதையானது செவித்திறன் அற்றவர்களின் வாழ்வியல் புழக்கத்தை, அதற்குரிய புழுக்கத்தை ஆழமாகக் காட்டுகின்றது. கதைக்குள் சிவப்புக் கழுத்துடன் தென்படும் பறவையின் பாத்திரத்தைத் தந்து 'அந்தப் பறவையின் கூவல் தொண்டையில் அடைபட்டுக் கிடக்கிறது' என்றுணர்த்தித் தேன்மொழியின் செவிக்குச் சுருதி சேர்க்கிறார். வாய்ப்பேச்சு, சைகைமொழி என்ற விடயங்களை அசைபோட்டு அலைபேசிக்கு முன்னதான தொலைபேசியைக் கண்டறிந்த அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் வாழ்வியல்வழி முன்வைத்த 'வாய்ப்பேச்சு'க் கல்வியை இக்கதை அழகுற மேன்மையாக்குகிறது. அதாவது, செவிக்கருவிகளின் மீயொலி, அறுவை சிகிச்சையின் வலி என்பவற்றைக் கடக்கும் உதட்டசைவைப் பார்த்துப் பேசிடும் கருத்தைக் காட்டி 'மொழி ஒரு தொடர்பு. ஒலி இல்லாமலும் அது நேரலாம்' என்று நெக்குருகி நெகிழ்கிறது.

பேரிளம்பெண்கள் அல்லது ஆண்கள் பற்றுதலில்லாத, தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வில் புதியதொரு துணையைக் கண்டடைதல் எனும் கருத்தினைக்கொண்டு 'வில் முறியாத சுயம்வரங்கள்' கதை நடக்கிறது. இரு உயிர்களின் ஒற்றுமையை, கல்யாண வாழ்க்கையைக் கடந்து மீண்டும் வேறொரு புரிதலான காதல்கொள்ளலைப் பேசுகிறது. அருணன் - சாந்தி - நந்து எனும் முத்தரப்பில், அருணன் மறைவுக்குப் பின் துணை தேவை என்பதைத் தாய்க்கு அறிவுறுத்தும் ஸ்கைப் வாரிசுகள், தாய் ஏற்கெனவே அதற்குத் தயாராகி இருக்கிறாள் என்பதை ஏற்பதற்குத் தயங்குகிறார்கள். அவர்களது கைப்பாவையாய் ஆகிடாமல் கைப்பிடியிலிருந்து விலகிச் சுயத்தைத் தக்கவைத்துக்கொள்கிறார் கல்லூரிப் பேராசிரியை சாந்தி.

'அருணை அவளால் மறக்க முடியாது. நீக்க முடியாது. அவள் ஏன் ஒன்றை வைக்க இன்னொன்றை நீக்க வேண்டும் என்று எல்லாவற்றையும் ஸ்தூல வடிவிலேயே பார்க்கிறாள்? ஒரு நதி கடலில் கலக்கும்போது வேறு எந்த நதியைத் தள்ளிவிடுகிறது? கடலில் கலந்த ஒன்றை எப்படி நீக்குவது? பிரவாகத்தில் உள்ள நீரின் கலவையை எப்படி அடையாளப்படுத்த முடியும்?' எனும் புதுஉறவுக்கான அம்பையின் வாதம் பேரலை. ஆண் பெண் உறவின் பொருளுடைய புரிதல்களை இக்கதை குமிழியிடுகிறது. அதேநேரம், 'மீனைத் திருப்பிப் போடணும்' என்றும் கதை புரண்டு படுக்கிறது (ஆனால் நந்து இளம்பருவத்துக் காதலுக்குப் பின் மணமாகாமலேயே இருந்து கடைசியிலும் தேடிவருகிறார்). 'காலமாகி நின்றன கடக்கும் வழியில்லாமல்' எனும் அம்பையின் வரியில் வாசக மனதும் இக்கதைக்குள்ளே சுழலுகிறது.

ஏறத்தாழ இதே கருத்துநிலையைக் கொண்ட கம்யூட்டர் காலக் கற்பனையோடு உறவாடும் கதைதான் 'சிங்கத்தின் வால்'. பொம்மையை வாங்கித் தருவதிலேயே ஆண், பெண் வேறுபடுத்தல் எனக் குழந்தையிலேயே பாகுபாடு தொடங்கிவிடுகிறது. 'சைபோர்க்' (ஒட்டாகம்) எனும் மீமனிதனுடன்

மதுரா என்பவள் உரையாடும், உறவாடும் வாழ்விலும், சாதாரண ஆணாக இல்லாத மீமனிதனாக இருந்தாலும் ஆண் ஆண்தான் அவனும் விதிவிலக்கில்லை என்று காட்டப்படுகிறது. மரணத்தின் விசாரணை, உண்மை, பொய், நாத்திக நிலைப்பாடு, கோட்பாடு, சமன்பாடு எனப் பல தளங்களில் விரிகிறது கதை. 'மரணத்தை எதிர்கொள்ளத்தான் மனிதர்கள் மதத்தை உருவாக்கினார்கள்' எனப்படுகிறது. பெண் மனவெளிப்பாட்டின் அதீதக் குரலாக ஒலிக்கிறது இக்கதை.

பெண் வாழ்க்கையை ஒருநாளாவது, அதுவும் பெண்ணாக ஆண் வாழ்ந்திருந்தால் வலிதெரியும் என்பதை மாயாஜாலக் கற்பனையுடன் பெருக்கெடுக்கிறது 'பொய்கை' கதை. வனநடைப் பயணத்தில் அதாவது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு நாள்கூட வாழ்ந்திரவியலாத ஆணைப் பார்த்துக் 'குமிழியிட்டுச் சிரிக்கிறது' அந்தப் பொய்கை. ஐயோ, அப்படியான ஒரு நாள் வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது என்று புரியவைக்கிறது. 1984இல் அகால் தக்த் இடிக்கப்பட்டது, சீக்கியர் படுகொலை, பிரிவினை என எல்லாத் தரப்பினரிடையும் எப்படி அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை இறுக்கமாக்குகிறது '1984' கதை.

பயண இலக்கியம் எழுதுவதைப் போலப் பயண அனுபவக் காட்சிகளைப் பணயம் வைத்து எழுதும் முறைமை அம்பையிடம் வரவேற்கத்தக்க புதுமை. ஆனால் அது அவரது 'காட்டில் ஒரு மான்'(2000) நூலிலேயே பயணம் 1ஐத் தொடங்கிவிடுகிறது. இத்தொகுப்பில் மூன்று கதைகள் பயணம் 21, பயணம் 22, பயணம் 23 என்பவை இடம்பெற்றுள்ளன. இவற்றில் பின்னிரு கதைகள் வாசகருக்கு வேறுபட்ட மனமருட்கையை ஏற்படுத்துவன. ஒன்று, புலம்பெயர் வாழ்வியல் வரலாறு இதுவரை அறிந்திராத கேரளா, மங்களூர் போன்ற இடங்களிலிருந்து நிறைய பெண்கள் கன்யாஸ்திரீகளாக ஐரோப்பா சென்று வாழும் இடர்பாட்டை மையப்படுத்துகிறது. அப்பெண்களில் பலரும் ஏழைப் பெண்களாவர். புத்தகச் சந்தையை நாடி வெளியூர் விரையும் மரியாவுக்கு இச்செய்திகள் காணவருகிறது. அவள்

'ஒரு பெண்ணும் தையல் வேலை கற்க முன்வரவில்லையாம். கணினிகள் கேட்டார்களாம்' எனும் ஆதங்கத்தையும் ஆணியடித்து மாட்டுகிறது.

இரண்டாவது, டோக்கியோவின் அஸாஹி பியர் ஹால் கட்டடத்தின் மேல்நின்ற ஒரு நவீன தங்கநிறச் சிற்பம் பற்றியது. ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண்களால் உருவாக்கப்படும் பலவற்றில் அந்த ஆணியச் சிந்தனை(காம இறுக்கங்கள்) வெளிப்படுவதாகவே உள்ளது. கடவுள் மரபிலிருந்து கலை வடிவம் வரை பார்ப்பதெல்லாம் ஆண்குறி உள்ளிட்ட ஆண் பெண் உடலமைப்புகளாகவே அச்சுறுத்துகிறது; அயர்ச்சியை, அழற்சியைத் தருகிறது. உயிர்களின் அடிப்படை உணர்வு என்றாலும் அது உருட்டப்படும் கட்டைகளால் பாம்பு வாய்க்குள் சிக்கிய பரமபதமாகிவிடுகிறது வாழ்க்கை. பாரதியின் 'அக்கினிக்குஞ்சு' அடிகளையும் அப்படிப் பார்க்கத் தோன்றிடுவதாகப் பதிவாகிறது. பியர் ஹால் கட்டடம் பியர் குடிக்கும் கண்ணாடிக் குவளை வடிவமைப்பிலான அக்கட்டடத்தின்மேல் உள்ள தங்கநிறச் சிற்பம் ஆண்குறி வடிவத்தைக் காட்டுவதாகப் படுகிறது. அதுகுறித்த விவாதங்கள் நீளுகையில் அங்கிருந்த ஒருவர் 'தங்கப் பீ என்றுதான் நாங்கள் அதைச் சொல்லுவோம் என்று சிரித்துக்கொண்டே சொல்கிறார். வாழ்க்கையை வாழ்ந்து முடித்த முதுமை அனுபவம் அதனை அப்படிப் பார்க்கிறது என்பதைக் கதை முடிவு காட்டுகின்றது.

புதிய புதிய பெண் வெளிகளைத் திறந்து வைக்கிறார் பயணத்தினூடாக. சன்னலை விடாமல் பேசும்(குறைந்தது ஏழு கதைகளில் பதிவு செய்யும்) அம்பை, பயணங்களில் (விமானம், இரயில்,பேருந்து) பலரும் விரும்பும் சன்னலை எழுதாமல்போனது ஏனோ புருவ வியப்பு வினாவாக உள்ளது. இவ்வாறான கதைகளால் அகன்ற சிறகு விரிப்புடன் பறந்து பரந்துவிரிந்த உலகத்தை வலம்வருகிறது 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை'.

பதின்மூன்று கதைகளுள் முதல் தளத்தில் வைத்துப் பார்க்கவேண்டிய கதைகளாகச் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, வில் முறியாத சுயம்வரங்கள், சாம்பல் மேல் எழும் நகரம், பயணம் 22, சிங்கத்தின் வால் ஆகிய ஐந்தினையும் பார்க்க முடியும். அடுத்த நிலையில் இரண்டாம் தளத்தில் 1984, தொண்டைப் புடைத்த காகம் ஒன்று, பொய்கை, வீழ்தல் ஆகிய கதைகளும் அதற்கடுத்த நிலையில் பயணம் 23, குதிரைக்காரி எனப் பிற கதைகளும் கொள்ள முடிகிறது. அதாவது இக்கதைகள் கொள்ளும் தீவிரத்தின் அடுக்குநிலையாக இம்முறைமை இருக்கிறது.

அம்பையின் புனைவு உயர்திணையாயினும் அஃறிணையாயினும் அது உயிரே எனும் நேயத்தினை நிறுத்துகிறது. வாழும் வாழ்க்கையை அழுத்தத்துடன் அலுத்துக்கொள்கிறது. ஆனால் மரணம் எளிமையாக நடந்துவிடுகிறது. யாருடைய ஆயுளிலும் அவர் குறை வைப்பதில்லை. எழுபத்தைந்து, எண்பத்தைந்து என்றெல்லாம் மனிதர்கள் இயங்குகிறார்கள். அத்துடன் இயங்க முடியாதவர்களுடைய உலகத்துக்குச் சன்னலைத் திறந்து வைக்கிறார். அம்பையின் எழுத்து அடைபட்ட(அடைக்கப்பட்ட) உலகம் சுதந்திர வெளியைத் தேடுகிறது. அகவை முதிர்ந்த பெண்களின் பற்றுதலற்றுப் போன அலைவு நிலையினையும் கதைப்படுத்துகிறது.

சன்னல்தான் எல்லாமுமாய் இருக்கிறது. அது அவரது உலகம். அந்த உலகத்தின் வழியேதான் இந்த உலகத்தை, அண்டசராசரத்தை அகன்ற பார்வையால் பார்க்கிறார். இந்தச் சன்னல் அகலத்தைத்தான் அகிலத்தைக் காணப் பெண்ணுலகுக்குச் சமூகம் வரையறுத்துக் கொடுத்திருக்கிறது. இங்குதான் பெண்கள் போன்று குரலடக்கப்பட்டவர்களால் மூச்சுவிட முடிகிறது; தங்கள் முகம் பார்த்துக் கொள்ள முடிகிறது. சன்னலில்தான் தோசைக் காகம், தொட்டி மல்லிகைச் செடி, ஆரஞ்சுஇலை மரம் உள்ளிட்ட அஃறிணை வாசிகளோடு உறவாட முடிகிறது, செல்போன் கூடச் சன்னலில்தான் அமர்கிறது, வீட்டு உதவியாள் கம்லியும் சன்னல்வழி பார்க்கிறாள், சக்கர நாற்காலி காமும்மா அங்குதான் நிற்கிறாள் எனச் சன்னல் அவதாரமெடுத்து நிற்பதைக் கவனிக்க முடிகிறது. அம்பையின் படைப்புகளைப் படிப்பவர்களுக்கு அதற்குப் பின் ஜன்னல் என்று உச்சரிக்கத்தோன்றாது; சன்னல் என்றே சன்னமாக அனுக்கமாகும்.

தமிழக மனவெளிக்கு, பண்பாட்டு வெளிக்குப் பழகிடாத கதைகள் புழங்குகின்றன. கதைகள் தில்லி, மும்பை என வடக்கத்திய வாழ்க்கை முறையில் நிகழ்கின்றன. பெரும்பாலும் பெண்களே மையக் கதைமாந்தர்களாக இருக்கின்றார்கள். கல்லூரியில் பணியாற்றுகின்ற, கல்லூரியோடு தொடர்புடைய பெண் மாந்தர்கள் அதிகம் பங்குபெறுகின்றனர். பிள்ளைகள் வெளிநாட்டில் பணிபுரியும் பிள்ளைகளாகவே அதிகம் உள்ளனர். யாரும் இழிவுபடுத்தப்படுவதில்லை. ஆண் பெண் புரிதல் நிறைந்த கதைகளாக உள்ளன. அவர்கள் சண்டையிடுவதில்லை. துடைத்துப் போட்டுவிட்டுப்போகும் நிலைக்கும் உட்கார்ந்து ஒப்பாரி வைத்துக் கதறும் நிலைக்கும் இடைப்பட்டதே அம்பையின் கதைக்களன்கள். அவை உறுதுயர் உயிர்களுக்கு உரியது.

நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய தவளைக் கதைகள். இது பெரும்பாலும் குடிபெயர்ந்தோருக்கான வாழ்வியல். புலம்பெயர்வுகளும் நிறைய குடிபெயர்வுகளும் நடக்கின்றன. மொழி, இனம், பண்பாடு என எல்லாவற்றையும் ஒரு கோழி பறப்பதுபோல் பறந்து தாண்டி(அமைதியாக நடந்து டக்கெனப் பறந்து) மனித வலிகளைக் கடத்துகிறது. அஃறிணைகளைக் குறிப்பிடுகையில் அதிலும் ஒரு குறியீட்டுப் பொருள் இருக்கிறது. மென்மையான வாழ்வுகளை நகர்த்துகின்றன. அழுக்குப்படாத உலகத்தின் கதைகளாக உள்ளன. ஆனால் உழைப்பவர்கள் உள்ளனர். இசை மிகுந்து ஒலிக்கிறது. அங்கங்கே, ஆளாளுக்குப் பாட்டுகளில் நினைவுறுகின்றனர். இசை, இலக்கியம், கவிதை, புராணம் முதலியவற்றின் அறிவும் அம்பையை வாசிக்கத் துணைநிற்கும். புன்னகை நெகிழ்கிறது, ரசிப்பு இருக்கிறது, கடலில் எழும் சூரியனை ஆரஞ்சுச் சிரிப்பு எனப் பார்த்து மகிழ முடிகிறது. கொக்கு கொத்தியெடுப்பது போல துயரத்தின் நாடியைக் கொத்தி எடுத்துக் கதை வெளிக்கு வைக்கிறார்.

எழுத்து அதாவது மொழி நடை என்பது நத்தை நகர்வது போன்றும் இல்லை, முயல் ஓடுவது போன்றும் இல்லை. அது ஆமையின் ஓட்டத்தைப் போன்றது. கதைத்தன்மைக்கேற்ப மொழியும் மெதுவாக, மிருதுவாக இருக்கிறது. தத்துவம், இயற்பியல், வாழ்வியல் வரலாற்று ஆவணம் என வரும்போது அதற்கேற்ப மொழிநடையிலே பேசப்படுகிறது. சில இடங்களில் கதைத் தன்மையைக் கடந்து உரைநடையாகிறது. இன்னொரு பண்பாட்டுப் புலத்திற்குரியது என்பதை நன்கு உணர்ந்தறியும்படியான இக்கதைகள் இந்தியக் கதைகள், தமிழகக் கதைகள் என்பவற்றிற்குரிய வேறுபாட்டை நன்கு வாசகருக்குக் கற்றுத்தருகிறது. அம்பையிடம் சில சொற்பயன்பாடுகள் கவனிக்கத்தக்கவை. அவை நுழைகதவு, வாயில்மணி, உலக்கைக்குரல், பெருஞ்சூறை உள்ளிட்டவை. ஒரு கதையை எப்படி அமைக்கவேண்டும் என்பதில் தெளிவான முற்சிந்தனை, திட்டமிடல் இருக்கிறது.

மும்பையில் 1988இல் பெண்கள் ஆவணக் காப்பகமான SPARROW (Sound Picture Archives for Research on Women) எனும் அமைப்பை நிறுவி இன்றுவரை இயக்கி வருகின்ற அம்பை, ‘இருள் ஆள்கிறது; தூங்கு என் தேவதையே..’ எனும் கவிதையைப் படித்திருந்த கவிஞராக வேண்டிய அம்பை, பிழைப்பு நடத்தப் போராடும் ‘குதிரைக்காரி’ முதல் மானுட சமூகத்தின் குறிப்பிடத்தகுந்த, மனக்கண்முன் வந்திராத வலிகளைத் தாயுள்ளத்தோடு தடவிப் பார்க்கும் அம்பை எனும் அம்மையின் கதைகளைக் கொண்ட இந்நூல் காலச்சுவடு பதிப்பகத்தால் 2019இல் வெளியிடப்பட்டுள்ளது.

சாகித்திய அகாதெமி விருது என்பது படைப்புக்கா? படைப்பாளிக்கா? என்றொரு வினாவை வீசினாலும் இரு கருத்துக்கும் அம்பை தகுதியாக நிற்கிறார். அதனால்தான் இம்முறை விருது அறிவிப்பிற்குப் பிறகு எவ்வித எதிர்வினைகளும் எழவில்லை. இவ்விருது எழுத்துலக இறக்கை விரித்ததில் அம்பைக்கு ஒரு சன்னல் இளைப்பாறுதலாக இருக்கும்; நமக்கும்தான். ●

மதிப்புரை

# உள்ளங் கையில் உலகம்

ச.சுபாஷ் சந்திரபோஸ்

அண்மையில் வெளி வந்த ஒரு படைப்பிலக்கியத்தைப் படிக்கும் போது, ‘எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் - இளைப்பில்லை காணென்று கும்மியடி’ என்னும் மகாகவியின் பாடல் அடிகளே நினைவிற்கு வந்தன.

‘கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகியது’ என்றொரு சொலவச்சொல் இருக்கின்றது. இது கழுதையையும் கட்டெறும்பையும் ஒப்பிடவில்லை. பெருமை மிக்க ஒன்றாக இருந்தது இந்த அளவுக்குக் குறைந்துவிட்டதே என இயற்கை வளம், நாட்டின் நிலை, மக்களின் நிலை என எல்லாவற்றையும் குறிக்கும்.

சங்க காலத்தில் பல பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. இடைக்காலத்தில் பெண்கல்வி என்ன ஆனது என்றே தெரியவில்லை. அருமருந்து போல ஆண்டாளும் காரைக்கால் அம்மையாரும் மட்டும் தெரிகின்றனர்.

ஆண், பெண் என்னும் வேறுபாடு இல்லாமல் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பே மறுக்கப்பட்டன. இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று உழைக்கும் மக்கள் தங்கள் கருமமே கண்ணாக இருந்த காலத்தில் நாட்டை ஆண்ட அந்நியர்கள் கல்வி கற்கவும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தார்கள். அதுவும் எல்லோருக்கும் கிடைத்தது என்று கூற முடியாது இருப்பினும் மக்களிடையே ஒரு விழிப்புணர்வைக் கொடுத்தது.

நாடு விடுதலை பெற்ற பிறகு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தமிழகச் சூழலில் படிக்காத மேதை என்று போற்றப்படும் காமராசர் முதலமைச்சர் ஆனபிறகு பட்டி - தொட்டிகள் எங்கும் பள்ளிக்கூடங்கள் தோன்றின. கல்வி கற்போரின் எண்ணிக்கையும் வளர்ந்தது. தொடர்ந்து வந்த திராவிட ஆட்சிகளிலும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் பல்கிப் பெருகி உள்ளன.




அறுபது - எழுபது ஆண்டுகளுக்கு முன்னர்ப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண் பிள்ளைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். தற்போது பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் மகளிரையே அதிகமாகப் பார்க்க முடிகின்றது. பெண் கல்வியை வற்புறுத்திய முற்போக்குச் சிந்தனையாளர்களின் முகங்களை எல்லாம் அவர்கள் முகங்களில் பார்க்க முடிகின்றது.

மகாகவியின் பாடல் அடிகள் நினைவுக்கு வந்தமை போன்று அந்தப் படைப்பிலக்கியத்தைப் படிக்கும்போது, 'மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற - காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே' என்னும் பாவேந்தரின் பாடல் அடிகளும் நினைவிற்கு வந்தன.

'இதுவும் கடந்து போகும்' என்பது அந்தப் படைப்பிலக்கியத்தின் பெயர். கரோனாக் காலத்தில் அது பற்றி எழுதப்பட்ட படைப்பிலக்கியம். ஒரு புதினமும் ஆறு சிறுகதைகளும் நூலுள் அடங்கி உள்ளன. புதினம் அமெரிக்காவைக் கதைக் களமாகக் கொண்டுள்ளது. ஆறு சிறுகதைகளில் ஒன்று (மாற்றம்) நிறவெறியால் அமெரிக்காவில் நடந்த ஒரு கொடூரமான கொலை பற்றியது. மற்றைய சிறுகதைகளின் களம் இந்தியா, கரோனாவைப் பற்றியவை.

கரோனாத் தொற்றைப் பற்றி நிறையச் செய்திகள் ஊடகங்கள் வழி வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. கரோனாத் தொற்று முதல், இரண்டாம் அலைகள் வந்து ஓயப் போகும் நேரத்தில் மூன்றாவது அலையாகக் கரோனாவின் வளர்ச்சியாக ஓமைக்கிரான் பரவிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

கரோனாவின் தாயகம் சீனா என்றால் ஓமைக்கிரானின் தாயகம் ஆப்பிரிக்கா என்கின்றார்கள். தகவல் தொடர்பு வளர்ந்த பிறகு உள்ளங்கையில் உலகம் என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறோம். இவ்வாறே இந்தக் கரோனாத் தொற்றின் உள்ளங்கையில் உலகம் மாட்டிக் கொண்டு விழி பிதுங்குவது நன்றாகத் தெரிகின்றது.

கரோனாத் தொற்றுப் பரவியபோது நாட்டுச் சாயம், மதச் சாயம் எல்லாம் பூசிக்கொண்டு நோயைத் தடுக்க முயலாமையைப் படைப்பாளர் நெய்தலினி வேறுபாடு காட்டாமல் வெளிப்படுத்துகின்றார். கரோனாத் தொற்றுத் தோன்றிய சீனாவில் அதன் பரவல் வெகுவாகத் தடுக்கப்பட்டுவிட்டது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாகக் கரோனாத் தொற்றுப் பரவியதைப் படைப்பாளர் மிகவும் நேர்த்தியாக விளக்குகின்றார்.

கணினிப் பொறியாளரான படைப்பாளர் நெய்தலினி தன் பணியோடு கரோனாப் பரவலையும் மக்கள், ஆளும் வர்க்கங்களின் மனநிலையையும் புதினத்திலும் சிறுகதைகளிலும் படிமமாகக் காட்சிப் படுத்துகின்றார். எந்த இடத்திலும் கரோனாவைப் பற்றி விளக்கும் போது விருப்பு, வெறுப்பின்றி எழுதுகின்றார். அவரைப் பற்றி அதிகம் தெரிய வாய்ப்பில்லை என்றாலும் அவருடைய எழுத்துகள் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர் என்பதைக் காட்டிக் கொடுக்கின்றன.

எவ்வளவுதான் உள்ளங்கையின் உலகமாக வளர்ச்சி அடைந்தாலும் அறிவியல் வளர்ச்சியால் அண்டங்களை அளந்தாலும் உடும்பைப் போல மானுடத்தைப் பற்றிக் கொண்டுள்ள நிறவெறி மத வெறி, சாதி வெறி, மொழி வெறி போன்றவை அவ்வளவு எளிதில் நீங்கக் கூடியவை அல்ல. எனவேதான் படைப்பாளர் நெய்தலினி 'இதுவும் கடந்து போகும்' என்னும் புதினத்தின் கதை மாந்தர்களைப் புதுமையாகப் படைத்துக் காட்டுகின்றார்.

கரோனாக் காலப் பணியாளர் சிலரைத் தவிர, மற்றைய கதை மாந்தர்கள் கரோனாத் தொற்றால் இறந்து போனவர்கள். படைப்பாளர் நெய்தலினி அவர்களை நேர்த்தியாக விளக்கிச் செல்வதைப் படிக்கும் போது பிணம் என்று

எழுத எழுதுகோல் மறுக்கின்றது. வாழும்போது அவர்களிடம் சில குறைகள் இருந்தாலும் மரணம் அடைந்த பிறகு மனிதாபிமானத்தோடு சமுதாயத்தைப் பார்க்கின்றார்கள். வாழ்ந்த காலத்துப் பிற்போக்குத் தனங்களை எண்ணி வருத்தப்படுகின்றார்கள்.

உயிரோடு இருக்கும் போது அவர்களிடமிருந்து அவ்வளவு நகைச்சுவை வெளிப்பட்டிருக்காது. புதினம் முழுவதும் அவ்வளவு நகைச்சுவைகள் கொட்டிக் கிடக்கின்றன. அவ்வாறே அவர்களிடமிருந்து காய்தல், உவத்தல் இன்றிப் பொதுச் சிந்தனைகளும் வெளிப்படுகின்றன. வெறித்தனமான வலதுசாரிச் சிந்தனைகள் பெரும்பாலான உலக மக்களுக்கு உயிரோடு இருக்கும்போது விடுபட வாய்ப்பே இல்லை என்பதைப் படைப்பாளர் சொல்லாமல் சொல்லவில்லை; தெளிவாகவே சொல்கின்றார். கரோனா சமத்துவத்தை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு மாபெரும் சவக்குழி வழியும் இந்தியாவுக்குக் கங்கை வழியும் காட்டிப் பாடம் எடுத்து விட்டது. இருந்தாலும் மானுடம் திருந்தப் போவதில்லை என்பதையே ‘இதுவும் கடந்து போகும்’ என்னும் புதினத்து வழியும் ‘மாற்றம்’ என்னும் சிறுகதை வழியும் படைப்பாளர் நெய்தலினி வெளிப்படுத்துகின்றார்.

புதினத்தின் தொடக்கத்தில் கரோனாவால் இறந்த ஜார்ஜ் என்னும் கருப்பினத்தவரும் லூசி என்னும் வெள்ளை இனப் பெண்ணும் பிணவறையில் பேசிக் கொள்கிறார்கள். அதாவது இறந்த அவர்களின் உடல்கள் முழுமையாக மூடப்பட்டு நிற வேறுபாடு காட்டப்படாமல் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ‘நீங்க *white*-ஆ’ எனக் கருப்பின ஜார்ஜ் கேட்க, ‘நாம எல்லோருமே இப்ப *white*-தான்’ *(ப.43)* என லூசி சிரித்துக் கொண்டே கூறுகின்றார். சவப் பெட்டியில் அடைக்கப்பட்டு வெள்ளைத் துணியால் பெட்டி சுற்றப்பட்டுள்ளதை இப்படி நகைச் சுவையோடு லூசி குறிப்பிடுகின்றார்.

ஆண்களை விட மகளிர் சற்றுத் தூக்கலாக முற்போக்குச் சிந்தனை உள்ளவர்கள். நிறத்தாலும், இனத்தாலும் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் மகளிர் பலர் நிறத்தாலும், இனத்தாலும் இழிவாகக் கருதப்பட்ட ஆடவரை வாழ்க்கை இணையராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இப்படிப்பட்ட முற்போக்குச் சிந்தனையை ஆண்களிடம் அதிகமாகப் பார்க்க முடியாது. சான்றுக்குப் பூதக் கண்ணாடி கொண்டு தேட வேண்டியதில்லை. தற்போதைய அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் குடும்பமே சான்றாகும்.

இப்படிப்பட்ட முற்போக்குச் சிந்தனை லூசி என்னும் வெள்ளை இனப் பெண்ணிடமும் இருந்துள்ளது. கருப்பர் இன ஜார்ஜை இவர் விரும்பி உள்ளார். அவர் காதல் அந்த இளைஞருக்குத் தெரியாது. ஒருதலைக் காதலாகவே இருந்துள்ளது. இருவர் வாழ்க்கையும் வேறுவேறு திசையில் சென்றுவிட்டது. கரோனாத் தொற்று அவர்களின் உடலை ஒன்று சேர்த்துவிட்டது. ஜார்ஜின் கடந்த கால வாழ்க்கையை அறிந்த லூசி தன் ஒருதலைக் காதலரை நிஜ வாழ்வில் அறிந்து கொள்கிறார். வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. இருந்தாலும் இணைய முடியவில்லை. சவப் பெட்டியாக மறுபடியும் இணைந்து பிரிகின்றார்கள்.

படைப்பாளர் நெய்தலினி மிகவும் நேர்த்தியாகத் தன் முதல் படைப்பிலேயே கதையைச் செம்மையாக அமைத்துச் செல்கின்றார். கருப்பின ஜார்ஜ், வெள்ளை இன லூசி உரையாடல்வழிப் பல செய்திகளை அறிந்து கொள்ள முடிகின்றது. பிண அறையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சவப் பெட்டிகளைச் சவக் குழிக்கு ஏற்றிச் செல்லும் அடுக்கும் களப் பணியாளர்கள் உரையாடல் வழியும் கரோனாப் பாதிப்பு, மக்கள் நிலை, கரோனாவை ஆளும் வர்க்கம் எதிர் கொண்ட விதம் போன்ற பலவற்றையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

கரோனாத் தொற்றைக் கண்டறிவதிலும் குணப்படுத்துவதிலும் கூட இன - நிறப் பாகுபாட்டைக் காட்டியதையும் அதனால் தான் பிணவறைக்கு வந்ததையும் கருப்பின ஜார்ஜ் கூறும்போது எங்கும் இதே நிலைதானா என்று எண்ணத் தோன்றுகின்றது. ‘புதிய கரோனா வைரஸ் பாகுபாடு காட்டாது. ஆனால் பொது சுகாதாரத்தில் முன் வரிசையில் உள்ள மருத்துவர்கள், நோயைக் கையாள்வதில் இனப் பாகுபாட்டையும் வர்க்கப் பாகுபாட்டையும் காட்டுகின்றனர்’ *(ப.46)* இதற்காக வெள்ளை இன லூசி வருத்தப்படுகின்றார்.

சவப் பெட்டிகளைப் பிணவறையில் அடுக்கும் இருவரில் ஒருவர் அமெரிக்க அதிபருக்கு ஆதரவாகக் காணப்படுகின்றார். இன்னொருவர் கரோனாவை விரட்ட அதிபர் ட்ரம்ப் செய்யும் வேடிக்கைகளைக் குறிப்பிடுகின்றார். அதிபரும் அவர் ஆதரவாளரும் மூக்கையும் வாயையும் மூடவில்லை. உலகச் சுகாதார நிறுவனம் *(WHO)* கூறும் வழிமுறைகளை அவர் பின்பற்றாததோடு *Hydroxychloroquine* போட்டால் கரோனா வராது என்று பிரச்சாரம் செய்தார். இந்தியாவிலிருந்து கெடுபிடியாக மாத்திரைகளை வாங்கி அவையும் வீணாகப் போய் விட்டனவாம்.

புதினத்தில் இவற்றை எல்லாம் படிக்கும்போது நம் நாட்டிலும் அந்த நாட்டுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல், ஏன் சற்றுத் தூக்கலாகவே கரோனாவைத் துரத்தும் பணிகள் நடைபெற்றன. விளக்கேற்றுதல், கைத் தட்டுதல், கரோனாவே போய் விடு என்று வேள்வி இயற்றுதல், பசுவின் சிறுநீரைக் குடித்தல், சாணியை உடம்பில் தடவிக் கொள்ளுதல் போன்ற வைத்தியங்களும் செய்யப்பட்டன.

நல்லவேளை; மூன்று வேளாண் சட்டங்கள் போல இல்லாமல் உடனடியாக ஆளும் வர்க்கம் தன் மனதை மாற்றிக் கொண்டு அறிவியலையும் கொஞ்சம் கேட்டுக் கொண்டது. இல்லாவிட்டால் கங்கையில் பிணங்கள் மிதந்த நிலை மாறி, கங்கையே சவக் குழியாக மாறி இருக்கும். தில்லி முழுவதுமே மயானமாக மாறி இருக்கும்.

சமத்துவபுரம் என்பது போலச் சமத்துவ புதைகுழிக்கு எடுத்துச் செல்லுவதற்காக ஜார்ஜ், லூசி போன்றோர் அடைக்கப்பட்டுள்ள சவப்பெட்டிகளை எடுக்கப் பிணவறைக்கு அதிகாரிகள் வருகின்றார்கள். அவர்களின் உரையாடல் வழி வல்லரசு நாடாகக் கூறப்படும் அமெரிக்காவின் பல உண்மைத் தோற்றங்கள் வெளிப்படுகின்றன.

கரோனாத் தொற்று சீனாவின் வூஹான் என்னும் நகரிலிருந்து பரவியது உண்மைதான். அவர்கள் நோய் நாடி அதன் முதலையும் நாடி இறப்பு விகிதத்தைக் குறைத்து விட்டார்கள். ஓர் அதிகாரியின் பேச்சு அமெரிக்காவின் முகத்தைக் காட்டுகின்றது.

'இந்த நோய் என்ன அமெரிக்காவுலையா மொதல்ல வந்திச்சி? சீனாவுலதான மொதல்ல வந்திச்சி. அங்க அந்த மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாங்கன்னு பாத்தோமில்ல. எத்தன போர் செத்துப் போனாங்க. நமக்கு முழுசா மூணு மாதம் இருந்துச்சே சார். நம்ம மக்களப் பாதுகாக்க நமக்குக் கிடச்ச கோல்டன் பீரியட். நம்ம அரசாங்கம் சரியாய்ப் பயன்படுத்தி இருந்தா இவ்வளவு பேர் செத்திருப்பாங்களா?' நிக்கோலஸ்.

இந்தக் கருத்து அமெரிக்கா உட்பட இந்தியா போன்ற மற்ற நாடுகளுக்கும் பொருந்தும். இன்னொரு முக்கியமான செய்தி, இந்தியாவுக்கும் பொருந்துவதைப் படைப்பாளர் நெய்தலினி பதிவு செய்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த சில பெரும்பான்மை உழைக்கும் மக்களால் தீண்டத்தகாதவர்கள் இந்தக் கரோனாத் தொற்றுக்காலத்தில் தங்கள் முன்னோர் கட்டிக் காத்த சமூக இடைவெளியைப் பெருமையாக பேசிக் கொண்டார்கள். அவர்கள் முகத்திரையைக் கிழிப்பது போல பின்வரும் உரையாடலைப் பதிவு செய்துள்ள 'இதுவும் கடந்து போகும்' என்னும் நூலின் படைப்பாளரைப் பாராட்ட வேண்டும்.

'என்ன சார் நோய் பரவாமல் தடுக்கச் சமூக இடைவெளி தான் ஒரே வழின்னு சொல்றாங்க' என்று சிரித்தார் தியோடர்.

'தனிமனித இடைவெளின்னு சொல்லுங்க சார். அதுதான் கொரோனாவை பரவாமல் தடுக்கும். சமூக இடைவெளிதான் மனுஷனோட எல்லா கஷ்டங்களுக்கும் காரணம்' நிக்கோலஸ் (ப.80).

உழுவோரையும் உழுவிப்போரையும் ஒன்றாக இணைப்பவர்களால் சமூக இடைவெளியையும் தனிமனித இடைவெளியையும் ஒன்றாக்கிப் பார்க்க அதிகச் சிக்கல் இருக்காது. சமூக இடைவெளி விரும்பிகள் தாமாக மண்ணில் உழைத்துப் பார்க்க வேண்டும்; நெய்து பார்க்க வேண்டும், சாலைகளையும் கழிவறைகளையும் சுத்தம் செய்து பார்க்க வேண்டும்.

சமநீதியுடன் வாழச் சமூக நீதி - சமூக நெருக்கம் வேண்டும். கரோனாக் கட்டுப்பாட்டுக்குத் தனிமனித இடைவெளி வேண்டும். மிகவும் திறமைசாலிகளாக நினைத்துச் சமூக இடைவெளியையும், தனிமனித இடைவெளியையும், ஒப்பிட்டவர்களையும் நினைக்கும்போது, 'மோதி மிதித்து விடு பாப்பா-அவர்-முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா' என்னும் மகாகவியின் பாடல் அடிகளே நினைவிற்கு வந்தன.

இந்தியாவில் இருக்கும் வருணப் பாகுபாட்டையும் அமெரிக்காவில் இருக்கும் நிறவெறியையும் படைப்பாளர் நெய்தலினி ஒரே கல்லில் இரண்டு மாங்காயாக வீழ்த்துகின்றார்.

'இதுவும் கடந்து போகும்' என்னும் புதினத்தின் அடுத்த நிகழ்வு தொடர்கின்றது. நிஜ வாழ்க்கையில் இணைய முடியாத வெள்ளை இன லூசி, கருப்பின ஜார்ஜ் சவப்பெட்டிகள் பிரிக்கப்படுகின்றன. ஆதரவற்றோரை அடக்கம் செய்யும் மாபெரும் சவக்குழிக்கு ஜார்ஜின் சவப்பெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றது. அந்த இரு சவப் பெட்டிகளின் பிரிவு வேதனை புதினத்தைப் படிப்போரையும் மன வேதனைக்குள் ஆழ்த்தும்.

ஜார்ஜின் சவப்பெட்டி ஏற்றப்பட்ட வண்டியில் டியாகோ என்னும் ஆடவர் அடைக்கப்பட்ட சவப்பெட்டியும் ஹலிமா என்னும் பெண் அடைக்கப்பட்ட சவப்பெட்டியும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. லூசியின் பிரிவை நினைத்து அழும் ஜார்ஜைக் கிண்டல் செய்கின்றார்கள்.

கொம்பு மாடு முட்டி நுடம் ஆனவர்களை விட மொட்டை மாடு முட்டி நுடம் ஆனவர்களே அதிகம் எனக் கிராமங்களில் பேசிக் கொள்வார்கள். அப்படித்தான் இந்தக் கரோனாத் தொற்றின் பாதிப்பும் உலகம் முழுவதிலும் நிகழ்ந்துள்ளது.

கூலி வேலை செய்து பிழைத்தவர்கள், சிறு - குறு தொழில் செய்தவர்கள் என எல்லா நிலையிலும் வாழ்ந்த மக்களின் பொருளாதாரத்தைக் கரோனா புரட்டிப் போட்டுச் சின்னா பின்னமாகச் சிதைத்துவிட்டது. ஆனால் கார்பரேட் நிறுவனங்களின் வருமானம், அரசாங்கத்தின் ஜிஎஸ்டி வரி மட்டும் பல மடங்கு உயர்ந்ததாம்! படைப்பாளரும் இந்நிலையைப் பதிவு செய்துள்ளார்.

தொடர் சிகிச்சையில் இருந்த டியாகோ பொது முடக்கத்தால் சிகிச்சை பெற முடியாமல் இறந்து விட்டார். எப்படி இறந்தாலும் அவரையும் கரோனா

இறப்பாகவே கொள்ள வேண்டும் என ஹலிமா கிண்டல் செய்கிறார்.

இப்படி கதை பேசியபடியே எல்லாப் பேதங்களையும் மறக்கிறார்கள். ஏற்கனவே பத்து லட்சம் பேருக்கு மேல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அடுக்கி வைக்கின்றார்கள்.

இப்படிப் புதினத்தை முடிக்கும் நெய்தலினி கரோனாக் காலக் கொடுமைகள் மட்டுமல்லாமல் பல கூத்துகளையும் எதார்த்தமாகப் பதிவு செய்துள்ளார். மேலும் ஆறு சிறுகதைகளும் பின்னிணைப்பாக இடம் பெற்றுள்ளன. பெரும்பாலானவை கரோனாக் கால இந்தியாவைப் பற்றியவை.

கரோனா பரவியபோது திடீரென்று பொது முடக்கம் அறிவிக்கப்பட்டதால் உழைக்கும் மக்கள் அடைந்த இன்னலுக்கு அளவே இல்லை. 1744 கிலோ மீட்டர் நடந்து தன் ஊரில் உயிர் நீத்த பெண்ணின் கதையைப் படித்தபோது உள்ளம் உறைந்துவிட்டது.

ஆக்சிஜன் சிலிண்டர் கிடைக்காமல் இறந்தவர்கள், கரோனாவால் இறந்து மயானத்தில் எரிக்க இடம் இல்லாமல் கங்கையில் தூக்கி வீசப்பட்ட பிணங்கள், ஆன்மீகத்திற்கும் அறிவியலுக்கும் நடந்த போட்டி எனக் கரோனாக் கால உலகைப் படைப்பாளர் நெய்தலினி தெளிவாகவே காட்சிப்படுத்தி உள்ளார். சவுத் விஷன் பதிப்பகம் (2021) வெளியிட்டுள்ளது. அனைவரும் படிக்க வேண்டிய நூல் ஒப்பிலக்கிய ஆய்வு போல இருவேறு நாடு, சமுதாயத்தை ஒப்பிட்டு அறிய உதவும் அருமையான படைப்பு.

இப்படைப்புத் தொகுப்பிலுள்ள 'இதுவும் கடந்து போகும்' என்னும் புதினமும் ஆறு சிறுகதைகளும் கரோனாவைப் பற்றியவையாக இருந்தாலும் படைப்பாளர் நெய்தலினி பல அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளையும் இயல்பாகவே பதிவு செய்துள்ளார்.

இந்தக் கரோனாத் தொற்றுப் பல எதார்த்த உலக நிலையையும் வெளிப்படுத்தி உள்ளது. பெரும்பாலும் உடல் உழைப்பு இல்லாமல் கண்டவற்றையும் உண்டு மருந்து மாத்திரைகளுடன் வாழ்ந்த அமெரிக்கர்களையும் ஐரோப்பியர்களையுமே அதிகமாகக் கொன்று குவித்துள்ளது.

'எது எப்படி இருந்தாலும் இந்தக் கொரோனாத் தொற்று எல்லோருக்கும் பல படிப்பினைகள குடுத்திருக்கு. இராணுவத்துக்கே குடுக்குற முக்கியத்துவத்த விடப் பொது சுகாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் குடுக்கணும்னு தலையில அடிச்சி சொல்லி இருக்கு' (ப.134). படைப்பாளர் சொல்வது உண்மைதான். ஆனால் எல்லோருக்கும் படிப்பினை என்று சொல்ல முடியாது. இந்தக் கரோனாக் காலத்திலும் இராணுவத் தளவாடங்கள் வாங்க உலக நாடுகள் பல்லாயிரம் கோடிகளைச் செலவிட்டுள்ளன.

பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியன் போன்று நூற்றுக்கணக்கான இசைக் கலைஞர்கள் இந்தக் கரோனாத் தொற்றால் இறந்துள்ளார்கள். எல்லோரையும் விட மருத்துவம் பார்த்த மருத்துவர்கள், பணியாளர்களின் இறப்பு நெஞ்சை அதிகமாகக் கனக்க வைக்கின்றது.

இந்தக் கரோனாக் காலக் கொடுமைகளில் மிகவும் கொடியது ஜார்ஜ் பிளாய்டு என்னும் கருப்பினத் தோழரின் கொலை. ஆசிரியர் உரை (ப.16) புதினம் (பக்.142-143), சிறுகதை (பக்.167-174) எனப் பல இடங்களில் அந்தக் கொடூரக் கொலையை நெய்தலினி பதிவு செய்துள்ளார்.

'பிளாய்ட்ட குப்புறப் படுக்கப் போட்டு, கழுத்தில முட்டியால அழுத்தி இருக்காரு Chauvin-னு ஒரு வெள்ளை இன அதிகாரி. பாவம், பிளாய்ட I can't breathe; I can't breathe-னு' 20 தடவ சொல்லி இருக்காரு. ஒன்பது நிமிஷத்துக்கும் மேல அழுத்தினா என்னாகும்? பாவம், அந்த எடத்திலேயே பிளாய்ட் செத்துட்டாரு' (ப.143).

வருணம், நிறம், சாதி, மதம், மொழி போன்றவையே இப்படிப்பட்ட வன்கொடுமைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. அண்மையில் ஜெய்பீம் என்னும் சூரியாவின் திரைப்படம் ஏற்படுத்திய அதிர்வலை நினைவுக்கு வருகின்றது. இதில் ஒரு கூத்து என்னவென்றால் படத்தை வரவேற்க வேண்டியவர்களே சாதி வெறி பிடித்துத் தூற்றுகின்றார்கள்.

ஒரு அநீதி நடந்தால் அது மானுடத்திற்கு எதிரானதா என்று பார்க்க வேண்டும். இடது சாரிச் சிந்தனை உள்ளவர்கள் தான் எதிர்க்க வேண்டும் என்பதில்லை. ஒரு ஆறுதல் தரும் செய்தி என்னவென்றால் Black lives Matter எனப் பாதகை தாங்கிய பேரணியில் நிற வேறுபாடு இல்லாமல் மக்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

இன்னொன்றையும் படைப்பாளர் நெய்தலினி பதிவு செய்துள்ளார். பெரும்பாலும் கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள், பொருளைப் பதுக்குபவர்கள், இயற்கை வளங்களைப் கொள்ளை அடிக்கும் பெரும் முதலாளிகள், வங்கிகளில் மோசடி செய்பவர்கள், கடத்தல்காரர்கள் எந்த வருணத்தவர், எந்த நிறத்தவர் என்பதைப் பட்டியலிட்டுப் பார்க்க வேண்டும். ஆனால் எல்லாவற்றுக்கும் Black என்பதே அடைமொழியாக வருகின்றது.

'மனுஷங்களும் அவங்களோட உரிமைகள அரசியல் கட்சிங்ககிட்டையும் கட்சிகள பின்னால இருந்து இயக்குற பெரிய மொதலாளிங்ககிட்டையும் பறிகொடுத்துட்டு, வறுமையில் வாழுறாங்க.

*Black mail, Black money, Black list, Black market.* இதமாதிரி எல்லா சட்ட விரோதமான விஷயங்களையும் கருப்பு நிறத்தோட சேர்த்து அடையாளப் படுத்தினதோடப் பின்னணியும் இதுதா எமிலி' (ப.169).

சநாதனத்தை விரும்பும் இந்தியாவில் வாழும் ஆரியரும் செவ்விந்தியரைக் கொன்று குவித்து அமெரிக்காவைக் கட்டமைத்து நிறவெறி கொண்டுள்ள இந்தோ - ஐரோப்பியரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே - பங்காளிகளே - ஐரோப்பியர்களே. அவர்களிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

கல்வியும் வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டால் எந்த நாட்டு மக்களையும் மூக்கணங்கயிறு குத்தி, காயடித்த காளையைப் போல ஒரு பூண்டில் கட்டிப் போடலாம். எத்தனை நாளாக இருந்தாலும் தன் வலிமை தெரியாமல் அந்தக் காளை அப்படியே நிற்கும். உலகக் குத்துச் சண்டை வீரர் முகமது அலியின் மொழியை ஊடகவியலாளர் மருதன் பதிவு செய்துள்ளதை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

'நீங்கள் எவ்வளவு உயரமாக வளர்ந்து நின்றாலும் எவ்வளவு பலமிக்கவராக இருந்தாலும் வீழ்ந்துதான் ஆக வேண்டும். ஏனென்றால் உங்கள் விளையாட்டு பிழையானது. சட்டத்துக்கு விரோதமானது. மனிதத் தன்மையற்றது, (இந்து - தமிழ், 22.12.2021, ப.9).

வருணம், நிற வேறுபாட்டைக் காட்டி விளிம்பு நிலையில் வீழ்த்தப்பட்ட மக்கள் போதைக்கும் பாலியல் வன்கொடுமைக்கும் உலகம் முழுவதிலும் உட்படுத்தப்படுகின்றார்கள். பதின்பருவத்தில் சிறுமிகள் கருவுறுகின்றார்கள். இப்படிப்பட்ட உலகம் முழுவதும் நடக்கக் கூடிய கொடுமைகளை எல்லாம் படைப்பாளர் நெய்தலினி புதினத்திலும் சிறுகதைகளிலும் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றார்.

அமெரிக்க அதிபராக இருந்த டிரம்ப் கரோனாவுக்குச் சீனா வைரஸ் என்று பெயரை வைத்தது புதியதன்று. பதினான்காம் நூற்றாண்டில் பிளேக் நோய் பரவியபோது யூத மக்களால் ஏற்பட்டது என்று அவர்களைக் கொன்றதை படைப்பாளர் பதிவு செய்துள்ளார் (ப.31). இந்தியாவில் முதலலை பரவியபோது தப்லீக் ஜமாத் இயக்கத்தின் மீது பழியைப் போட்டார்கள். ஆனால் கங்கையில் பிணங்கள் மிகுந்தமைக்குக் கும்பமேளாவில் லட்சக் கணக்கானோர் கூடிய கூட்டமே காரணம் என்பதை மறந்து விடுகின்றார்கள்.

இதுவும் கடந்து போகும் என்னும் படைப்பு போலச் சில வெளிவந்துள்ளன. இன்னும் நிறைய படைப்புகளும் ஆய்வுகளும் விரைவில் வெளிவரும். கரோனாவால் உலகம் முழுவதிலும் மக்கள் பட்ட இன்னல்களை அறிந்து கொள்ளலாம்.

நூல் பற்றிப் பல சான்றோர்கள் கருத்துரை வழங்கி உள்ளார்கள். ச.தமிழ்ச்செல்வன் பொருள் பொதிந்த கருத்துகள் நிறைந்த அணிந்துரை அளித்துள்ளார். படைப்பாளரிடம் முதுமை தெரியாவிட்டாலும் படைப்பில் முதிர்ச்சி தெரிகின்றது.

தனக்கு முற்போக்குச் சிந்தனைகளை ஊட்டிய பொதுவுடைமையாளர்கள், இந்தியச் சாதி வெறியை ஒழிக்கப் போராடிய அண்ணல் அம்பேத்கர், ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா, அமெரிக்காவில் போராடிய மார்ட்டின் லூதர்கிங் போன்றோரும் படைப்புகளில் இடம் பெறுகின்றார்கள்.

'மொத்தமா மூணுபேர ஒருத்தர் மேல ஒருத்தரா சீட்டுக் கட்டு மாதிரி சேத்துப் படுக்க வச்சிருக்காங்க. இங்க வரதுக்கு முன்னாடி நீ தாழ்வு, நான் உயர்வுன்னு எத்தன மமதையா சுத்தி இருப்போம். மதம், நிறம், வர்க்கம், அழகுன்னு எத்தன விதமா பிரிஞ்சி வாழ்ந்திருப்போம்? இப்ப எங்க போச்சி அந்தத் திமிரெல்லாம்? இவ்வளவு தா சார் மனுஷனோட வாழ்க்க. உயிரோட இருக்குற வரைக்கும் இது புரியாம ஆடுறோம்'(ப.24).

எதார்த்தமான இந்த உரையாடல் கருத்தைப் படிக்கும்போது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல் அடிகளே நினைவிற்கு வந்தன. 'சித்தர்களும் யோகிகளும் - சிந்தனையில் ஞானிகளும் - புத்தரோடு ஏசுவும் - உத்தமர் காந்தியும் - எத்தனையோ உண்மைகளை - எழுதி எழுதி வச்சாங்க - எல்லாந்தான் படிச்சீங்க - என்ன பண்ணிக் கிழிச்சீங்க?'

'ஒரு நாள் என்னுடைய நான்கு சிறு குழந்தைகளும் தோலின் நிறத்தினால் அல்லாமல் அவர்களுடைய பண்பினால் மதிக்கப்படுகின்றன சமத்துவம் நிறைந்த நாட்டில் வாழ்வார்கள் என்று எனக்கொரு கனவுண்டு'(ப.150) என்னும் மார்ட்டின் லூதர் கிங் மொழியைப் படிக்கும் போது அவரது கனவுக்குள் காலங் காலமாகக் கருப்பின மக்கள் பட்ட வேதனைகள் எல்லாம் வெளிப்படுகின்றன. நாகரிகம் பற்றிப் பேசும் வெள்ளைத் தோல்கள் உலகம் முழுவதும் பரவி அநாகரிகமாகத்தான் பிற இன மக்களை நடத்துகின்றன.

காலங்காலமாக இந்த உலகம் எத்தனையோ போர்களைக் கண்டிருக்கின்றது. இரண்டு போர்களுக்கு உள்ளங்கையில் உலகமாக இருந்துள்ளது. நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு உலகின் சுற்றுச் சூழல் கெட்டுள்ளது. அதற்கான பின்விளைவுகள் எதிர்காலத்தில் கண்டிப்பாகக் கிடைக்கும். கரோனாவைப் போலவே எதிர்காலத்தில் வரும் இயற்கைச் சீற்றங்களும் நோய்களும் வருணம், நிறம், சாதி, மதம், நாடு, மொழி போன்றவற்றைப் பார்க்கப்போவதில்லை. கரோனா - 'இதுவும் கடந்து போகும்'. படைப்பாளர் நெய்தலினிக்கு மீண்டும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

■